மாலைமதி
வார இதழ்

மாலைமதி

19-1-2018



செம்மை!

புத்தம் புதிய நாவல்

எழுத்துச் சித்தர்

பாலகுமாரன்

மாலைமதி

சென்னை- 600 010.

மாலைமதி

ஜனவரி 19, 2018

மதி : 1 மாலை 16

வாராவாரம் புத்தம் புதிய நாவல்

உள்ளே...

செம்மை	5
கிச்சன் கார்னர்	58
பாம்பு	100
தத்துவம் மச்சி	110
புதிர் போட்டி	112

குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண். 151, புதிய எண்.800, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. சேர்மன் - நிர்வாக இயக்குநர் மற்றும் அச்சிட்டு வெளியிடுபவர் : பா. வரதராசன். ஆசிரியர்: பா.வரதராசன்

Printed & Published by Chairman - Managing Director Mr.P.Varadarajan, on behalf of M/s.Kumudam Publications Private Limited and Printed at and Published from M/s.Kumudam Publication Private Limited, New No.306, Purasawalkam High Road, Chennai- 600 010. Editor: P.Varadarajan

5

செம்மை!

①

அந்த வனப்பகுதியின் நடுவே இருந்த புல் திட்டில் அந்த ஐந்து பேரும் திரௌபதியோடு அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ணர் கொடுத்த பாத்திரத்திலிருந்து பால் சோறும், தேனும், காஷ்மீரப் பழங்களும், பப்பாளியும், மாதுளையும் பக்குவப்பட்டே வந்தன. கத்தி எடுத்து கீறல் போட வேண்டிய அவசியம் கூட இல்லாமல் பழங்கள் வந்தன. அள்ளி அள்ளி திரௌபதி எடுத்து தாமரை இலையில் வைக்க, அதை நிதானமாக வயிறு நிறைய உண்டார்கள். பீமனுக்கு கூடுதலான பங்கு கிடைத்தது. மற்றவர்கள் எல்லோரும் முடித்து விட அவன் நின்று நிதானமாக கொஞ்சம் வெட்கத்தோடு சாப்பிட்டான். வெட்கப்பட வேண்டாம் என்று அத்தனை சகோதரர்களும் சொல்லி அவனை வெட்கப்பட வைத்தார்கள். ஆனாலும் வெட்கப்பட்டு அவன் எழுந்திருக்கவும் இல்லை. திரௌபதி எழுந்திருக்கவும் விடமாட்டாள். அவள் கையில் அந்த பாத்திரம் தயாராக இருந்தது.

6

பழங்கள் சாப்பிட்டு முடிந்ததும், 'இன்னும் என்ன வேண்டும்' என்று கேட்டாள். 'இன்னும் கொஞ்சம் பால் சாதமும், மோரும் கொடு' என்று பீமன் கேட்டான். இது முதலிலிருந்து ஆரம்பிக்கும் வகை. அர்ஜுனன் கொஞ்சம் திரும்பிப் பார்த்தான். ஆனால் திரும்பிப் பார்த்தால் பீமன் சங்கடப்படுவானோ என்று சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆனால் சகாதேவன் மட்டும் இந்த விஷயத்தை விடுவதாக இல்லை.

"எனக்கென்னமோ கிருஷ்ணர் இந்த பாத்திரத்தைக் கொடுத்தது உனக்காகத்தான் என்று தோன்றுகிறது. எனவே, இந்த பாத்திரத்தை முழுவதுமாக உபயோகப்படுத்திக் கொள். சிறிதும் தயங்காதே" என்று சொல்லிவிட்டு கை அலம்பப் போனான்.



அவரவர்கள் எழுந்து கை கழுவி முகம் துடைத்து நெஞ்சை ஈரமாக்கிக் கொண்டு, ஈரக் கையை தலையில் தடவி முகத்தில் தடவிக் கொண்டு வந்தார்கள். சாப்பிட்ட கையை முகத்தில் தடவினால் முகம் பொலிவுற்று இருக்கும். அந்த சூட்டில் முகம் பிரகாசமாகும். இது எல்லா குடும்பிகளும் செய்வது.

பீமன் பலமுறை வாய் கொப்பளித்தான். பல் இடுக்குகளில் உள்ள எல்லா பருக்கைகளையும் கொப்பளித்து நீக்கினான்.

1

அர்ஜுனன் சுண்டு விரலில் சுற்றியிருந்த நூலால் பல் இடுக்குகளை சுத்தம் செய்தான். வாய் கொப்பளித்தான். நறுமணத்திற்காக இனிப்புக் காய்களைத் தின்றான். நகுலன் துளசி இலைகளை தேடிப் போனான். அவைகளை அலசி மெல்லும்போது வாய் சுத்தமாகி விடுகிறது. ஆனால் சகாதேவன் வேப்பமரம் ஏறினான். கொழுந்துகளை பறித்தான். கீழே கொண்டு வந்தான். கல் மீது கல் வைத்து நசுக்கினான். விழுதாக்கினான். பற்கள் முழுவதும் விரலால் தேய்த்தான். பிறகு கொப்பளித்தான். வேப்பங்கொழுந்து சாறு பற்கள் இடையில் புகுந்தது. சுத்தம் செய்தது. கிருமிகளை அகற்றியது. பற்கள் பளிச்சிட்டன. ஒரு கசப்பு பரவியது. ஆனால் அது ஆரோக்கியமாக இருந்தது.

பீமன் தள்ளாடி எழுந்திருந்து மெல்லிய மிருதுவான ஆலங்குச்சிகளை தேடிப் போனான். வாய் சுத்தம் செய்ததும் பஞ்ச பாண்டவர்கள் அவரவர் இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். புருஷர்களுக்கு முதுகு காண்பித்து திரௌபதி அமர்ந்து கொண்டாள். பால் சாதமும், கூடுதலான தேனும் வரவழைத்தாள். வறுத்த பருப்புகளை சாப்பிட்டாள். அடடே, இதை கேட்காது போய்விட்டோமே என்று பீமன் நினைத்துக் கொண்டான்.

பீமனை எண்ணி மட்டும் இந்த பாத்திரம் கிருஷ்ணன் கொடுக்கவில்லை. வாய்க்கு ருசியாக இந்த திரௌபதி சாப்பிட ஆசைப்படுகிறாள். குறைவாக சாப்பிட்டாலும் ருசியாக சாப்பிடுகிறாள். அவள் ருசி கெட்டுப் போய்விடக் கூடாது என்று அவளுக்காகவும் இந்த பாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சகாதேவன் நினைத்துக் கொண்டான்.

"இன்று செய்வதற்கு வேறு ஏதேனும் முக்கியமான காரியங்கள் இருக்கின்றனவா?" தருமபுத்திரர் கேட்டார்.

சகாதேவனுக்கு சிரிப்பு வந்தது. பேசாமல் இருந்தான்.

பீமன் மிகப் பணிவோடு 'எதுவும் இல்லை அண்ணா' என்று பதில் சொன்னான்.

8

பல நாட்களாக இந்த வனத்தில் உண்பதும் , உறங்குவதுமாகத்தான் இருக்கிறார்கள். முக்கியமாக எந்த காரியமும் இல்லை. அரச குடும்பத்தைச் சார்ந்த இவர் எந்த காரியமும் இல்லாமல், எந்த் பரபரப்பும் இல்லாமல், எந்தவித ஓட்டமும் இல்லாமல் அக்கடா என்று கிடப்பது இவர்களாகத்தான் இருக்க முடியும். சாதாரண அதிகாரிகள் கூட தொடை தட்டிக்கொண்டு இடதும் வலதும் நகருகையில் இந்த அரச குமாரர்கள் வாழ்வின் உச்சகட்ட அமைதியை அனுபவித்தார்கள். உடம்பு அயர்ந்திருந்தது. ஆனால் அவர்களுக்குள் மனம் துள்ளிக் கொண்டிருந்தது.

தருமபுத்திரர் மேலே பட்டு சால்வையோடு, கையில் சிறு தடியோடு அரசவைக்குள் நுழைந்தார். காலில் வீரக்கழல். கைகளில் மோதிரங்கள். கழுத்தில் தங்கத்தில் கோர்த்த ருத்ராட்ச மாலை. காதில் தங்க வளையம். முத்து மாலைகள். பவழ மாலை ஒன்று. இடுப்பில் இறுகக் கட்டிய பட்டுத்துணி. நெஞ்சில் சந்தனப்பூச்சு. நெற்றியில் திலகம். அழகாக வாரப்பட்ட சிகை. அளவாக நறுக்கப்பட்ட தாடி, மீசை. அடர்த்தியான புருவம். அவர் உயரமாய் நடந்து வரும்போது சபை எழுந்து நின்றது.

அவர் அஸ்தினாபுரத்து அரசனாக சபைக்குள் நுழைந்தார். சபை கை கூப்பிற்று. சகலரையும் திரும்பிப் பார்த்த வண்ணம் கை கூப்பலுக்கு எந்த பதிலும் சொல்லாது அவர் படி ஏறினார். மெல்ல திரும்பினார். சிம்மாசனம் பின்னால் இருந்தது. சபை குனிந்து வணங்கியது. அவர் கை உயர்த்தினார். அவர் கை உயர்த்த அந்த ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டது போல மறுபடியும் சபை இடுப்பு வளைத்து குனிந்து வணங்கியது. அந்தணர்களும், முனிவர்களும் கூட கை கூப்பி வணங்கினார்கள். மாற்றரசர்கள் குனிந்து வணங்கினார்கள். படைத் தளபதிகள் நன்கு குனிந்தார்கள். ஜனங்கள் சிலர் குனிந்து தரையைத் தொட்டார்கள். அவர் மெல்ல பின்னடைந்து தன் இருக்கையில் அமர்ந்து கொண்டார். அருகே இருந்த மெய்க்காவலர், 'சரியாக அமர்ந்து கொண்டீர்களா' என்று அவரை கண்களால் விசாரித்தார். 'சரி' என்று அவர் தலையசைத்தார். அவர் திரும்ப சபையைப் பார்த்தார். சபை மெல்லிய சலசலப்போடு தங்கள் ஆசனங்களில் அமர்ந்தது. அந்த

10

சலசலப்பு வெகு சீக்கிரம் ஓய்ந்தது. கடும் அமைதி பரவியது.

"அஸ்தினாபுரத்து அரசர் தருமபுத்திரரின் புகழைப் பாட பாணர்கள் வந்திருக்கிறார்கள். அந்த பாணர்கள் வரட்டும். அந்த பாணர் குழுவைச் சேர்ந்த பெண்கள் நடனமாடட்டும். எல்லோரும் அமைதியாக அரசரின் புகழை அனுபவிப்போம்" என்று கட்டியக்காரன் சொல்ல, வெளியே இருந்த பாணர்கள் வாத்தியங்களுடன் ஓடிவந்தார்கள். கால் சதங்கை குலுங்க பெண்கள் ஓடிவந்தார்கள். அரசருக்கு வந்தனம் சொன்னார்கள். தருமபுத்திரர் 'சரி' என்று தலையசைத்தார். எல்லோருக்கும் கை கூப்பி வணக்கம் சொல்லிவிட முடியுமா? அந்தணர்களுக்கு வணக்கம் சொல்லலாம். சபைக்கு கை உயர்த்தலாம். பாணர்களுக்கு... தலையசைத்தால் போதும்.

பாணர்கள் வரிசையானார்கள். மிருதங்கமும், குழலும், துளைவாத்தியமும், நரம்பு வாத்தியமும் வேறொரு பக்கம் வரிசைகட்டி

மகன்: "அப்பா, சின்ன வீடுன்னா என்னப்பா?"

அப்பா: "ஏன் கேட்கிறே?"

மகன்: "தெரிஞ்சு வச்சுக்கலாம்னு தான்ப்பா!"

அப்பா: "தெரியாம வச்சுக்கிட்டாத்தான்டா அது சின்ன வீடு!"



11

நின்றார்கள். பெண்கள் இடுப்பில் கை வைத்து தயாராக இருந்தார்கள். கைத்தாளம் தட்டப்பட்டது. மிருதங்கம் முழங்கிற்று. குழல் குழைந்து எழுந்தது. வீணை துடிக்கத் துவங்கியது. தத்தோம் தகிட தகிட தத்தோம் என்று பெண்கள் இடதும், வலதும் இடுப்பும், இடுப்பும் மார்பும் ஆட்டி நடனம் செய்தார்கள். கண்மணி போல மன்னவனே விண்ணவனே என்னவனே என்றெல்லாம் பாடல்கள் முழங்கின. பெண்கள் துள்ளி ஆடினார்கள். சிங்காசனத்திற்கு அருகே வந்தும் தங்கள் நெகிழ்வைக் காண்பித்தார்கள். இன்னும் நெருங்கிவிடக் கூடாது என்று மெய்க்காவலர்கள் தங்கள் ஈட்டியின் அடிப்பாகத்தை குறுக்கே வைத்தார்கள். ஓரளவிற்கு மேல் வரவேண்டாம் என்பதாக அந்த எச்சரிக்கை. அது தருமருக்குப் பிடித்திருந்தது. எல்லா வளமும் பெற்று இந்த கங்கை நதி தீரம் வாழட்டும் என்று பாடல்கள் பாடி முடிக்க, அந்தணர்கள் எழுந்தார்கள். உரத்த குரலில் மாறி மாறி அரசரை வாழ்த்தினார்கள். 'தீர்காயுஷ்மான் பவ' என்றார்கள். 'திடசாலியாக இரு' என்றார்கள். 'எல்லோருக்கும் நல்லவனாக இரு' என்றார்கள். 'இரக்கமுள்ளவனாக இரு' என்று கட்டளையிட்டார்கள். 'கடவுள் எப்பொழுதும் உன் பக்கம்' என்று ஆசீர்வதித்தார்கள். தருமபுத்திரர் கை கூப்பினார்.

பாணர்களுக்கு ஒரு தட்டு நிறைய பொன் கொண்டு போய் கொடுக்கப்பட்டது. பாணர்களுடைய தலைவன் வரும்போது தருமபுத்திரர் குனிந்து, ''எந்த ஊர்?'' என்று கேட்டார். ''அஸ்தினாபுரத்தின் தெற்கு எல்லையில் இருக்கின்ற ஊர்'' என்று சொன்னான். "நீர் நிலைகள் நிரம்பியிருக்கின்றனவா?" என்று கேட்க, அவன் உதடு துடித்து இந்தக் கேள்வியின் கருணை தாங்க முடியாமல் காலில் விழுந்து வணங்கி, "உங்களுடைய கருணையால் எல்லாம் நிரம்பியிருக்கிறது. ஜனங்கள் சௌக்கியமாக இருக்கிறார்கள்?" என்று சொன்னான்.

அரசனுடைய கருணையா, கடவுள் கருணையா? ஆனால் அரசன் என்பவன் விஷ்ணுவினுடைய அம்சம். அவனுடைய கருணையாகத்தான் அது சொல்லப்படும்.

12

தருமபுத்திரர் அந்தத் தட்டின் மீது கை வைக்க, அந்தத் தட்டு அவனுக்கு தரப்பட்டது. பாணன் வாங்கிக் கொண்டான். அந்தப் பெண்களும், நாட்டியக்காரர்களும் துள்ளிக் குதித்தார்கள். "மன்னன் வாழ்க!" என்று சொல்லி கரகோஷம் எழுப்பினார்கள். இப்போது வேறு பக்கம் திரும்பினார்.

பத்து சிறிய தட்டுகள். பத்து தட்டிலும் பொற்காசுகள். அந்த பொற்காசுகளை ஒரு பெரும் தட்டில் எடுத்துக் கொண்டு வந்தார்கள். இரண்டு பேர் கொண்டு வந்து நிற்க, அந்தத் தட்டு அவருக்கு எதிரே நீட்டப்பட்டது. அவர் தன் இரண்டு கையையும் வைத்து தண்ணீர் ஊற்றிக் கொண்டார். "கொண்டு போ" என்று கையசைத்தார். வேலையாட்கள் அவைகளை அந்தணர்களிடம் எடுத்துப் போனார்கள். அந்தணர்கள் உட்கார்ந்தது போல ஒரு பாவனை செய்து அந்தத் தட்டிலிருந்து அவர்களாக எடுத்துக் கொண்டார்கள். அந்தணர்களுக்கு பொற்காசுகள் வழங்கப்படவில்லை. மாறாக எடுத்துக் கொள்ளச் சொல்லப்பட்டது. அது ஒரு பெரிய மரியாதை. மற்றவர்களுக்கெல்லாம் வழங்குகிறபோது அந்தணர்களுக்கு பொற்காசுகள் வழங்கப்பட மாட்டாது. சன்மானம் அல்ல. சம்பாவனை.

வேதகோஷம் முடிந்த பிறகு மாற்றரசர்கள் எழுந்து நின்றார்கள். தங்கள் எல்லைப் பிரச்சனைகளையும், படை வீரர்கள் பிரச்சனைகளையும், பொருளாதார பிரச்சனைகளையும், விலங்குகள் உபத்தரவத்தால் நேர்ந்த பிரச்சனைகளையும் அவரிடம் விளக்கினார்கள். அவை எல்லாமுமே ஒற்றர்கள் மூலம் தருமபுத்திரருக்குத் தெரிந்திருந்தன. பொற்காசுகள் இருந்தால் இந்த பிரச்சனை சரி செய்து விடலாமல்லவா என்று கேட்க, அவர்கள் ஆம் என்று தலையசைத்தார்கள். அவர் ஓலை எழுதுபவனை நோக்கித் திரும்பினார்.

மந்திர ஓலை நாயகம் முன்வந்தார். அவரிடம் இன்னின்னாருக்கு இவ்வளவு மூட்டைகள் பொற்காசுகள் பண்டாரத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று நிதானமாகச் சொன்னார். மந்திர ஓலை எழுதிக் கொண்டார். தருமர் தன் முத்திரை மோதிரத்தை மெல்ல துணியால் நீவி அந்த ஓலை நறுக்கில் அழுந்த வைத்து மெல்லக்

13

கீறினார். அவருடைய அடையாளம் அங்கு தெளிவாய் விழுந்தது. கிண்ணத்திலிருந்து மை எடுத்து அதன் மீது தடவ, முத்திரை இன்னும் தெளிவாகத் தெரிந்தது. ஓலைகளை மாற்றரசர்கள் வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டு பின்னடைந்தார்கள்.

வனத்திலிருந்து வயல்களுக்கு காட்டுப் பன்றிகள் வருவதாக சொல்லப்பட்டது.

“வரக்கூடாதே! ஏன் வருகிறது? காட்டிலுள்ள வேடர்கள் ஏன் கவனம் இல்லாது இருக்கிறார்கள்? அவர்களுடைய வேலையல்லவா?”

அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை என்று சொல்லப்பட்டது.

“சரி, அப்பொழுது படைவீரர்களை அனுப்புகிறேன். அந்த படைவீரர்களும் முடியாது தோற்றுப் போனால் அர்ஜுனன் அல்லது பீமன் உங்களுக்கு துணை வருவார்கள். ஒருநாளும் கவலைப்பட வேண்டாம் . நாங்கள் இருக்க உங்களுக்கு எந்த சேதாரமும் வராது!” என்று சொல்ல, பொதுஜனங்கள் விழுந்து வணங்கினார்கள்.

“வேறு ஏதேனும் வேண்டுமா?” என்று கேட்டபோது, குடிஜனங்கள் வெட்கத்தோடு சிரித்தார்கள்.

“எப்பொழுது வந்தாலும் வழக்கம் போல ஏதாவது கொடுப்பீர்கள்!” என்று ஒருவன் சொல்ல, என்ன என்று யோசித்தார்.

மெய்க்காவல் படையினர் துணிமணிகள் கேட்கிறார்கள் என்று சொல்ல, தருமபுத்திரர் சிரித்தார். கையசைத்தார். வேறொரு அதிகாரி முன்வந்து,

“இவர்கள் கேட்பார்கள் என்று தெரியும், எனவே மூட்டை துணிமணிகள் மூன்று கிராமத்திற்கு போதுமானவை எடுத்து வைத்திருக்கிறேன். அவை வண்டிகளில் ஏற்றப்பட்டு விட்டன. ஒரு மரியாதைக்கு வந்த மூன்று தலைவர்களுக்கு நீங்கள் இந்த சால்வைகளை

போர்த்தி விடுங்கள்!" என்று சொல்ல, மடித்து வைத்திருந்த அந்த சால்வைகள் அவர்கள் கரங்களில் போடப்பட்டன. அவர்கள் வாங்கி நெஞ்சோடு வைத்துக் கொண்டார்கள்.

பெரிய புன்னகையோடு தருமபுத்திரர் பின்னால் சாய்ந்து கொண்டார். அப்படி சாய்ந்தபோது முதுகு உறுத்தியது. என்ன என்று பார்த்தார். இரண்டு, மூன்று எறும்புகள் அவர் முதுகில் ஊர்ந்தன. அவர் எழுந்து நின்று தன்னுடைய துண்டால் முதுகில் உள்ள எறும்புகளை துடைத்து விட்டார். மறுபடியும் புல்மேட்டில் சாய்ந்து கொண்டார். தொடர்ந்து கனவு காணலானார்.

அது கனவுதான். தினசரி அவர் காணும் கனவு. என்றேனும் ஒருநாள் அஸ்தினாபுரத்திற்கு அவர் மன்னனாக போய்விட முடியாதா, துரியோதனாதிகள் அடிக்கப்பட்டு அவர் ஆட்சி செய்ய முடியாதா என்று உள்ளுக்குள்ளே தாபம் பொங்கிற்று. ஆட்சி செய்தே பழக்கப்பட்டதால் அந்த குணம் அவரைவிட்டுப் போக மறுத்தது. அரசாங்க விஷயங்களிலேயே ஈடுபட்டதால் வேறு எந்த கனவும் வர மறுத்தது. பெண்களோடு கூடுதல் என்பதோ, போர்க்களத்தில் புகுதல் என்பதோ, யானைகளை , குதிரைகளை அடக்குதல் என்பதோ அவருக்கு வரவில்லை. எப்பொழுதும் சபை வந்தது. சபையில் அவர் அரசாட்சி செய்வது வந்தது.

அதைத் தவிர வேறு ஒரு கனவும் அவருக்கு வருவது உண்டு. ஆனால் அதை வேண்டாம் என்று அவர் முயற்சி செய்வார். ஆனாலும் முண்டிக் கொண்டு வரும்.

அவர் காதுகளில் வெண்கல பாய்ச்சிகளின் உருளும் சத்தம் கேட்டது. கட்டாந்தரையில் வெண்கல பாய்ச்சுகள் உருண்டன. சப்தமெழ உருண்டன. எதிரே காய்கள் நகர்ந்தன. வெட்டுக்கு இரண்டாம் ஆட்டம், இரண்டாம் ஆட்டம் தாயம். தாயத்திற்கு மறு ஆட்டம் எட்டு. எட்டுக்கு மறு ஆட்டம் நாலு. ஒருகால் வீடு சேர்ந்தது. எனவே, வீடு சேர்ந்ததால் இன்னொரு ஆட்டம் உண்டு. அவர் பாய்ச்சிகைகளை சந்தோஷமாக உருட்டினார். காய்கள் மடமடவென்று நகர்த்தினார்.

15

மனசுக்குள் சூதாடினார். அவரால் சூதாடாமல் இருக்க முடியவில்லை. இன்னும் ஆழ அழுந்த புல்மேட்டில் சாய்ந்து கொண்டார். கனவு காணத் துவங்கினார்.

உண்ட பிறகு வேறு என்ன வேலை இருக்கிறது. கனவு காணுதலைத் தவிர. அதுவும் அரசாட்சி செய்கின்ற கனவு காணுதல் தவிர. அதற்கு மேல் சூதாடுதலைத் தவிர அவருக்கு மிகவும் பிடித்தமான இந்த விஷயங்களே பகல் கனவுகளாக படையெடுத்து வந்தன. அவரை சுகத்தில் தள்ளின.

“துரியோதினாதிகளை தண்ணீரில் வைத்து அழுத்துவீர்களாமே? அதுவும் துச்சாதனன்தான் வெல்லக் கட்டியாமே? வாரி தூக்கி ஓடுகின்ற தண்ணீரில் போட்டு விடுவீர்களாமே. அலறிக் கொண்டு ஓடுபவனை நீங்கள்தான் காப்பாற்றுவீர்களாம். மற்றவர்களெல்லாம் கரையோரம் ஓடுவார்களாம். எதற்காக அப்படிச் செய்வீர்கள். அதுவும் துச்சாதனனை மட்டும் ஏன் இப்படிச் செய்தீர்கள்?”

“ஏன் செய்தேன் என்று தெரியவில்லை திரௌபதி. ஆனால் இந்த துச்சாதனனை பார்க்கும் போதெல்லாம் எனக்கு அவனை தண்டிக்க வேண்டும் என்று தோன்றும். நான் அப்படி தூக்கிப் போட்டதால் நமக்கு தீமை செய்தானா? அல்லது இவன் தீமை செய்வான் என்று நினைத்து நான் தூக்கிப் போட்டேனா? எனக்குப் புரியவில்லை. ஆனால் துச்சாதனன் கருவி. வெறும் அம்பு. எய்தவன் துரியோதனன்.”

“நீங்கள் சொல்வது தவறு பீமசேனரே!”

“ஏன் ஏன்? என்ன தவறு?”

“எய்தது துரியோதனன் அல்ல!”

“பிறகு?”

“கர்ணன்!”

“ஏன் அப்படிச் சொல்கிறாய்?”

16

“கர்ணனுடைய பார்வை என்மீது கூர்மையாக இருக்கும். துரியோதனனுடைய பார்வை சகோதரர்களின் மனைவி என்றிருக்கும். இவருக்கு மனைவி என்று ஒரு கேலி இருக்கும். ஆனால் கர்ணன் பார்வை வேறு.”

“என்ன சொல்கிறாய்?”

“அவ்வளவுதான் சொல்ல முடியும்!”

“சரியாகச் சொல். எனக்குப் புரியவில்லை அல்லவா.”

“உங்களுக்கு எது எப்பொழுது புரிந்தது?”

“எடுத்தவுடனேயே இப்படி இழிவாக பேச ஆரம்பிக்காதே. சரியாகச் சொல். என்ன கர்ணன் பார்வையில் தவறு?”

“அவனுக்கு நான் வேண்டும்!”

“சொன்னானா?”

“சொல்ல வேண்டுமா?”

“பிறகு?”

“கண்கள் பேசவில்லையா?”

“என்ன பேசும் கண்கள்?”

“உற்று கவனிக்கும்!”

“எதை?”

“எல்லா இடங்களையும்!”

“உண்மையாகவா?”

“இதைப் போய் ஒருத்தி பொய் சொல்வாளா?”

"இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?"

"அதெல்லாம் ஒன்றும் இருக்காது. அவன் நல்லவன் என்று நீங்கள் பல் தெரிய என்னிடம் சொல்வீர்கள். அந்தக் கண்றாவியை நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதால்தான் சொல்லவில்லை!"

"இப்பொழுது ஏன் சொல்கிறாய்?"

"அந்த கர்ணனை அடித்து நசுக்க வேண்டும். கொல்ல வேண்டும். இத்தனைக்கும் காரணம் அவனே என்பது என் எண்ணம்!"

பீமசேனன் பல் கடித்தான். எடுப்பார் கைப்பிள்ளை. அதுவும் திரௌபதிக்கு அவன் செல்லப்பிள்ளை.

"ஆனால் திரௌபதி கர்ணனை நான் கொல்ல முடியாது!"

"ஏன்?"

"அர்ஜுனன் கொல்வதாக சபதம் செய்திருக்கிறான். நான் துரியோதனன் தொடையை பிளப்பேன். பிளந்து ரத்தம் எடுத்து உன் கூந்தலில் தடவுவேன்!"

"யார் கொன்றால் என்ன, கௌரவர்கள் சாக வேண்டும். என்னால் மறக்கவே முடியவில்லை. நடு சபையில் மூன்றாம் நாள் உதிரம் பட்டுக் கொண்டுதான் இருந்தது, அப்பொழுது தலைமுடியைப் பிடித்து தரதரவென்று தரையோடு இழுத்துக் கொண்டு வந்தானே துச்சாதனன், அத்தனை பேரும் சிரித்தார்களே. அவர்கள் எல்லோரையும் கொல்ல வேண்டும்!"

"கௌரவர்களை மட்டும்தானே சொல்கிறாய்?"

"வேறு யாரை தவிர்க்கப் பார்க்கிறீர்கள்?"

"இல்லை. துரோணர், பீஷ்மர் போன்றவர்களை..."

"இல்லை. அவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான்.

வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் அல்லவா பீஷ்மர? அவர் மரணம் அடைய வேண்டும். துடிதுடித்து சாக வேண்டும். என் துடிதுடிப்பை செவி வழியாக கேட்டுக் கொண்டிருந்தார்அல்லவா? அவர் கண்கள் மூடி செவிகள் திறந்து உடம்பு முழுவதும் உபாதை இருக்க வேண்டும்!"

"எவ்வளவு கோபம் உனக்கு திரௌபதி?"

"அவஸ்தைப்பட்டவள் நான். நீங்களல்ல!"

"இல்லை. நாங்களும் பட்டோம். நீ நேரிடையாக பட்டாய். நாங்கள் உன்னால் தாக்கப்பட்டோம். நீ பட்ட அவமானத்தை நாங்கள் நெஞ்சில் ஏற்றுக்கொண்டு அவஸ்தைப்பட்டோம். அடிக்க முடியாதபடி அவஸ்தைப்பட்டோம். நீ அபலை. அவன் இழுக்கும் போது எதிர்க்க முடியாதபடி சுருண்டு விழத்தான் முடியும். ஆனால் எங்கள் இடம் வேறு. குறிப்பாய் என் இடம் வேறு!"

"என்னது உன் இடம். என்ன குறைந்து விட்டது அங்கே?"

"என்னால் அடித்து நொறுக்க முடியும். துரியோதன் கழுத்தை நெறித்துக் கொல்ல முடியும். இரண்டே அறையில் கர்ணனை வேறு உலகிற்கு அனுப்ப முடியும். துச்சாதனனை சுவரோடு அழுத்த முடியும். ஆனால் கூடாது என்று தருமபுத்திரர் சொல்லி விட்டார். எனவே, என் வலிவு முழுவதையும் அடக்கிக் கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தேன். தருமபுத்திரரை சரி போ என்று சொல்லி நான் எழுந்திருந்தால் இன்று நிலைமை வேறு!"

"செய்திருக்க வேண்டியதுதானே. ஏன் செய்யவில்லை?"

"அண்ணனை மீறி பழக்கம் இல்லை!"

"பொண்டாட்டியை அவமானப்படுத்தும் போதும் அண்ணன் முக்கியமா?"

"ஆமாம்."

19

"உன்னைக் கொன்றிருந்தால் கூட அண்ணன் சொன்னாலொழிய நான் முஷ்டியை மடக்கியிருக்க மாட்டேன்."

"நல்ல அண்ணன். நல்ல தம்பி. உங்களுக்கு வந்து நான் வாழ்க்கைப் பட்டது தவறு!"

"அப்படி சொல்லாதே திரௌபதி. எல்லாவற்றிக்கும் ஒரு மிகப் பெரிய காரணம் இருக்கிறது என்று தருமர் சொல்கிறார். அவர் சொல்வது சரியாகத்தான் இருக்கும். அடி என்றால் அடித்து நொறுக்க என்னால் முடியும். ஆனால் ஆராய்ந்து பார்த்து எது சரி, எது தவறு என்று சொல்வதற்கு அவருக்குத்தான் தெரியும். நானும், அர்ஜுனனும் வேகம் உள்ளவர்கள். அவர் விவேகம் உள்ளவா!."

"மிகப் பெரிய விவேகி என்பதால்தான் மனைவியை வைத்து சூதாடினாரா!"

"அது தவறு. உன்னை வைத்து சூதாடி இருக்கக் கூடாது!"

"நம்ப பையன் என்னவாக ஆகணும்னு ஆசைப்படுறீங்க?"

"அவன் என்ன வேணும்னாலும் ஆகட்டும்... யாருக்கும் புருஷனா மட்டும் ஆகக்கூடாது... நான் பட்ட கஷ்டம் என்னோட போகட்டும்!"

20

" அப்பொழுதாவது தடுத்திருக்கலாமே?"

"அண்ணனைத் தடுக்க எங்களுக்கு சொல்லித்தரவில்லை!"

"அப்படியானால் உங்கள் வளர்ப்பு தவறு!"

"அப்படியும் சொல்லிக் கொள்ளலாம்!"

"அதாவது குந்தி தவறு?"

"அப்படியும் சொல்லிக் கொள்ளலாம்!"

"குந்தியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வந்திருந்தால் நீங்களெல்லாம் துடிதுடித்து இருப்பீர்களா?"

"இல்லை. அப்பொழுதும் அண்ணன் சொல்வதைத்தான் நான் எதிர்பார்த்திருப்பேன். ஆனால் குந்தியை யாரும் தொடமாட்டார்கள். நீ சொன்ன காரணம்தான்!"

"என்ன நான் காரணம் சொல்லிவிட்டேன்?"

"குந்தியின் மீது ஆசையாக எவரும் பார்வை வைக்க மாட்டார்கள். ஆனால் உன்மீது கர்ணன் பார்வை வைத்தான் என்று சொன்னாயே, அது அங்கு நடந்திருக்காதல்லவா. அப்பொழுது சபையில் இழுத்து வருவதும் நிகழ்ந்திருக்காதல்லவா?"

"ஆக, ஒரு மனைவி அழகாக இருந்து அவள் தரதரவென்று இழுத்து வரப்பட்டால் அது நல்ல விஷயம் உங்களுக்கு அல்லவா?"

"அப்படி அல்ல. இது குந்திக்கு நேர்ந்திருக்காது. உனக்கு நேர்ந்தது. காரணம், கர்ணனாகக்கூட இருக்கலாம்!"

"எவ்வளவு சாதாரணமாக கர்ணனாகக் கூட இருக்கலாம் என்று சொல்லி விட்டீர்கள். ஏன் கோபம் வரவில்லை?"

"என் கோபம் துரியோதனன் மீது. துரியோதனனை நினைக்கும்

போது எனக்கு ஆத்திரம் வருகிறது. கர்ணன் எனக்கு வெறும் பூச்சியாகத் தெரிகிறான். மேலும் அர்ஜுனன் எப்போது தன்னுடைய எதிரி என்று கொண்டானோ அப்பொழுது எனக்கு அங்கு வேலை இல்லை. அர்ஜுனன் கையால் அவன் மரணமடைவதுதான் நல்லது!"

"ஆனால் கர்ணனுக்கு மரணமில்லை என்று சொல்கிறார்கள்!"

" அப்படி யாரும் பிறக்கவில்லை!"

" கர்ணனிடம் சூரியனுடைய பாதுகாப்பு கவசங்கள் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த கவச குண்டலங்கள் இருக்கும் வரை அவனுக்கு மரணமில்லை என்று சொல்கிறார்கள். அவனிடம் அற்புதமான ஆயுதங்கள் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அர்ஜுனனை அவன் எதிர்க்கவில்லையே தவிர, அர்ஜுனனை அவன் கேலி செய்தான். அர்ஜுனனுக்கு இணையாக யாரும் இல்லை என்பது பொய்த்துப் போயிற்று. இனி கோபம்தான் பாக்கி. ஒரு கோபத்தோடு அதில் ஈடுபடுகிறபோது அந்த நிகரான பலம் தாக்குகின்ற பலமாக, கொல்லுகின்ற பலமாக மாறும். கர்ணனுக்கு அர்ஜுனன் மீது தீராத பகை இருக்கிறது!"

"எதனால்?"

"ஒரு ஆச்சாரியருடைய தனிப்பட்ட கவனத்தைப் பெற்ற மாணவன் என்பதால்!"

"உங்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்ததை விட துரோணர் அர்ஜுனனுக்கு அதிகம் சொல்லிக் கொடுத்தாரா?"

"ஆமாம். நல்ல மாணவன் என்றால் எந்த ஆசிரியருக்கும் ஒரு விருப்பம் இருக்கத்தானே செய்யும்?"

"அப்படியானால் கர்ணனுக்கு ஏன் இதில் பொறாமை வருகிறது. உங்களுக்கு ஏன் வரவில்லை?"

"அர்ஜுனன் எனக்கு சகோதரன். அவன் முதல் மாணவனாக

திகழ்வதில் எனக்குப் பெருமை. அர்ஜுனன் அவனுடைய எதிரி. முதல் மாணவனாக பெறுவதில் அவனுக்கு வெறுப்புதான் அதிகம். அதையும் தாண்டி தான் ஒரு தேரோட்டியின் மகன், அர்ஜுனன் அரசிளங்குமாரன் என்கிற ஜாதி வித்தியாசமெல்லாம் உண்டு. அதனால்தான் அவன் துரியோதனனுடைய இடத்திற்குப் போய் சேர்ந்தான்."

"அர்ஜுனன் நம்மோடு இல்லாவிட்டால் கர்ணன் நம்மோடு சேர்ந்திருப்பான். அப்பொழுது அசைக்க முடியாத ஒரு பலம் நமக்கு கிடைத்திருக்கும்."

"கர்ணன் நம்மோடா, பஞ்சபாண்டவர்களில் ஒருவராகவா?"

"ஆமாம். அர்ஜுனன் இல்லாது போனால் கர்ணன் வந்திருப்பான்."

23

"ஹா.. கேட்கவே நன்றாக இருக்கிறது. ஏன், திடீரென்று கர்ணன் மீது கோபம் குறைந்து வேறு விதமாக பேசுகிறாய்?"

"இல்லை. அத்தனை வலிவுள்ளவன் நம்மோடு சேர்ந்தால் நாம் ஜெயிப்பது நிச்சயம்தானே?"

"அவ்விதமாக பேசுகிறாயா. அல்லது வேறு விதமாகவா?"

"நீங்கள் என்னை சந்தேகப்படுகிறீர்கள்?"

"இல்லை. கர்ணன் மீது உனக்கு ஒரு அன்பு உண்டோ என்று நினைக்கிறேன்!"

"இருக்கிறது என்றால் என்ன செய்வீர்கள்?"

"வேறு என்ன செய்ய முடியும்? நீ அக்னியில் பிறந்தவள். துருபதனின் மகள். உன்னை என்ன செய்ய முடியும். அதுவும் தவிர, ஒரு பெண் இன்னார் மீது ஆசை வைக்க முடிவு செய்து விட்டேன் என்றால் வெறுமே கேட்டுக் கொண்டுதான் இருக்க முடியுமே தவிர, எகிற முடியாது. எகிறினால்..."

"எகிறினால்...?"

"இன்னும் அந்த ஆசை அதிகமாகும். மறுத்தால் மறுபடியும் அதிகமாகப் போகும்!"

"அதனால் சரியென்று விட்டுவிடுவீர்களா?"

"தலையெழுத்து என்று நகர்ந்து விடுவேன்!"

"இது நல்ல தலையெழுத்தா, கெட்ட தலையெழுத்தா?"

"இந்த நேரம், இந்த ஷணம் இது அல்பத்தனமான தலையெழுத்து. எதிரியினுடைய சினேகிதனை நாம் எப்படி நேசிக்க முடியும். கர்ணனை நேசிக்கிறாய் என்று தெரிந்தாலே அர்ஜுனனுக்கு பாதி வேகம் குறைந்து விடும். கர்ணன் அதனாலேயே அர்ஜுனனை கொல்வான்!"

“இல்லை இல்லை. அர்ஜுனன் கொல்லப்படக் கூடாது. கர்ணன் அழிய வேண்டும். இன்றைய அத்தனை காரியங்களுக்கும் அவன்தான் காரணம். அவன்தான் முன்னோடி. துச்சாதனனை அனுப்பியதும், துரியோதனனை கிளறி விட்டதும், சகுனியை ஆடவிட்டதும் அந்த அயோக்கியன்தான் என்பது என் எண்ணம்.”

“இது யூகமா, அல்லது ஏதேனும் செய்தியா..?”

“இது யூகம்தான். எனக்குள் தோன்றுகிறது. அவன் கண்களைப் பார்த்தால் கபடம் உள்ளவன் என்று தோன்றுகிறது!”

“பிடித்திருக்கிறது என்று சொல்கிறாய். கபடம் என்றும் சொல்கிறாய்! நீ குழப்பத்தில் இருக்கிறாயா?”

“உண்மையில் ஆமாம். அவனைப் பார்க்க இத்தனை ஒரு பலமா, இத்தனை வீரமா என்ற எண்ணம் இருக்கிறது. அதே சமயத்தில் தவறான இடத்தில் சேர்ந்திருக்கிறானே என்ற ஒரு கோபமும் இருக்கிறது!”

“உன்னை வேறு விதமாகப் பார்க்கிறான் என்று சொன்னது..?”

“என்ன செய்வது. எத்தனையோ ஆண்கள் எத்தனையோ விதமாக பார்த்துதான் இருக்கிறார்கள். வழியிலே போன ஒரு மன்னன் வலிந்து உள்ளே புகுந்து ‘வாடி’ என்று கூப்பிடவில்லையா? அப்படியானால் கர்ணன் கூப்பிட்டதில் என்ன தவறு இருக்க முடியும்!”

“ஓ... கர்ணனை மன்னித்து விட்டாயா?”

“ உளறாதீர்கள்! என் கேள்வி வேறு!”

“என்ன கேள்வி?”

“இத்தனை வலிவுமிக்க சகோதரர்கள். அந்த வலிவுமிக்க சகோதரர்களுக்கு ஒரே மனைவி நான். அப்படி இருக்கும்போது, என் நிலைமை காட்டிற்குள் புல் பிடுங்கி உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். கிருஷ்ணர் கொடுத்த உணவை உண்டு கொண்டிருக்கிறேன். இங்கே

அந்த கிருஷ்ணர் இல்லாவிட்டால் என் நிலைமை என்ன? எனக்கு இன்னொரு கேள்வியும் வருகிறது."

"ஹா... எந்தக் கேள்வியானாலும் கேட்டுத் தொலை. நமக்கென்ன. மேலே வானம் கீழே பூமி. நிழலாக மரங்கள். படுத்துக் கொள்ள புல் தரை. கேள்!"

"என்ன அலுத்துக் கொள்கிறீர்கள்?"

"அலுத்துக் கொள்ளவில்லை. கேள். இன்றைக்கு பொழுது போக வேண்டும் அல்லவா?"

"மீண்டும் அலுத்துக் கொள்கிறீர்கள்!"

"இல்லவே இல்லை. கேள். உன் மனதில் என்ன இருக்கிறது?"

"உங்களுக்கு ஆளுக்கு ஒரு மனைவி இருந்து, அந்த மனைவிகள் பட்டமகிஷிகளாக இருந்தால், நான் தருமருக்கு மட்டும் வாழ்க்கைப்பட்டால் அல்லது உங்களுக்கு மட்டும் வாழ்க்கைப் பட்டால் என்னுடைய நிலைமை என்ன? மற்ற நான்கு பெண்களோடும் போராடவே எனக்கு சரியாக இருக்கும். இந்த ஆண்கள் நான்கு பேரோடும் வனம் வந்திருப்போமா?"

"வந்திருக்க மாட்டோம். அப்பொழுது உன்னையும் அரண்மனையிலேயே கிட என்று சொல்லிவிட்டுத்தான் ஆனந்தமாக வந்திருப்போம்!"

"ஏன் நான் இருப்பது உங்களுக்கு என்ன தொந்தரவு?"

"அடிக்கடி ஞாபகம் வருகிறது."

"எது?"

"உன் தலைமுடியை பிடித்து இழுத்துக் கொண்டு வந்தது. நீ நிற்கும்போது, நடக்கும் போது, உணவு பரிமாறுகிறபோது, உண்ணுகிற போது, உறங்கும்போது எல்லா நேரங்களிலும் நீ எதிரே நின்று

இடையறாது இடையறாது மிகப் பெரிய போருக்கான தூண்டுதலாகவே நீ இருந்திருக்கிறாய். ஐவருக்கு ஒருத்தியாக நீ மாறியதும் அந்த ஒருத்தியை நாங்கள் வனத்திற்கு அழைத்து வந்ததும் , பாரதப் போர் நடத்துவதற்குத்தான் என்று தோன்றுகிறது. துரியோதனாதிகளை கொல்வதற்காகத்தான் என்று தோன்றுகிறது. ஷத்திரிய வம்சத்தை, ஷத்திரிய வம்சமே அழித்து ஒழிக்க வேண்டும் என்பதுதான் காரணமாக எனக்குப் படுகிறது."

"அடடா, அருமையாக யோசிக்கிறீர்கள்!"

"கேலியா?"

"இல்லை."

ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி பேசியதும் மரத்திலிருந்து ஒரு பச்சை இலை மெல்ல விடுபட்டு வந்து அவள் தலையில் அமர்ந்தது. பீமன் அதை மெல்லத் தடவி நீக்கினான். கீழே தள்ளினான்.

அவன் தொடலில் அந்த

அக்கறையில் பாஞ்சாலி மனம் கனிந்தாள்.

"தருமர் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. பாதி நேரம் அவர் கண் சொருகிக் கிடக்கிறார். அர்ஜுனன் பாதி நேரம் ஆயுதங்களை நேசிக்கிறான். இல்லையென்றால் அழகான பெண்கள் பக்கம் ஓடி விடுகிறான். நகுலனுக்கு மனசெல்லாம் குதிரைகள். கையிலே சாட்டை. என்னைத் தொட வேண்டுமென்றாலும் கூட அவனுக்கு சாட்டைதான் வீச முடியுமோ என்னவோ. என்னை கட்டி அணைப்பதைவிட சாட்டையால் முதுகில் அடிப்பது அவனுக்கு விருப்பமான விஷயமாக இருக்கலாம்!"

பீமன் வாய்விட்டு சிரித்தான்.

"சகாதேவன்?" என்று கேட்டான்.

"இன்றுவரை எனக்கு லவலேசமும் புரியாத ஒரு மனிதன் உண்டென்றால் அது சகாதேவன்தான். இது உள்ளுக்குள்ளே என்ன நினைத்துக் கொண்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஏதோ நான்கு பேரோடு ஐந்தாவது ஆளாக சேரட்டும் என்று இருக்கிறதே தவிர, இவனுக்கு தனியாக எந்தவித அந்தஸ்தும் கொடுக்க எனக்குத் தெரியவில்லை. என்மீது, அல்லது உங்கள் மீது, அல்லது உலகத்தில் எவர் மீதும் காதலே இல்லாத ஒரு ஜென்மம் இருக்குமென்றால் அது சகாதேவனாகத்தான் இருக்க முடியும்."

"அடியே.. எவ்வளவு பெரிய அபாண்டம் சொல்கிறாய்! அவன் தருமருக்கு ஒன்று என்றால் துடித்து விடுவானே!"

"நடிக்கிறாரோ என்று எனக்குத் தோன்றுகிறது!"

"சகாதேவனையா நடிப்பு என்று சொல்கிறாய்?"

"எனக்கு அப்படித் தோன்றுகிறது என்று சொல்கிறேன்."

"ஆனால் சகாதேவன் என்றால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மிகவும் பிடிக்கும், தெரியுமா?"

28

பீமன் சொல்ல, ஒரு இலை மரத்தின் உச்சியிலிருந்து நகர்ந்து வந்து அவன் தலையில் படிந்தது. திரௌபதி மெல்ல அதை தடவி விட்டாள். நீக்கினாள். பீமன் அதில் நெஞ்சம் குளிர்ந்தான்.

"ஆமாம். மக்கு மண்ணாந்தைகள் என்றால் ஸ்ரீகிருஷ்ணருக்கு பிடிக்கத்தான் செய்யும். ஆயர்பாடி இடையர்களைப் போல ஒன்றுமே அறியாது வாய் பிளந்து கொண்டிருந்தால் ஸ்ரீகிருஷ்ணருக்கு பரமானந்தம் தான். யாராவது குறுக்கு கேள்வி கேட்டாலோ அல்லது வேறு விஷயத்தில் லயித்திருந்தாலோ அவருக்குப் பிடிக்காது."

"உன்னையும் அவருக்குப் பிடிக்கும்தானே?" பீமன் அப்பாவியாய் கேட்டான்.

"நான் ஒரு பகடைக்காய். அதனால் பிடிக்கும்!"

"என்ன சொல்கிறாய்?"

"சகுனிக்கு கையில் இருக்கின்ற பகடைக்காய்கள் பிடிக்கவில்லையா, அதேபோல ஸ்ரீகிருஷ்ணர் கையில் ஒரு பகடைக்காய் இருக்கிறது. அதற்குப் பெயர் திரௌபதி!"

"நீ அதிகமாகப் பேசுகிறாய்!"

"இல்லவே இல்லை. என்னை முன்னிறுத்தி , என்னை அசிங்கப்படுத்தி, என்னை ஆபாச களஞ்சியமாக்கி, உங்களையெல்லாம் ஆடவிட்டு அவர் மிகப் பெரிய நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்!."

"இதைத்தான் எல்லோரும் விதம் விதமாகச் சொல்கிறார்கள். நீயும் அதைத்தான் சொல்கிறாய்!"

"அதனால்தான் சொல்கிறேன். உண்மையில் ஸ்ரீகிருஷ்ணருக்கு நம்மீது, என்மீது அக்கறையே இல்லை. அன்பே இல்லை!"

"வேண்டாம். இவ்வளவு பெரிய வார்த்தை சொல்லாதே!"

29

"என்மீது உண்மையான அக்கறை இருப்பவர் இந்த உலகத்தில் ஒரே ஒருவர்தான்."

"யாரது?"

"பீமசேன மகாராஜா!"

அவன் வெகுளியாய் சிரித்தான். அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

ஒரு புருஷனுக்கு தான் நேசிப்பது தன் மனைவிக்குப் பிடித்திருக்கிறது என்று சொன்னால், புரிந்து விட்டது என்று சொன்னால் அவன் இன்னும் வெகுளியாகி விடுகிறான். அன்பு என்பது வெகுளித்தனம் நிறைந்தது. அந்த வெகுளித்தனம் பாராட்டப்படும்போது மேலும் வெகுளித்தனம் வந்துவிடுகிறது. இயல்பாகவே பீமன் போன்ற வெகுளிகள் இன்னும் வெகுளியாகி விடுகிறார்கள். இந்த வித்தை திரௌபதி போன்ற கெட்டிக்கார பெண்களுக்குத்தான் தெரியும்!

"பீமசேனரே!"

"சொல் திரௌபதி!"

"இந்த மலையில் இந்தப் பகுதியில் சௌகந்திகா மலர் இருக்காதா?"

பீமன் திகைத்தான்.

"இந்த இடத்தில் சௌகந்திகா மலரா? அது இமயமலைச் சாரலில் அல்லவா இருக்கும்!"

"இங்கு இருக்கவே இருக்காதா.?"

அவன் கூர்ந்து திரௌபதியை கவனித்தான்.

"இருக்கலாம்" என்றான்.

30

"அப்படியென்றால் ஏன் உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள். போய் இந்தப் பக்கம் இருக்கிறதா என்று பார்த்து வாருங்களேன்."

அவன் அப்பாவியாய் எழுந்து நின்றான்.

"நீங்கள் மட்டும் போனால் நன்றாக இருக்குமா? சௌகந்திகா மலரா என்று உங்களுக்குத் தெரியாதல்லவா? நான் காட்டுகிறேன் நீங்கள் பறித்து வாருங்கள்."

அவன் முன்னே செல்ல அவள் பின்னே தொடர்ந்தாள். பீமனுக்கு மெல்ல ஒரு பெண்மணியின் சாதுர்யம் எத்தனை உச்சகட்டமானது என்பது புரிந்தது.

தருமபுத்திரர் திரும்பிப் பார்த்தார். அவர்கள் இருவரும் போவதை கவனித்துக் கொண்டார். சிரித்துக் கொண்டார். உலகத்தில் அற்புதமான விஷயங்களெல்லாம் இருக்க, ஒருவன் மனைவியோடு சுற்றுவது ஒரு விஷயமா என்று அவருக்குத் தோன்றியது. அவர் இன்னும் சௌகரியமாக சாய்ந்து கொண்டு தன்னுடைய மனசுக்குள் உண்டான அரசாட்சியை விவரிக்கத் துவங்கினார்.

அர்ஜுனன் அம்பை மெல்ல எடுத்து நாண் இட்டு ஒரு சாதாரண அம்பை வைத்து பீமன் பிருஷ்டத்திற்கு குறி வைத்தான். இழுத்து விட்டால் தைத்து விடும். ஆனால் எனக்கு ஆத்திரம் என்ற பெயர் வரும். இரண்டு பேரும் எங்கோ சந்தோஷமாகப் போகிறார்கள். அதற்குக் காரணம் திரௌபதியாகத்தான் இருக்கும். பீமனுக்கு கூட்டிக்கொண்டு போவதற்கெல்லாம் தெரியாது. ஒழிந்து போகட்டும். நாணை தளர விட்டான். அந்த அம்பை திருப்பிப் பார்த்து, இது துச்சாதனனுக்கு என்று அம்பாரத் துணியில் வைத்தான். இந்த சாதாரண அம்பு அந்த அயோக்கியனை துவம்சம் செய்ய போதும் என்று அவனுக்குத் தோன்றியது.

நகுலன் சாட்டை தரையில் கிடந்தது. எடுத்து சொடுக்கலாம் என்று நினைக்கும்போது, அந்த சொடுக்கல் 'படேர்' என்ற சப்தத்தை தரும். அந்த சப்தம் நடந்து போகின்ற இருவரையும் திரும்ப வைக்கும்.

நகுலன் தடுக்கிறானோ என்ற எண்ணம் ஏற்படும். அதனால் அவன் சாட்டையை சொடுக்காமல் மெல்ல தன் பக்கம் இழுத்து சுருட்டிக் கொண்டான். மரத்தின் கிளை மீது வீசினான். கிளையில் சாட்டை சுருக்கிட்டுக் கொண்டது. வேகமாக சாட்டையைப் பிடித்து மேலேறினான். அவர்கள் நடந்து போவது தெரிந்தது. சரட்டென்று கீழே இறங்கினான். சாட்டையின் சுருக்கை அவிழ்த்தான். மெல்ல சாட்டையை தூக்கி ஒரு புதர் மீது போட்டான். கைகளை வெறுமே வைத்துக் கொண்டான். ஆனால் கைகள் சாட்டைக்கு பரபரத்தது.

பீமனுக்கு திரௌபதியைத் தொட இப்படித்தான் பரபரத்திருக்குமோ? அல்லது திரௌபதிக்கு பீமனைத் தழுவ இப்படித்தான் பரபரத்திருக்குமோ? எனக்கு சாட்டைக்கு கை பரபரக்கிறது. மனிதர்கள் எப்போதும் ஏதேனும் ஒன்றை பற்றிக்கொண்டுதான் இருப்பார்கள். அப்படித்தான் இருந்தாக வேண்டும்.

"நீதான் என்னோட புருஷனா வரப்போறே'னு ஸ்கூல் படிக்கும் போதே மிஸ் சொல்லிட்டாங்க!"

"அப்படியா! ஆச்சரியமா இருக்கே!"

"நீயெல்லாம் பெரியவளாகி பன்னி மேய்க்கத்தான் லாயக்குன்னு மிஸ் அடிக்கடி சொல்லுவாங்க!"



32



2

அம்பறாத் தூணியில் இருப்பதெல்லாம் வெறும் அம்புகள். அஸ்திரங்கள் மனதில் இருக்கின்றன. இந்த அம்புகள் தேரப்பாகனை பலியிடவும், தேர்க் கொடியை அறுத்து எறியவும், தேரினுடைய அச்சை உடைக்கவும், குதிரைகளை சிதறடிக்கவும் உதவி செய்யும்.

ஆனால் துரியோதனனையும், கர்ணனையும், பீஷ்மரையும், துரோணரையும் கொல்வதற்கு அஸ்திரங்கள் நெஞ்சுக்குள் இருக்கின்றன. அஸ்திரங்களை நெஞ்சுக்குள் சொன்ன மாத்திரத்தில் அந்த மந்திர ரூபம் ஒரு அஸ்திர வடிவம் எடுக்கும். அந்த அஸ்திர வடிவத்தை வில்லில் தொடுத்து நாண் இழுத்து மனதில் ஒன்று குவித்து போ என்று கட்டளையிட்டால், நாணை தளரவிட்டால் சீறலாய்ப் போகும். போவது அம்பு அல்ல, அது அஸ்திரம். அஸ்திரம் என்பது உருவமல்ல. அது உருவமற்ற விஷயம். வெறும் சக்தி. சக்தியின் குவியல். அந்த சக்திக் குவியல் போய் எந்த இடத்தை இலக்காக வைக்கிறோமோ அந்த இடத்தை தாக்கி சிதற அடிக்கும்.

33

நீர் வேண்டும். தேரில் நீர்க் குடுவை இருக்கும். குடுவையை சாய்த்து நீரை உள்ளங்கையில் எடுத்து தலையில் தெளித்து முகத்தை துடைத்துக் கொண்டால் குளித்தது போல் ஆகிவிடும். தலையில் நீர் தெளித்துக் கொள்வதும், குளிப்பதும் ஒன்றே. அப்படி குளித்த பிறகு மனதை ஒருமுகப்படுத்தி நெஞ்சில் கை வைத்து மந்திரஜபம் சொல்ல, எதிரே மாயமாய் ஒரு சக்தி தோன்றும். அந்த சக்தியை இழுத்து வில்லில் தொடுக்க, அது அஸ்திரமாகி விடும். பிரம்மாஸ்திரத்தை இழுத்து அடித்தால் எதிரியின் பக்கம் முழுவதும் சிதறும். அக்னி அஸ்திரத்தை இழுத்து அடித்தால் எதிர் பக்கம் முழுவதும் நெருப்பு கக்கும்.

எது அஸ்திரம்? மந்திரம்தான் அஸ்திரம். எப்படி பிரயோகம்? வில் வழியே பிரயோகம். மெல்லிய குச்சியை ஒன்றின் மீது ஒன்று சொருகி, பந்தின் மீது செலுத்தி கிணற்றிலிருந்து மேலே இழுத்து வருவது பாலபாடம். அதன் உச்சகட்டம் பிரம்மாஸ்திரம். மந்திரம் வலிமை மிக்கது. மந்திரத்தைச் செலுத்துகின்ற மனமும் வலிமை மிக்கது. வில் என்ற வலிமையோடு நாண் என்கிற வலிமை சேர அம்பு விடுபடுகிறது. அதுவே மந்திரம் என்கிற வில்லோடு மனம் என்கிற நாண் சேர பிரயோகம் ஏற்படுகிறது.

அக்னி எங்கே இருக்கிறது? எல்லா இடத்திலும். நீர் எங்கே இருக்கிறது? எல்லா இடத்திலும். காற்று எங்கே இருக்கிறது? எல்லா இடத்திலேயும். சக்தியை உத்வேகம் கொள்ளச் செய்ய மந்திரம் பயன்படுகிறது. மந்திரத்தை பிரயோகம் செய்ய மனம் தேவை. வில்லை இழுத்துக் கட்டிய நாண். ரீங்காரம் செய்கின்ற நாண். இடது வலது என்ற இரண்டு நுனிகளையும் இழுத்துக் கட்டியிருக்கிற நாண். மூச்சை இழுத்துக் கட்டினால் அந்த உடம்பு வலிமை பெறும். அதற்கு குறிக்கோள் என்று ஏற்படுத்தினால் அதற்குப் பெயர் முயற்சி. முயற்சி பலிதமாக வேண்டுமென்றால் குறிக்கோள் கூர்மையாக இருக்க வேண்டும். குறிக்கோள் உறுதியாக இருக்க வேண்டும். மனம் கூர்மையாக இருக்க வேண்டுமென்றால், குறிக்கோள் மேன்மையாக இருக்க வேண்டும். குறிக்கோள் மேன்மையாக இருந்தால்தான் மனம் கூர்மையாக மாறும். இப்பொழுது குறி, வில், நாண் என்ற மூன்று விஷயம் வந்துவிட்டது.

துரியோதனன் ஒரு குறி . ஒரு குறிக்கோள். அயோக்கியன்.அகம்பாவி. அலட்டுகிற ஷத்ரியன். துரியோதனன் ஸ்ரீகிருஷ்ணர் மீது இருக்கின்ற பயம்தான் அவனை ஓரளவு தன்மையாக இருக்கச் செய்கிறது. இல்லையென்றால் அவன் அட்டகாசம் மிகப் பெரியதாக இருக்கும். துரியோதனன் அட்டகாசம் செய்கிறான் என்றால் அவனைத் தொடர்ந்து அவனைப் போலவே பல அரசர்கள், இளவரசர்கள் அட்டகாசம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அட்டகாசம் ஷத்திரியர்களுடைய வாழ்க்கையாகப் போய்விடும். ஷத்திரியர்களுக்கு மட்டுமே உலகம் என்பதாக மாறும். உலகம் அப்படி ஒருகாலும் ஒரு இனத்தாருக்கு மட்டுமே என்று இருந்ததில்லை. இருப்பின் அந்த அமைப்பு குலைவதே வழக்கம்.

துரியோதனனைக்கூட உடன் பிறந்தான் என்று மன்னித்து விடலாம். பெரியப்பா மகன் என்று பெரும்போக்காய் விடலாம். ஆனால் கர்ணன் என்கிற இந்த தேரோட்டி நாய்தான் அதிகமாக ஆடுகிறது. எங்கு வித்தை கற்றுக் கொண்டான் என்று தெரியவில்லை. எப்படி கிடைத்தது என்று தெரியவில்லை. கவசமாம்! குண்டலமாம்! அது இருக்கும் வரை வெல்ல முடியாதாம். சூரியனின் பிள்ளையாம். மிகப் பெரிய உபாசகனாம். நடு சபையில் சிம்மாசனம் போட்டு அரசனாக்கி துரியோதனன் அபிஷேகம் செய்தான். அன்றிலிருந்து இன்றுவரை அது ஆடுகிறது. துரியோதனனை தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறது. எங்கள் ஐந்து பேரைக் கண்டதும் எரிச்சல் நிறைந்த முகமாக மாறுகிறது. உடம்பு அலைகிறது. பல் கடித்து உக்கிரமாக பார்க்கிறான். துரோணரும், கிருபரும், பீஷ்மரும் இருக்கிறார்கள் என்பதால் என் வித்தைகளை நான் அடக்கமாகக் காட்டினேன். இந்த அஸ்தினாபுரத்து ஜனங்களுக்கு இவ்வளவு காட்டினால் போதும் என்று அடக்கமாக வாசித்தேன். நான் நினைத்தால் இன்னும் சீறி நிற்க முடியும்.

ஆனால் கந்தர்வர்களோடு சண்டையிட வந்தபோது மிக மோசமாக அடி வாங்கினான். அவனுக்கு வித்தை தெரியவில்லை. அந்த கந்தர்வர்களை நான் எளிதில் கதற அடித்திருப்பேன். ஆனால் கர்ணன் புறமுதுகிட்டு ஓடினான். குடுமி அவிழ்ந்து விட விலகினான். வில்லை

உடைக்க கொடுத்து விட்டு பின் வாங்கினான். எந்த விதத்தில் எனக்கு இணை. இவனை இணை என்று எப்படி துரியோதனன் நினைத்துக் கொண்டிருக்கிறான்?

ஆனால் துரியோதனனுக்கு அர்ஜுனனைத் தெரியாது. பீமன் மீது பயமுண்டே தவிர, அர்ஜுனன் யார் என்று அவன் கவனித்தது இல்லை. ஐவரில் யார் இளகியவர் என்று பார்த்து அண்ணலை அழைத்து சூதாட வைத்து ஜெயித்து விட்டான். ஆனால் சூதாடியது நல்லது. திரௌபதியை சபைக்கு இழுத்து வந்தது நல்லது. இல்லையெனில் சகோதரன் சகோதரன் என்றே துரியோதனன் தப்பித்து இருப்பான். வேண்டாம் அப்பா விட்டு விடு என்று பீஷ்மரோ, துரோணரோ, கிருபரோ சொன்னால் விலகி நிற்கும்படியாக இருக்கும். பெரியப்பா அழுகிறார் என்றால் வில்லிலிருந்து நாணை கழட்டி, 'சரிதான் போ' என்று பெரும்போக்காக போகும்படியாக இருந்திருக்கும். இப்போது அப்படி போக முடியாது. எவர் தடுத்தாலும் போக முடியாது. உடம்பு யுத்தத்திற்கு பரபரக்கிறது. இடையறாது அம்பு எறிய வேண்டும்

"நீ யாரோ ரெண்டு பேரோட ஊர் சுத்திட்டு இருக்கியாமே?"

"யாரோ உங்ககிட்டே ஒண்ணுக்கு ரெண்டா போட்டுக் குடுத்திருக்காங்க!"



என்ற ஆத்திரம் வருகிறது. இந்த வனத்தில் அம்பு செலுத்தி சிங்கம், புலிகளைத்தான் கொல்ல முடியும். பாவம் அவைகள். புலிகளெல்லாம் பூனை போல அஞ்சி ஓடுகின்றன. கொல்ல வந்த யானையைப் பற்றி இழுத்து ஒரு அறை பீமன் விட்டதும் பின்னால் வருகின்ற அத்தனை யானைப் படையும் புறந்தள்ளி ஓடுகின்றன. ஒரு கரடியை கை விரித்து பீமன் அணைத்துக் கொள்கிறான். இறுக்குகிறான். நெஞ்சோடு வைத்து எலும்புக் கூட்டை உடைக்கிறான். கரடி செத்து விடுகிறது. அந்த கரடியால் பீமன் முதுகில் தடம் பதிக்கக்கூட முடியவில்லை.

தருமபுத்திரரை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது. அரைக்கண் மூடி ஏதோ கனவு கொண்டிருக்கிறார். மனதுக்குள் அரசாட்சி செய்து கொண்டிருக்கிறார். அவ்வப்போது மந்தகாசமாகச் சிரிக்கிறார். மண்ணை அள்ளி யாருக்கோ பொன்னைக் கொடுப்பது போல போடுகிறார். நினைவு தப்பி வாழ்கிறார். அல்லது வேறு நினைவுகளில் லயிக்கிறார்.

பீமனுக்கோ திரௌபதியே உலகம். தன் உடம்பே அவனுக்கு கோயில். இதை இரண்டையும் தாண்டி அவனால் எதையும் யோசிக்க முடியவில்லை. யுத்தம் என்பதில் அவன் மும்முரமாக இல்லையோ என்று பயம் வருகிறது. அவனை வெறியேற்றினால்தான் மும்முரமாக ஆவானோ என்ற கவலை வருகிறது.

எப்போது நினைத்தாலும் பாசுபதாஸ்திர முத்திரையும், மந்திரமும் அதன் மீதே மனம் சாய்வதும் தான் அடிக்கடி ஏற்படுகிறது. ஒருமுறை விடுவித்து பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை வருகிறது. நாய்கள் பின் தொடர, வேடுவச்சி தோள் தழுவ, அந்த வேடன் நின்ற காட்சி இன்னும் நெஞ்சில் இருக்கிறது. வேடனா அது, சிவன் அல்லவா? என் சிவன் அல்லவா. எப்பேர்ப்பட்ட அழகன்! என்னையெல்லாம் அழகன் என்று ஊர் கொண்டாடுகிறதே. அவனை விட அழகன் உண்டா? அந்த அம்மையை விட அழகி உண்டா? எவ்வளவு அற்புதமான ஜோடி. மனுஷ்ய ரூபம் கொண்டு வந்து என் முன்பு வந்து நின்றனரே. என்ன ஆச்சரியம் அது.

போர் புரிய வா என்று அழைத்த த்வனியிலேயே இவர் சாதாரண ஆள் இல்லை என்று தெரிந்து விட்டது. ஆனாலும் போர் புரிய வா என்று கூப்பிட்டதில் எவ்வளவு சந்தோஷமாக இருந்தது. இந்த வனத்தில் அப்படி கூப்பிடுகிறவர் எவரும் இல்லையே? எந்த பக்கம் அம்பு விட்டாலும் அதை தடுக்கும் வேகம். ஒரு பெரிய போர் நடக்கிறதே என்ற பயமே இல்லாது புருஷனுக்கு அருகே நின்று சிரித்துக் கொண்டிருக்கிற பெண்மணி. அர்ஜுனன் வில் எடுத்தால் போதும். ஊர் ஜனம் அலறிக் கொண்டு நாலாபக்கமும் ஓடும். ஆனால் அந்தப் பெண்மணி அசையாது நின்றாள். அப்பொழுதாவது புரிந்து

கொண்டிருக்க வேண்டும். இது வேறு என்று தெரிந்திருக்க வேண்டும். ஆனால் தெரியாமல் போய்விட்டது. மனம் முழுவதும் யுத்தம் செய்கின்ற வெறியிலேயே இருந்து விட்டது. போருக்கு வா என்று அழைக்கிறானே என்ற ஆத்திரம் வந்து விட்டது. அற்புதமான போர் அது.

கழுத்தும் , தோள் பட்டையும், புஜமும், கைகள் சளைக்கிற வரையில் அம்பு விட்ட போர் அது. அப்பாடா என்று ஒரு கணம் தாமதித்த பொழுதில் அம்பை தட்டிவிட்டது. வில்லின் நாணை துளைத்து விட்டது. ஒரு வேடுவனா, இவ்வளவு வேகமாக இருப்பது என்று நினைக்கிறபோதே செஞ்சடையோனாய், கங்கை முடியோனாய், நெற்றிக் கண்ணனாய், புலித்தோல் உடுத்தியவனாய், சிவந்த நிற மேனியனாய், நாகாபரணம் பூண்டவனாய், திருநீறு தரித்தவனாய், சூலபாணியாய் என் சிவன் தோன்றினான். விழுந்து வணங்க குழைந்தான். 'எழுந்திருப்பா' என்று கொஞ்சினான். இந்த யுத்தத்தில் உனக்கே வெற்றி. இதோ நீ கேட்ட பாசுபதாஸ்திரம் என்ற அஸ்திரத்தை விரல் நுனியில் வழங்கினான். மந்திரம் உள்ளுக்குள் புகுந்தது. தந்திரம் நெஞ்சுக்குள் கனத்தது. பாடம் என்பது என்ன? சொல்லா, படமா? இல்லை. அது ஒரு உணர்வு. உள்ளுக்குள் மனதால் மனதிற்குள் செலுத்துகின்ற முயற்சி. இதுதான் சரியான பாடம். மத்ததெல்லாம் பிழற்சியாகப் போகும்.

ஆனால் இதைவிட அற்புதமான சண்டை என் ஐயன் கிருஷ்ணரோடு போட்டது. மரத்தின் உச்சியிலிருந்து ஒரு இலை சுழன்று சுழன்று வந்து மேலே நின்றது. அவன் நிமிர்ந்து அந்த இலையைப் பார்த்தான். இலை கீழ் இறங்கி அவன் நெற்றியில் ஒட்டிக் கொண்டது. அவன் சிரித்தான். இலை தொடுவது கிருஷ்ணன் தொடுவது போலவே இருக்கிறது என்று சொல்லி, மெல்ல இலையை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

சண்டை என்றால் அது சண்டை!

“அந்த கந்தர்வன் தலை நாளை காலைக்குள் என் காலின் கீழ் கிடக்கும். நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!”

“இல்லை கிருஷ்ணா, தயவுசெய்து கெஞ்சிக் கேட்கிறேன். அவனுக்கு உயிர்ப் பிச்சை கொடு!”

39

“இல்லையென்று சொல்லியாகி விட்டது. நான் சத்தியம் செய்திருக்கிறேன், அவன் தலை என் காலடியில் கிடக்கும் என்று. பிறகு என்ன உன்னோடு பேச்சு?”

“நான் கெஞ்சிக் கேட்கிறேன் கிருஷ்ணா, தயவுசெய்து விட்டு விடு?”

“முடியாது!”

கிருஷ்ணர் இப்படி பேசி கேட்டதேயில்லை.

“நான் அர்ஜுனன் கேட்கிறேன்.”

“அதனால் என்ன? எவர் கேட்டாலும் முடியாது!”

இத்தனை நிஷ்டூரமாய் கிருஷ்ணர் பேசிக் கேட்டதேயில்லை. ஆச்சரியமாய் இருந்தது.

“நான் வாக்குக் கொடுத்து விட்டேன்!”

“என்னவென்று?”

“கந்தர்வனின் மனைவிக்கு...”

“என்னவென்று கொடுத்தாய்?”

“தீர்க்க சுமங்கலி பவ என்று!”

“பிறகு?”

“அவள் விக்கி விக்கி அழுகிறாள்!”

“எதற்கு?”

“நீ தீர்க்கசுமங்கலி பவ என்று சொல்கிறாய். ஆனால் கிருஷ்ணனோ என் புருஷன் உயிரை வாங்கத் தயாராக இருக்கிறார். எது நடக்கப் போகிறது என்று தெரியவில்லையே?”

40

"நான் நினைத்ததுதான் நடக்கும்!"

"வேண்டாம் கிருஷ்ணா. நீ நினைத்தது நடக்க வேண்டாம்!"

"நான் சபதம் செய்திருக்கிறேனப்பா!"

"நானும் செய்திருக்கிறேன் கிருஷ்ணா!"

"என்னடா, உரத்த குரலில் பேசுகிறாய்?"

"நீ மட்டும் பேசலாமா. உன்னை அடா என்று சொல்ல எத்தனை நேரம் ஆகும்?"

"என்னையா, நீயா? அடா என்றா, சொல்லிப் பார். சொல்லிப் பார் அர்ஜுனா!"

உதறி எழுந்த வேகம் பார்த்தால் அந்த இடத்திலே அறை விழும் போல் இருந்தது. ஆனால் கிருஷ்ணர் எல்லா கோபத்திலும் நிதானம் உடையவர்.

"இன்று மாலைக்குள் அந்த கந்தர்வன் தலை என் காலின் கீழ் உருளும்!"

"முடியாது கிருஷ்ணா. அந்த கந்தர்வன் என் வீட்டில் இருக்கிறான்!"

"எங்கிருந்தாலும் உருளும்!"

"அவன் என் இடத்தில், என் பாதுகாப்பில் இருக்கிறான் கிருஷ்ணா."

"எவர் பாதுகாப்பில் இருந்தாலும் விழும்!"

"கிருஷ்ணா, அத்துமீறிப் பேசுகிறாய்."

"இந்த வார்த்தையை என் நண்பனாக நீ இல்லாது வேறு எவரும் சொல்லியிருந்தால் இந்த இடத்திலேயே அடித்து நொறுக்கியிருப்பேன்.

போ. வெளியே போ. உன்னால் முடிந்தால் அந்த கந்தர்வனை காப்பாற்றிக் கொள். நாளை காலை உன் வீட்டிற்குள் புகுந்து அந்த கந்தர்வன் தலைமுடியை பிடித்து இழுத்து வந்து அவனை என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறேன்."

"உன்னால் அது முடியாது கிருஷ்ணா!"

"ஏன்?"

"என்னைத் தாண்டித்தான் அவனை நீ தொட முடியும்!"

"உன்னைத் தாண்டுவது கடினமா?"

"தொடக் கூட முடியாது!"

"அதிகமாகப் பேசுகிறாய் அர்ஜுனா!"

"இல்லை. அளவோடு பேசுகிறேன். இன்னும் அடக்கமாகப் பேசுகிறேன். நான் அடக்கம் தவறிவிட்டால் என் பேச்சு வேறு விதமாக இருக்கும்!"

"எப்படி இருக்கும்?"

"வந்துப் பாரடா..."

அர்ஜுனன் வெளியேறி விட்டான். உடம்பு கொதித்தது. பற்கள் கிட்டித்தன. கண்களில் நெருப்பு பொறி பறந்தது. காதுகள் சிவந்தது. கைகள் பரபரத்தன. அப்போது கிருஷ்ணர் இருந்த வீட்டை உடைத்து எறிந்து விடவேண்டும் போல் இருந்தது. ஆனால் நாளை காலைதான் யுத்தம் என சகலருக்கும் தெரிந்து விட்டது. போர் போர் என்று பிரகடனப்படுத்தியாயிற்று. ஸ்ரீகிருஷ்ணர் வேண்டுமென்றே நாலாபக்கமும் ஆள் அனுப்பி அர்ஜுனனோடு சண்டையிடப் போகிறேன் என்று முரசு அறைந்து கொண்டிருக்கிறார். அதனால் அர்ஜுனனும் ஆமாம் என்று சொல்லும்படியாகி விட்டது.

மறுநாள் பொழுது விடிந்தது. ஆற்றில் நீராடி, ஸ்ரீகிருஷ்ணனையே

பூஜை செய்து, காண்டீபம் எடுத்து நாண் ஏற்றி, கவசம் தரித்து, கையில் தோல் உறை தரித்து, தலைமுடியை இறுக்கக் கட்டி , இடுப்பு வேட்டியை இழுத்து சொருகி வாசல் திண்ணைக்கு வர, கிருஷ்ணருடைய தேர் தெருவிற்குள் நுழைந்தது. வேகமாக வந்து புழுதி பறக்க அர்ஜுனன் வீட்டு வாசலில் நின்றது.

"அந்த கந்தர்வனை வெளியே விடு!"

"முடியாது!"

"விடப் போகிறாயா, இல்லையா?"

"ஒருகாலும் விட முடியாது!"

உள்ளுக்குள்ளே கந்தர்வன் நடுங்கிக் கொண்டிருந்தான். முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருந்தான். அவன் மனைவி வெளியே வந்து அர்ஜுனனை தொழுது கொண்டிருந்தாள். கிருஷ்ணனை கெஞ்சிக் கொண்டிருந்தாள். கிருஷ்ணர் ஏறிட்டே பார்க்கவில்லை.

"விடப் போகிறாயா இல்லையா அர்ஜுனா?"

"இல்லை. ஒருநாளும் இல்லை!"

"நீ வருத்தப்படுவாய்!"

"நீ வருத்தப்படுவாய். தெரியாமல் அர்ஜுனனோடு சண்டைக்கு வந்து விட்டோம் என்று நீ வருத்தப்படுவாய். என் வலிவு தெரியாமல் பேசுகிறாய் கிருஷ்ணா!"

கிருஷ்ணர் முகம் சிவப்பது தெரிந்தது. தேரில் எழுந்து நின்று கால் உதைத்து நிற்பது தெரிந்தது. கையில் கோதண்டமும், அம்புகளும் தோன்றின. வில் வளைப்பது தெரிந்தது. அவன் கையெடுத்து கும்பிட்டான்.

அவனும் வில் வளைத்து நாண் ஏற்றினான். அம்பு தொடுத்தான். பளீர். என்று ஒரு அம்பு வீட்டு வாசற்படியில் தாக்கியது. அர்ஜுனன்

தேரை அடித்தான். தேர் சிதறி விழுந்தது. கிருஷ்ணர் தெருவில் நிற்பது தெரிந்தது. அவன் காத்திருந்தான். கிருஷ்ணர் வேறு ஒரு குதிரையில் ஏறி தெருவின் முனைக்குப் போனார். அங்கிருந்து வில் வளைத்தார். அர்ஜுனன் தெருவில் இறங்கினான். தொலைவில் இருக்கின்ற கிருஷ்ணரைப் பார்த்தான். அவர் அம்பு வருவதற்கு முன்பு இவன் அம்பு விட்டான். அவர் அம்புகள் உடைந்து விழுந்தன. அர்ஜுனன் சரமாரியாகத் தாக்கினான். அவர் மீது அம்புகள் உரசிக் கொண்டு போயின. பதிலுக்கு அவரும் அம்பு அடித்தார். அவை தோளை, கவசத்தை வந்து தாக்கின. அவன் வீட்டின் மீது நெருப்புப் பொறி விழுந்தது. பலர் வீட்டு முன்பக்கங்கள் சிதறி விழுந்தன. வாசற் கதவுகள் உடைந்தன. தெருவில் போவோர் மீது அக்னி துண்டுகள் விழுந்தன. எல்லோரும் கதவு சார்த்திக் கொண்டார்கள். அர்ஜுனன், கிருஷ்ணர் மட்டுமே தெருவில் இருந்தார்கள். மாறி மாறி அடித்துக் கொண்டார்கள். உச்சி தாண்டும் வரை ரகளை நடந்தது. அந்த ஊர் முழுவதும் பற்றி எரிந்தது. பலபேருக்கு காயம் ஏற்பட்டது. ஜனங்கள் அலறினார்கள். பசுக்கள் கதறின. குதிரைகள் நாலாபுறமும் மிரண்டு ஓடின. இடியும், மின்னலுமாய் சரங்கள் பாய்ந்தன. நெருப்பும், வான் மழையுமாய் வித்தை காட்டின.

பளீர் என்று ஒரு மின்னல் வெளிச்சம். நாரதர் தரை இறங்கினார். இரண்டு பேருக்கும் நடுவே நின்றார். 'சற்று பொறுங்கள், சற்று பொறுங்கள்!' என்றார். இரண்டு பக்கமும் கை காட்டி நிறுத்தினார்.

"இருங்கள். என்ன நடந்தது?"

"நான் அபயம் அளித்திருக்கிறேன்!"

"யாருக்கு?"

"கந்தர்வனுக்கு!"

"என்ன சமாசாரம்?"

"இன்று மாலைக்குள் கந்தர்வனுடைய தலை தரையில் உருளும்

என்று சொல்லியிருக்கிறார். அவன் மனைவி வந்து கேட்டாள். நான், 'தீர்க்க சுமங்கலி பவ' என்று சொல்லிவிட்டேன். போய் கெஞ்சிக் கேட்டேன். கிருஷ்ணர் விட மாட்டேன் என்கிறார்!"

"அடேய், அவர் சொல்வதில் ஒன்றும் பிசகு இல்லையே. என்ன தவறு செய்தான்?"

"மேலே அந்தப் பெண்மணியோடு சல்லாபித்து சந்தோஷமாக தாம்பூலம் போட்டுக் கொண்டு போய் அந்த தாம்பூலத்தை உமிழ்ந்தான். கிருஷ்ணர் அர்க்யம் விடுகின்ற நேரத்தில் அந்தக் கையில் தாம்பூல எச்சில் வந்து விழுந்தது. கிருஷ்ணருடைய அர்க்யத்தில் தாம்பூல எச்சில் வந்து விழுந்ததால் அவர் மேலே நிமிர்ந்து பார்த்து இன்று மாலைக்குள் உன் தலை என் காலில் உருளும் என்று சொல்லி விட்டார்."

"அவ்வளவுதானே. ஒன்றும் பெரிய தண்டனை இல்லையே? தலை உருளும் என்றுதானே சொல்லியிருக்கிறார்?"

'சார், கள்ள நோட்டை எப்படி அடையாளம் கண்டுபிடிக்கிறதுன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாதே!"

"ரொம்ப நல்லதாப்போச்சு! ரெண்டாயிரம் ரூபாய்க்கு சேஞ்ச் குடுங்க!"



"என்னய்யா, ஒரு கந்தர்வனை, அப்பாவியை, தெரியாமல் செய்தவனை எதற்காக கொல்வது?"

"கொல்வதாகச் சொல்லவில்லையே?"

"பிறகு... தலை உருளும் என்றால் என்ன அர்த்தம்?"

"காலில் விழுந்து வணங்க வேண்டும் என்று அர்த்தம்! இடது காதும், வலது காதும் தலையை புரட்டி புரட்டி வைக்க வேண்டும் என்று அர்த்தம். கெஞ்சிக் கேட்க வேண்டும் என்று அர்த்தம்?"

"ஓ...அவ்வளவுதானா. கொல்வது இல்லையா! நான் கொல்வதாக நினைத்துக் கொண்டேனே!"

"கொல்வது மாதிரி சொல்லியிருப்பார். பெரிய ஆளல்லவா. பேச்சில் பெரிய ஆள் அல்லவா?"

நாரதர் சொல்ல, கிருஷ்ணர் சிரிக்க, அவனும் சிரித்தான்.

"எதற்கு கிருஷ்ணா, எதற்கு?"

"யுத்தம் வரப்போகிறது அர்ஜுனா. தாக்குப் பிடிப்பாயா என்று பார்த்தேன். என்னையே தாக்குப்பிடிக்கிறாய். மற்றவரெல்லாம் எந்த மூலைக்கு. எனவே, உன்னைக் கண்டு நான் அஞ்சுகிறேன். இந்த உலகம் அஞ்சும். உனக்கு இணையான வீரன் இங்கு எவரும் இல்லை!" என்று கட்டித் தழுவிக் கொள்ள, கிருஷ்ணா கிருஷ்ணா என்று அவனும் தழுவிக் கொண்டான்.

இப்பொழுது நிமிர்ந்தான். மேலே மரத்திலிருந்து ஒரு பூ ஒன்று சுழன்று சுழன்று அவன் நெஞ்சில் வந்து விழுந்தது. அந்தப் பூவை எடுத்து அவன் கண்களில் ஒற்றிக் கொண்டான். ஏன் அப்படிச் செய்தான் என்று அவனுக்குத் தெரியவில்லை.

வேடன் யார் என்று தெரியாமல் சண்டை போட்டது ஒரு விதம் என்றால், ஸ்ரீகிருஷ்ணர் இன்னார் என்று தெரிந்து அவர் மீதும்

கோபப்பட்டு , சண்டையிட்டது இன்னொரு விதம். 'ஸ்ரீகிருஷ்ணனையே தன்னால் எதிர்க்க முடியும் என்றால் வேறு எவர் எனக்கு எதிரி இருக்க முடியும்?' அர்ஜுனன் அந்த வனத்தில் தொடை தட்டிக் கொண்டான். நடந்து முடிந்த அந்த யுத்தத்தை மறுபடியும் நினைத்துப் பார்க்கத் துவங்கினான். சில விஷயங்கள் எத்தனை முறை நினைத்தாலும் இனிப்பு குறையாதவை.

எதற்கு நான்கு சகோதரர்கள். நகுலனுக்கு அதுதான் தோன்றியது. நான்கு சகோதரர்களுக்குப் பதிலாக நான்கு குதிரைகள் இருந்தால் போதாதா? அந்த நான்கு குதிரைகளையும் தேரில் பூட்டி சரியான சவுக்காக தான் இருந்து வருடி அடித்து குதிரைகளை ஓடச் செய்து இந்த உலகம் முழுவதும் பலமுறை பலமுறை வலம் வந்திருக்கலாமே! உலகம் இப்பிரபஞ்சத்தை வலம் வருகிறது. சூரியனை வலம் வருகிறது. நாம் இந்த உலகத்தை வலம் வந்தால் என்ன. அதைவிட சந்தோஷம் என்ன? எதற்கு அரச பதவி? எதற்கு அஸ்தினாபுரம்? எதற்கு தருமர்? எதற்கு பீமன்? எதற்கு அர்ஜுனன்? எதற்கு சகாதேவன்? தேவையே இல்லை.

குதிரைகளைத் தவிர, நகுலனுக்குப் பிடித்த விஷயம், பாண்டு. அவனுடைய தந்தை. இளம் சிவப்பாக திட்டுத் திட்டான சிவப்பாக இருப்பார். ஆனால் அவருடைய அணைப்பு மிகுந்த சுகம் அளிக்கும். மிகுந்த கருணை உடையவர். ஆற்றங்கரையும், புல்வெளியும், பர்ண சாலையுமாய் தந்தையும், பெரியம்மாவும், அம்மாவும், மூன்று அண்ணன்மார்களும், ஒரு தம்பியும் இருந்த அந்த வாழ்நாள் அற்புதமானது. மறக்கவே முடியாதது. அவர் முதுகில் குதிரை சவாரி செய்ததும், தோளில் கால் போட்டு உட்கார்ந்து அவர் தலைமுடியைப் பிடித்து, 'ம்ம் போ' என்று தோளில் அழுத்தியதும், 'எந்நேரமும் உனக்கு குதிரைதானா, எவரைப் பார்த்தாலும் குதிரைதானா' என்று அவர் தாவி அணைத்துக் கொண்டதும் ஞாபகம் வந்தது.

அர்ஜுனன் குருவி அடித்த உடனேயே பாடம் முடிந்து போகும். அடுத்தபடி நகுலனுக்கு வரவேண்டிய பாடம் நின்று போகும். அர்ஜுனனுடைய ஜெயித்தலிலேயே எல்லோரும் மகிழ்ந்து விடுவார்கள்.

அடுத்தபடி இவன் வில் வளைத்து காத்திருந்தால் யாரும் கவனிக்க மாட்டார்கள். எல்லோரும் போன பிறகு இவனாகவே மண்டியிட்டு அந்தக் குருவியைத் தாக்குவான். யாரும் கைதட்ட மாட்டார்கள். அது ஒரு வேதனையாகத்தான் அவனுக்கு இருக்கும். அர்ஜுனனைக் கொண்டாடும் போது ஏன் தன்னை கொண்டாடவில்லை என்ற ஆச்சரியம் இருக்கும்.

எனவே, அவன் தன்னை கொண்டாடாத மனிதர்களை விட்டு விட்டு தன்னை யார் கொண்டாடுவார்கள் என்று சுற்றுமுற்றும் பார்த்தான். குதிரைகளுக்கு அருகே போய் நின்றான். நலமா என்று கேட்டான். குதிரைகள் திரும்பிப் பார்த்தன.

“உங்களைத்தான் கேட்கிறேன். நலமாக இருக்கிறீர்களா? நன்றாக இருந்ததா புல்? இன்னும் வேறு ஏதேனும் அறுத்துக் கொண்டு வரட்டுமா?” என்று அவன் மனதில் கேட்க, அவை பல் தெரிய சிரித்தன. அப்போது அவனுக்குப் புரிந்து விட்டது, மனிதர்களை விட மிருகங்கள் உயர்வு. மிருகங்களில் குதிரை மிக மிக உயர்ந்தது.

குதிரையைத் தொட்டால் போதும், ஆயிரம் மின்னல் ஓடும். மின்னலெல்லாம் உள்ளங்கை சவுக்காய் நிற்கும். உள்ளங்கை சவுக்கு தொடுக்க, குதிரைகள் காது திருப்பும். பின்பக்கம் பார்க்கத் தெரிந்த குதிரைகள் பிரம்ம ஜாதி. இது பிரம்மனை தோற்கும் முயற்சி. உறங்கையிலும் காது கேட்கும். உடம்பது துடித்து நிற்கும். காற்றினை புரிந்து கொள்ளும். மெல்ல தொடுதலில் குசலம் சொல்லும். நீவிவிட பிடித்துப் போகும். கட்டி அணைத்திட கண்ணீர் சொருகும். முதுகிலே அறைந்து கூவ புயலென பாய்ந்து போகும். வலிமையே திரை என்றால் குதிரை என் சினேகிதமாகும். குதிரையே ஞானம் என்றால் கடிவாளம் வேதமாகும்.

ஆயிரக்கணக்கில் குதிரையைப் பற்றி கவிதைகள் நெய்து கொண்டிருப்பான். சவுக்கால் குதிரையை தொடும் பயிற்சியைச் செய்து கொண்டிருப்பான். ஒரு முழ உறுதியான மூங்கில். அதன் நடுவிலிருந்து நுனி வரை பின்னப்பட்ட கயிறு. அந்தக் கயிறு ஒரு பெரும் சாட்டையென நாலு கை நீளத்திற்கு பின்னப்பட்டிருக்கும். நுனியில்

குஞ்சலம் வைத்திருக்கும். இப்போது மூங்கிலை இறுகப் பிடித்து சொடுக்கினால், 'சொடேர்' என்ற சத்தம் எழும். அந்தக் கயிறை வீசி அடித்தால் ஒரு இலையை அல்லது பூவை கவ்விக் கொள்ளும். விரைவாய் நகருகின்ற எறும்பை எடுத்து இன்னொரு பக்கம் போடும். எறும்புக்கு சிறு காயம் கூட இருக்காது. எறும்புக்கே காயம் இல்லாதபோது அந்த சவுக்கு நுனி குதிரைக்கு வலியைத் தருமா? தராது. மாறாக மெல்ல அற்புதமாக தீண்டும். அந்த தீண்டலுக்குள் ஒரு செய்தி இருக்கும். வலப்பக்க கழுத்தைத் தொட்டால் இடப்பக்கம் திரும்பு என்று அர்த்தம். இடப்பக்க கழுத்தைத் தொட்டால் வலப்பக்கம் திரும்பு என்று அர்த்தம். நடுப்பிடரியில் அடிவிழுந்தால் விரைவு என்று அர்த்தம். பிருஷ்டத்தில் அடி விழுந்தால் இன்னும் பற என்று அர்த்தம். மீண்டும் பிருஷ்டத்தில் அடித்தால் புயலென ஓடு என்று அர்த்தம்.

சவுக்கின் அடி மட்டுமல்ல, குரலும் முக்கியம். ஏய்... என்ற குரலின் அதிர்வு குதிரைகள் புரிந்து கொள்ளும். நிற்காது ஓடும். சளைக்காது ஓடும். நுரை ததும்ப ஓடும்.

யுத்தம் என்று ஒன்று வந்தால், வரும் என்றும் வராது என்றும் சொல்கிறார்கள். ஆனால் யுத்தம் என்று ஒன்று வந்தால், தருமர் பக்கத்து குதிரைகள் அத்தனையும் நகுலன்தான் தேர்வு செய்வான். தருமருக்கு எந்த குதிரைகள், பீமனுக்கு எந்த குதிரைகள், அர்ஜுனனுக்கு எந்த குதிரைகள், சகாதேவனுக்கு, மற்றவருக்கு எந்த குதிரை என்று குதிரைகளைத்தான் கவனித்துக் கொள்வான். குதிரை வேகம் சரியாக இல்லையெனில் யுத்தத்தில் ஜெயிக்க முடியாது. இன்று மட்டும் இல்லை, இனி வரப்போகும் காலங்களிலும் குதிரை வேகம்தான் யுத்தத்தை நிர்ணயிக்கப் போகிறது. குதிரையினுடைய விரைவுதான் வெற்றியை கொடுக்கப் போகிறது.

இந்த கர்ணனை நினைத்தால்தான் ஆச்சரியமாக இருக்கிறது. அவனுக்குப் பெயர் ராதேயனாம். ராதையின் மகன் ராதேயன். தேரோட்டியின் மகன். அவனும் தேரோட்டுவானாம். அர்ஜுனனுக்கு எதிர்க் குரல் கொடுத்து போட்டிக் களத்தில் நுழைந்தபோது நகுலனை தாண்டிக் கொண்டுதான் அந்த ராதேயன் போனான். பீமனும்

,அர்ஜுனனும், தருமரும், ஏன் சகாதேவனும் வில்லுடன் இருக்க நகுலன் மட்டும் சவுக்கோடு நின்றிருந்தான்.நின்று ஒருமுறை நகுலனைப் பார்த்து விட்டு ராதேயன் சினேகமாகச் சிரித்தான். தேரோட்டி அல்லவா? அதனால் தேரோட்டுவதில் விருப்பமுள்ள நகுலனை அவனுக்கு பிடித்திருக்கக் கூடும். எல்லோரும் கையில் ஆயுதத்தோடு இருக்க, சவுக்கோடு இருந்தவனை கொஞ்சம் விசித்திரமாக பார்த்திருக்கக் கூடும். ஆனால் எதுவும் சொல்லவில்லை. ஒரு நட்பு தெரிந்தது. நகுலனுக்கும் ராதேயன் மீது ஒரு நட்பு தெரிந்தது. தேரோட்டியின் மகன் என்றால் இடையறாது எந்நேரமும் தேர் மீதுதான் இருந்திருப்பான். பாடம் படிப்பதும், உணவு உண்பதும், தூங்குவதும், ஆடுவதும், ஓடுவதுமாய் நிற்கின்ற தேரில் இருந்திருப்பான். அல்லது குதிரைகளோடு தினமும் காலம் கழித்திருப்பான். இளம் வயதில் குதிரை ஏறி சுற்றி வந்திருப்பான். தேரோட்டி வீட்டில் குதிரைகளும் , தேரும் அன்றி வேறு என்ன இருக்கும்? எனவே, தன்னைப் போலவே அந்த ராதேயனும் தேரோட்டுவதில் வல்லவனாக இருக்க வேண்டும். அதனால்தான் அந்த சினேகமான சிரிப்பு வந்திருக்க வேண்டும்.

அவனை விட சிறந்த தேரோட்டி இந்த ஸ்ரீ கிருஷ்ணன்.

“கிருஷ்ணா...”

உள்ளுக்குள் பிரியமாய் அவன் குரல் எடுத்துக் கூவினான். மரத்திலிருந்து நுனியாக மூன்று இலை உதிர்ந்து சுழன்று வந்து அவன் தோளில் அமர்ந்து கொண்டது. ஏதோ தொடுகிறது என்று திரும்பிப் பார்க்க, தோளில் வந்து அமர்ந்த கொழுந்தை கவனித்து மெல்ல எடுத்து தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டான். கிருஷ்ணா என்றதும் இந்த கொழுந்து தொடுகிறது. இது ஸ்ரீகிருஷ்ணன் தொடுவது போலவே இருக்கிறது. மெல்ல கொழுந்தை முகர்ந்தான். வாய்க்குள் வைத்தான். கடித்து, சுவைத்து தின்ன ஆரம்பித்தான். கொழுந்து துவர்ந்தது. அதனால் என்ன? இதுவும் ஒரு ருசிதான் என்று உண்ணத் துவங்கினான்.

இந்த ஸ்ரீகிருஷ்ணன் மிக அற்புதமான தேரோட்டி. அவர் தேரோட்டுவதைக் கவனித்திருக்கிறான். தேரோட்டிகள் பலர் அரை ஆசனத்தில்தான் உட்காருவார்கள். பாதி ஆசனம் காலியாக இருக்கும்.

ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் சப்பனிக்க நடு ஆசனத்தில் உட்கார்ந்து இரண்டு கால்களையும் இரண்டு பக்கமும் ஊன்றி வைத்திருப்பார். தேர் திரும்புவதற்கு குதிரைகள் மட்டுமல்லாது அவர் கால்களின் அழுத்தமும் உதவி செய்யும். அந்தக் கால்களில் அத்தனை வலிவு இருக்கும்.

யாதவர் குடிசையில் வாழ்ந்து பசுக்களோடு இருந்து அவைகளோடு தடவி, முதுகு தேய்த்து, கொம்பு பிடித்து உலுக்கி, கன்னத்தில் அறைந்து கொஞ்சி விளையாடிய அந்த ஸ்ரீகிருஷ்ணன் கம்சனை கொன்று ஆட்சி பீடத்தை அலங்கரித்ததும் குதிரைகள் பக்கம் மாறிவிட்டான். பசுக்களை தடவிய கை குதிரைகளை தழுவுகிறது. பசுக்களை இறுக்கிய கயிறுகள் இப்போது குதிரையை சுழற்றி இறக்குகின்றன. சரியான கடிவாளம். சரியான லகான். சரியான சேணை. சரியான பிணைப்பு. ஏறி நின்று முன்பக்கம் அழுத்தி அழுத்தி குதிரைகளுக்கு கழுத்தில் கனம் கூட்டுவது. அந்த கனத்தை குதிரைகள் நன்கு உணர்ந்ததும் மெல்ல நகரு என்று சொல்வது. மெல்ல குதிரைகள் நகர்ந்ததும் அமர்ந்து கொள்வது. அமர்ந்து கொண்டதும் குதிரைக்கு தேரின் எடையை காட்டுவது. தேரின் எடை மீது ஒரு மனிதரை நிற்க வைத்து கொஞ்சம் விரைவாக ஓட்டுவது. தேரின் எடையும், மனிதரின் எடையும் குதிரை உணரும் வண்ணம் ஒரு மத்திம வேகத்தில் செலுத்துவது. சமதளத்தில் மண் தரையில் ஓட்டுவது. பிறகு மெல்ல மெல்ல துரிதம் காட்டுவது. பிறகு தலைதெறிக்க ஓடுகின்ற வேகத்தை குதிரைகளுக்கு ஊட்டுவது. அப்படியே திருப்புவது. திரும்பி வட்டமடித்து மறுபடியும் வந்த வழியே புழுதிக்குள் புழுதியாக விரைவது.

வெள்ளை நிற குதிரைகளை ஸ்ரீகிருஷ்ணன் விரும்புகின்றான். அந்த வெள்ளை நிற குதிரைகளுக்குப் பின்னணியில் சியாமள வர்ணனாக அவன் இருக்க, குதிரைகளும், அவனும் தெளிவாகத் தெரிகின்றார்கள். குதிரைகளுக்கும் அந்த சியாமள வர்ணனைப் பிடித்து விட்டது. சியாமள வர்ணனுக்கு வெள்ளை குதிரைகளைப் பிடித்து விட்டது. குதிரைகள் அவன் சொல்பேச்சைக் கேட்கின்றன. அவன் சிறு அசைவையும் புரிந்து கொள்கின்றன. இந்த யுத்தத்தில் அவன் பங்கு எடுத்துக் கொள்ளமாட்டான் என்றுதான் தோன்றுகிறது. நடுநிலை வகிப்பான் என்று தோன்றுகிறது. ஆனாலும் நடுநிலை வகிப்பவன்

"என்னடி இது, குழந்தை ரொம்ப நேரமா அழுதுகிட்டே இருக்குது... நீ பாட்டுக்கு சீரியல் பார்த்துக்கிட்டிருக்கே?"

"அட நீங்க வேற! குழந்தையும் சீரியல் பார்த்திட்டுதான் அழுறது!"

குதிரை ஓட்டலாம் அல்லவா? ரத சாரதியாக இருக்கலாமல்லவா? எனவே, அர்ஜுனனுக்கு தேர் ஓட்டுகின்ற வேலையை அவன் செய்வான். அப்படியானால் அவனுக்கு குதிரை தேர்ந்தெடுக்கின்ற விஷயமும், அதை பூட்டுகின்ற விஷயமும், அந்த கடிவாளத்தை சரியாக மாட்டி அவன் கையில் கொடுக்கின்ற விஷயமும் நான்தான் செய்ய வேண்டும். தன் குதிரைகளை தான்தான் தேர்ந்தெடுத்துக் கொள்வேன் என்று சொல்வானோ? இல்லை, அவனை விட எனக்கு தேர்ந்தெடுக்க நன்குத் தெரியும். அர்ஜுனனுடைய தேர், அதற்கேற்ப குதிரைகளும் தோதாக இருக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு விரைவு பிடிக்கும். அர்ஜுனனுடைய அஸ்திர வித்தைகளுக்கு குதிரையினுடைய விரைவும், இடதும் வலதுமான நகர்வும்தான் முக்கியம். வட்டமடித்தல் மிக முக்கியம். கூட்டத்தில் பிளந்து கொண்டு முன்னேறுதல் முக்கியம். இவைகளை ஸ்ரீ கிருஷ்ணனால் செய்து விட முடியும். ஆனால் அதற்கேற்ப குதிரைகளை நான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நகுலன் எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுதே அத்தகைய

குதிரைகளை தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அந்த குதிரைகள் எப்படி இருக்க வேண்டும் என்று மனம் கற்பனை செய்தது. நல்ல குதிரைகள் என்பவற்றை மனம் இடையறாது ஜபம் செய்து கொண்டிருந்தது.

குதிரை.களை ஓட்டத் தெரியாதவன் யார்? ராதேயனாக இருக்குமோ என்று வெற்றாய் ஒரு எண்ணம் வருகிறது. குதிரை ஓட்டிக்குப் பிறந்தாலும் கர்ணன் தன்னுடைய எண்ணங்களையெல்லாம் அஸ்திர பயிற்சியின் மீதே வைத்திருக்கிறான் . அவனுக்கு குதிரையும் அஸ்திரப் பயிற்சியும் சேர்ந்தது என்று தெரியவில்லை. அவனுக்கு சரியான தேரோட்டி கிடைக்காது போனால்? கிருஷ்ணனைப் போன்ற ஒரு தேரோட்டி கிடைக்காது போனால், அர்ஜுனனுடைய வில்வித்தை பிரகாசிக்காது. மாறாக, ஊனம் அடையும்.

உள்ளுக்குள்ளே கர்ணனை யோசிக்கும் போது,

கர்ணனுடைய தேர் எங்கேயோ சிக்கிக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அடேய், அது பள்ளத்தில் விழுந்திருக்கிறது. அவ்வளவுதான். நீ ஏன் இறங்கி சக்கரத்தை நகர்த்துகிறாய். எந்த முட்டாளாவது இதைச் செய்வானா? நீ தேரோட்டியா? தேரோட்டியின் மகனா? ஓடிப்போய் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இடது பக்கம் குதிரையை லேசாக ஓட்டி வலது பக்க குதிரையை வேகமாக திருப்பச் செய்தால் பளிச்சென்று சக்கரம் பிய்த்துக் கொண்டு மேலே வரும் அல்லவா! இடது பக்கம் நகர்ந்து வலது பக்கம் திருப்பும் குதிரைகளை ஒரே நேரம் இயக்க வேண்டுமல்லவா? அதை விட்டு விட்டு கீழே இறங்கி சக்கரத்தை தூக்கினால்.... என்ன இது, நான் என்ன யோசிக்கிறேன். இப்படி யாராவது செய்வார்களா. கர்ணன் செய்வானா? மாட்டான். கர்ணனுக்கும் தேரோட்ட தெரிந்திருக்கக் கூடும். தேரோட்டியின் மகன்தானே. தேரோட்ட தெரியாமலா போகும்? அவன் தவறு செய்ய மாட்டான். ஒருபொழுதும் தேரிலிருந்து யுத்த வீரன் தரைக்கு இறங்கக் கூடாது. குதிரைகள் மீது அவநம்பிக்கைக் கொண்டவன்தான் தரையில் இறங்குவான். குதிரைகள் மீது அவநம்பிக்கைக் கொண்டவன், குதிரைகளைப் பற்றி சற்றும் தெரியாதவன்.

திடீரென்று மனதிற்குள் ஏன் இப்படி ஒரு சித்திரம் வந்தது? இந்த மரத்தின் கொழுந்துகளை சாப்பிட்டதாலா? இந்தக் கொழுந்துகளை ஸ்ரீ கிருஷ்ணனின் பிரசாதம் என்று சாப்பிட்டதாலா? கர்ணனுக்கு இதை எப்படிச் சொல்வது. ஒருபொழுதும் தேரைவிட்டு கீழே இறங்காதே, கர்ணனுக்குச் சொல்ல வேண்டும். குதிரைகளை நம்பு. குதிரைகளோடு பேசு. குதிரைகளை ஓட்டக் கற்றுக் கொள். ஆள் பாதி, ஆடை பாதி என்பார்களே, அதேபோல யுத்தத்தில் குதிரை பாதி. அஸ்திரம் பாதி. அஸ்திரம் செலுத்த குதிரைகள் துணை. குதிரைகள் இல்லாது அஸ்திரம் செலுத்த முடியாது. அவைகளின் நகர்வுக்கு ஏற்றத்தான் அஸ்திரம் நன்றாக இருக்கும். எதிரியோடு இடைவெளி தேவையென்றால் அவை குதிரைகள்தான் கொடுக்கும். நெருங்கி வரவேண்டுமென்றால் அவற்றை குதிரைகள்தான் செய்யும்.

எனவே, குதிரைகளை நம்பாது எவனொருவன் யுத்தத்தில் இறங்கினாலும் அவன் மோசமாக தாக்கப்படுவது உறுதி. அர்ஜுனனுக்கு

சொல்ல வேண்டும். ஒருபொழுதும் யுத்த களத்தில் தேரை விட்டு கீழே இறங்காதே என்று எல்லோருக்கும் சொல்ல வேண்டும். கர்ணனுக்கு சொன்னாலும் நன்றாக இருக்கும். ஆனால் கர்ணனுக்குப் போய் எப்படிச் சொல்வது. எதனாலோ அவனுக்கு கர்ணனுக்குச் சொல்ல வேண்டும் என்ற ஒரு தாபம் ஏற்பட்டது. அதை தணித்துக் கொள்ள முடியவில்லை. மெல்ல சவுக்கை சொடுக்கி ஒரு சிகப்பு நிற பூவைக் கிள்ளி, 'கிருஷ்ணா, எனக்குச் சொல்லத் தெரியவில்லை. அவனுக்குச் சொல்' என்று மறுபடியும் அவன் அந்தப் பூவை சொடுக்க அந்தப் பூ கிருஷ்ணர் மடியில் போய் விழுந்தது.

3

ஆஹா. எப்படிப்பட்ட கண்கள்! எவ்வளவு குறுகுறுத்த பார்வை! திரௌபதி அந்தப் பார்வை பார்த்தவனை நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

துரியோதனன் அவளையும் பஞ்ச பாண்டவர்களையும்தான் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தான். பஞ்ச பாண்டவர்களுடைய வேதனை என்ன, எவ்விதம் என்றுதான் ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தான். குறிப்பாக, பீமனுடைய முகத்தை குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். அர்ஜுனன் துவண்டு நடப்பதைப் பார்த்து கை தட்டி, விரல் நீட்டிச் சிரித்தான்.

துச்சாதனனுக்கு அண்ணனுடைய முகத்தை பார்த்துப் பார்த்து பயப்படவே நேரம் சரியாக இருந்தது. இன்னும் அவிழ்க்கவில்லையா என்று அதட்டி விடுவானோ என்று வேகமாக புடவையை உறுவுவதும்,



களைப்பதும் அண்ணன் முகத்தைப் பார்ப்பதும், பிறகு இன்னும் வேகமாகப் புடவையை இழுப்பதுமாக இருந்தான். அவன் பார்வை துரியோதனன் மீதே இருந்தது.

சபையில் உள்ள மற்றவர்கள் எல்லோரும் பார்வையை திருப்பிக் கொண்டார்கள். கர்ணன் எழுந்து சப்தமிட்டான். இது அடாத செயல். தவறான விஷயம். திரும்பி அவனைப் பார்த்தபோது, அவன் பார்வை துரியோதனன் மீது இருந்தது. இதை நிறுத்து என்று சொல்ல தவித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் இவன் பார்வை தான், குறுகுறுத்த பார்வைதான் எப்போது புடவை அவிழும் என்ற விரகத்தை கணக்கிட்டுக் கொண்டிருந்தது. இவள் மேனியை கண்களால் பருக காத்துக் கொண்டிருந்தது. அவள் இடுப்பை, விலாவை, முலைகளை, தோள்பட்டையை, கழுத்தை விருப்பத்துடன், வேகத்துடன் பார்ப்பதற்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த ராதேயன் என்கிற கர்ணன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் பல் கடித்தாள். என்ன திமிர்? ஒரு தேரோட்டிக்கு என்ன திமிர் என்று பல் கடித்தாள். அந்தப்புரத்து பெண்கள் தேரில் போகும்போது வாலிபனாய் இருக்கின்ற தேரோட்டியை விடமாட்டார்கள். பெண்களுக்கு தேரோட்டுகிறோம் என்பதாலேயே அந்தப் பெண்கள் மீது ஒரு பிடிப்பும், நெருக்கத்தால் ஒரு உரிமையும் அந்த வாலிபனுக்கு வந்துவிடலாம் என்ற எண்ணத்தில் தேரோட்டுபவனை கிழவர்களாக தேர்ந்தெடுப்பார்கள். கிழவர்கள் மனம் பக்குவப்பட்டவர்கள். இதெல்லாம் நமக்கு சரிவராது என்ற எண்ணத்தில் குதிரையின் மீதும், தேரின் மீதும், பாதையின் மீதும் கவனம் வைத்திருப்பார்கள். அசட்டுத்தனமான இளைஞர்கள்தான் நான் கவனமாக கொண்டு போய் சேர்த்து விடுவேன் என்று உளறுவார்கள். அந்த உளறுவதிலேயே பெண்களுக்குத் தெரியும் இவன் வழிகிறான் என்று. அப்படி உளறாமலேயே கர்ணன் வழிகிறான் என்று திரௌபதிக்குத் தெரிந்து விட்டது.

ஆனால் பஞ்ச பாண்டவர்கள் சொல்லச் சொல்ல, இவை

வாழைப்பழ ஜாம்

தேவையான பொருட்கள்:

பழுத்த பெரிய பச்சை வாழைப்பழம் - 6, அஸ்கா - 250 கிராம், முந்திரிப் பருப்பு - 10, திராட்சை 12, தேன் - 2 டேபிள் ஸ்பூன், கெட்டியான நெய் - 2 டேபிள் ஸ்பூன், பொடி உப்பு - 1 சிட்டிகை, ஏலக்காய் - 4.

செய்முறை:

முந்திரி, திராட்சை இரண்டையும் நெய்யில் வறுக்கவும். ஏலக்காயைப் பொடி பண்ணவும். வாழைப்பழம், முந்திரி, திராட்சை, அஸ்கா முதலியவற்றை மிக்சி, அல்லது அம்மியில் அரைக்கவும். தேன், ஏலப்பொடி, உப்பு மூன்றையும் அரைத்த சாமானில் போட்டுக் கலந்து, ஜாடி அல்லது பாட்டிலில் போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தால் கெட்டுப் போகாமலிருக்கும். பூரி, சப்பாத்தியுடன் சாப்பிட நன்றாக இருக்கும்.

கே.செல்லம்மாள்

மிளகுக் குழம்பு

தேவையான பொருட்கள்:

தனியா - 1 டேபிள் ஸ்பூன், வற்றல் மிளகாய் - 5, மிளகு - 20, பெரிய கோலி அளவு புளி, கறிவேப்பிலை, வெந்தயம் - கால் டீஸ்பூன், சீரகம் - 1 டீஸ்பூன், தக்காளிப்பழம் - 100 கிராம், பெருங்காயம், நல்லெண்ணெய் - 2 டீஸ்பூன், நெய் - 2 டீஸ்பூன், உப்பு தேவையான அளவு.

செய்முறை:

தனியா, மிளகாய் வற்றல், மிளகு, வெந்தயம், பெருங்காயம் முதலியவற்றைக் கொஞ்சம் எண்ணெய் விட்டுத் தனித்தனியாக வறுக்கவும். தக்காளிப் பழத்தைப் பொடியாக அரிந்து, கறிவேப்பிலையைச் சேர்த்து வதக்கி எடுக்கவும். புளி, உப்பு, வறுத்த சாமான்கள் எல்லாவற்றையும் சேர்த்து மசிய வெண்ணெய் போல் அரைக்கவும் கற்சட்டி அல்லது ஏதாவது (எவர்சில்வர் வேண்டாம்) பாத்திரத்தில் நான்கு கப் தண்ணீர் அரைத்துப் போட்டு அடுப்பில் வைக்கவும். மூன்று கப் அளவிற்குக் காய்ந்தவுடன் எடுத்து, சீரகத்தை நெய்யில் தாளிக்கவும்.

பச்சைப் பயறு கேசரி

தேவையான பொருட்கள்:

பச்சைப் பயறு - 2 டேபிள் ஸ்பூன், அவல் மாவு - 2 டேபிள் ஸ்பூன், தேங்காய் - 2 மூடி, அஸ்கா - 6 டேபிள் ஸ்பூன், கெட்டியான நெய் - 2 டேபிள் ஸ்பூன்.

செய்முறை:

கேசரி செய்வதற்கு முன்தினம் பயறைத் தண்ணீரில் நனைத்து வைக்கவும். தேங்காயைத் துருவி அரைத்து கெட்டியாகப் பாலெடுத்து வடிகட்டவும். தண்ணீர் அரை கப் விட்டுப் பயறை ஆவியில் குக்கரில் வைக்கவும். அவல் மாவை நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளவும். பயறு வெந்தவுடன் அவல் மாவைக் கலந்து அரைக்கவும். தேங்காய்ப் பால், அஸ்கா, அரைத்த பயறு முதலியவற்றைப் பாத்திரத்தில் விட்டு அடுப்பில் வைக்கவும். கெட்டியானவுடன் எடுத்து விடவும்.

அத்தனைக்கும் காரணம் கர்ணன்தான் என்பது புரிந்து போயிற்று. எதனால் என்று கேள்வி எழுந்தது. அதற்கு பஞ்சபாண்டவர்கள் பதில் சொல்லவில்லை. ஆனால் அவளுக்குப் புரிந்தது. கர்ணனுக்கு திரௌபதி மீது ஒரு கண். திரௌபதி வேண்டும் என்கிற பேராசை. அவளை அடைய வேண்டும் என்ற வெறி. முடியாது என்பதால் அவமானப்படுத்திப் பார்க்கலாம் என்கிற ஆசை.

துரியோதனன் மடையன்! யார் என்ன சொன்னாலும் பரவசமான நேரத்தில் அதை கடைப்பிடிப்பவன். 'துரியோதனா, இவள் உன்னுடைய மனைவியடா' என்று கர்ணன் சொன்னதும், துரியோதனன் இடது பக்க வேட்டியை வழித்து வெள்ளைத் தொடையைக் காட்டி ஓங்கி அடித்து வந்து உட்கார் என்று கட்டளையிட்டான். அந்த தொடையை பிளப்பேன் என்று பீமன் சபதம் செய்திருக்கிறான். அதில் வரும் ரத்தத்தை தன் கூந்தலில் பூசிய பிறகே அதை முடிப்பேன் என்று திரௌபதி சொல்லியிருக்கிறாள். ஆனால் இவனை, இவன் செய்த அயோக்கியத்தனத்தை மறந்து விட்டார்கள். அர்ஜுனன் மட்டும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறான். உன்னை அம்புகளால் துளைப்பேன் என்று சபதம் செய்திருக்கிறான். அதற்குக் காரணம், திரௌபதி அல்ல. அதற்குக் காரணம் சக போட்டியாளன். தனக்கு இணையாக வில்வித்தை தெரிந்தவன். ஒரு வில்வித்தை தெரிந்தவனை இன்னொரு வில்வித்தை தெரிந்தவன் வம்புக்கு இழுப்பது போல சமாசாரம்தான் அது. ஒரு மல்யுத்த வீரன் இன்னொரு மல்யுத்த வீரனை முகத்தைப் பெயர்த்து விடுவேன் என்கிற ஆவேசம்தான் அது. இங்கே திரௌபதிக்கு எந்த வேலையும் இல்லை. திரௌபதியை அவன் குறுகுறுத்துப் பார்க்கிறான் என்று பஞ்ச பாண்டவர்கள் எவருக்கும் தெரியவில்லை. ஆனால் திரௌபதிக்குத் தெரியும். ஒரு ஆண் தவறாக பார்க்கிறான் என ஒரு பெண்ணுக்குத்தான் தெரியும்.

ஒற்றைப் புடவையுடன் சபைக்குள் நுழைந்ததுமே புருஷர்கள் எழுந்து துவம்சம் செய்வார்கள் என்றுதான் எதிர்பார்த்தாள். மௌனமாக அமர்ந்திருக்கிறார்கள் என்றதும் உயிர் குலை அறுந்து போயிற்று. ஐய்யோ, இவர்களை நம்பியா என்ற எண்ணம் வந்தது. என்னை யார் காப்பாற்றுவார் என்ற எண்ணம் மேலோங்கியது. புருஷர்கள் அத்தனை

பேரும் கை விட்டு விட்டதும், யாருமே இல்லையே என்று தோன்றியது. மகா வீரர்கள், மகா ரதிகள் இவர்கள் இரண்டு பேர் இருந்தபோதும் காப்பாற்ற ஆள் இல்லாது போயிற்று.

என்னை வைத்து தருமர் சூதாடினார் என்று சொல்லப்பட்டது. புருஷன் சூதாடி என்று தெரியும். ஆனால் கட்டிய மனைவியை சூதுக்கு பணயமாக வைப்பானா? இது தானாக முன்வந்து செய்ததா? அல்லது வேறு ஏதேனும் எண்ணத்தில் செய்ததா? சகுனி சொல்லியிருப்பான். சகுனிதான் இவரை அவமானப்படுத்த, பஞ்ச பாண்டவர்களை அவமானப்படுத்த அப்படி ஒரு எண்ணத்தைக் கொடுத்திருப்பான்.

அதை இந்த கர்ணன் ஆமோதித்திருப்பான். ஆடு ஆடு என்று துரியோதனன் உத்தரவு இட்டிருப்பான்.

ஆனால், அந்த சபைக்கு பிருஷ்டை என்று தெரிந்த பிறகும் இழுத்து வரப்பட்டதுதான் கொடுமையிலும் கொடுமை. அப்படி இழுத்து வரப்பட்ட போதுதான் அந்த கர்ணன் குறுகுறுத்துப் பார்த்தான். அடேய், கருப்பையில் தங்கியது அல்ல இந்த உடம்பு. அக்னியில் வளர்ந்தது. ஹோமத்தில் மந்திரங்கள் சொல்லி நெய்யை ஆகுருதியாக்க அதில் கிளர்ந்தெழுந்த உருவம் இது. இந்த அழகு அக்னியின் சொரூபம். இந்த அழகு தகதகத்து எரிகின்ற அக்னியின் அழகு. அக்னி என்றால் சுடர் விடும் சிகப்பு அல்ல. அடியிலே கிடக்கின்ற கட்டைகளின் கருப்பு. கரிந்த கருப்பு. அதனால்தான் அவளுக்கு கிருஷ்ணனை என்று பெயர். சூடு மிக்கவள். உஷ்ணத்தில் பிறந்தவள். உஷ்ணம் மிக்கவள். பேச்சில் , பார்வையில், உடம்பிலும், உதட்டிலும், அடிவயிற்றிலும் ஒரு உஷ்ணம் எப்போதும் திரௌபதிக்கு இருக்கும்.

அதேபோல உஷ்ணம் கொண்டவன் கர்ணன். அவன் சூரியனின் அம்சமாம். ஆனால் கரிக்கட்டை அல்ல. சிகப்பு. கோதுமை உடைத்த நிறம். பார்வையில் கூர்மை. மூக்கில் கூர்மை. மீசையில் கூர்மை. விரல் நுனிகளில் கூர்மை. சிரிப்பில் கூர்மை.

அடேயப்பா, என்ன ஒரு கூர்மை கொண்டவன் என்று தோன்றும். உஷ்ணத்தை உஷ்ணமே சமனமாக்கும் என்பது வாக்கியம். இவள்

உடம்பு சூடு தாங்காமல் தருமபுத்திரர் விலகியிருக்கிறார். நகுல சகாதேவர்கள் அச்சப்பட்டு இருக்கிறார்கள். பீமன் மட்டும்தான் அந்த சூடு பொறுத்துக் கொண்டு அவளை இறுக்கிக் கொள்வான். அர்ஜுனன் ஓரளவு தாங்குவான். ஆனால் அவளை சமனப்படுத்துகின்ற சூடு இந்த பஞ்சபாண்டவர்களுக்கு இல்லை. ஒருவேளை கர்ணனுக்கு இருக்குமோ? அவள் மனம் கண நேரம் யோசித்து விட்டு அந்த எண்ணத்தை அழித்தது. சூரியனின் பிள்ளையல்லவா என்று எண்ணியது. மறுபடியும் அழித்தது. சே... ஏன் இப்படித் தோன்றுகிறது? அவன் எதிரி அல்லவா? என் புருஷர்களை அவமானப்படுத்தியவன் அல்லவா? என்னை இழிவுபடுத்தியவன் அல்லவா? இவன் என்ன என்னை சமனப்படுத்துவது. 'சீ... திரௌபதி, சும்மா இருடி' அவள் சினந்தாள். அவன் அடித்து நொறுக்கப்படுகின்ற காட்சியை மனதாற கண்டாள். அர்ஜுனன் சொல்லிச் சொல்லி அவனை துளைப்பதை, ரத்தம் பெருக அவன் கிடப்பதை விருப்பத்துடன் யோசித்தாள்.

கர்ணன் மட்டுமே விரும்பிப் பார்த்தான் என்று சொல்வதற்கில்லை. அதற்குப் பின்னால் ஒரு அரசகுமாரனும் விரும்பிப் பார்த்திருக்கிறான். அவனை பின்னால் துரத்திக் கொண்டு போய் அடித்து நொறுக்கி விட்டு வந்தார்கள். வந்து தேரில் ஏறு என்று அவன் கட்டளையிட்டதும், 'நீ வம்பை விலைக்கு வாங்குகிறாய், என் புருஷர்களைப் பற்றி உனக்குத் தெரியவில்லை' என்று சொல்லி அமைதியாக குன்றிலிருந்து கீழே இறங்கி தேரில் ஏறி அமர்ந்து கொண்டாள். அவன் ஆச்சரியப்பட்டான். என் மீது அத்தனை ஆசையா என்று வசனம் பேசினான்.

'சீ... தேரை ஓட்டடா! பின்னால் வந்து முதுகில் அடிப்பார்கள். அப்பொழுது வாங்கிக் கொள்' என்று இழுத்துப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்தாள்.

சிறிது தூரம் போனதுமே அவர்கள் வந்து விட்டார்கள். சூழ்ந்து கொண்டார்கள். வண்டியை நிறுத்தினார்கள். குதிரையை தெறிக்க விட்டார்கள். தேரை தரையில் சாய்த்து காலால் எட்டி உதைத்து உடைத்தார்கள். தேரில் ஏற்றியவனைக் கொண்டு போய் தரையில் தள்ளினார்கள். எழுந்து நின்றவனை கன்னத்தில் அடித்தார்கள். சரமாரியாக எழுந்திருக்க முடியாது அடித்தார்கள். அத்தனை பேரும்

63

கண்டக்டர்: "படில நிக்காதப்பா... பஸ் உள்ளதான் கடல் மாதிரி இடம் இருக்கே... உள்ள வா!"

மாணவன்: "எனக்கு நீச்சல் தெரியாதுங்க... நான் கரையிலேயே நின்னுக்கிறேன்!"

அடித்தார்கள். ஐந்து பேர் அடியைத் தாங்காமல் அவன் அலறினான். அவன் அலற அலற இவர்கள் இடையறாது அடித்தார்கள்.

திரௌபதி அவன் அழுவதைப் பார்த்து விட்டு வேறு தேரில் ஏறி பர்ணசாலைக்குப் போனாள். படி ஏறி உள்ளுக்குள் புகுந்து முகம் கழுவிக் கொண்டாள். வாய் கொப்பளித்தாள். பிறகு வாசலில் வந்து உட்கார்ந்து கொண்டாள். இனிப்பான பழங்கள் சாப்பிட்டதும் அந்த அரசகுமாரன் பேசியதும், அலட்டியதும் மறந்து போயிற்று.

ஆனால் கர்ணனின் பார்வை மட்டும் மறக்கவே இல்லை. அவனைப் பற்றி நினைப்பதை மட்டும் நிறுத்த முடியவில்லை. இன்று படுகின்ற அத்தனை துன்பங்களுக்கும் அவன்தான் காரணம். ஆனால் எடுக்கவோ, கோர்க்கவோ என்கிற விஷயம் அஸ்தினாபுரத்து எல்லா தெருக்களிலும் பேசப்பட்டு விட்டது.

பானுமதி எழுந்து நின்றதும், சூதிலிருந்து தப்பித்துப் போகத்தான், தோல்வியிலிருந்து தப்பித்துப் போகத்தான்! அவன் அவள் மீது

கை வைத்து உட்கார வைக்க, இடுப்பின் மீது விரல்கள் சிக்க, மேகலை அறுந்து முத்துக்கள் எங்கும் சிதறின. இறுக்கிச் சொருகி, கட்டியிருந்த புடவை விழுந்து விடாமல் இருக்க அவள் இறுக்க பிடித்துக் கொண்டு திகைத்து நிற்கும்போது, துரியோதனன் உள்ளே நுழைந்து விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் கர்ணனும், பானுமதியும் இருக்க, எடுக்கவோ, கோர்க்கவோ என்று துரியோதனன் சொல்லியிருக்கிறான்.

கர்ணன் அவ்வளவு முக்கியம். கர்ணன் இல்லாவிட்டால் பாரதப் போர் இல்லை. கர்ணன் இல்லாது போனால் துரியோதனனுக்கு அரசவையே இல்லை. ஆட்சியே இல்லை. அவன் ஆட்சியின் பாதுகாப்பு கர்ணன்தான். ராதேயன் என்கிற அந்த தேரோட்டிதான். அவனை அங்கதேசத்திற்கு அரசனாக்கினாலும், அந்த கிழட்டு தகப்பன் வந்து நின்றபோது இவன் ஓடிப் போய் பணிந்தது அவன் இனத்தைச் சொல்லிற்று. திரௌபதி உள்ளுக்குள் அவன் ஜாதியைச் சொல்லி இழிவுபடுத்தத் துவங்கினாள். வேறு எந்த வகையிலும் இழிவுபடுத்த முடியாததால், அவன் பிறந்த விஷயத்தை நினைவுபடுத்திக் கொண்டு பேசத் துவங்கினாள்.

‘என் இடுப்பில் கை வைத்து என் மேகலை அறுந்தால் விடுவேனா? செவிட்டில் அறைவேன். என் புடவையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு எட்டி உதைப்பேன். அதெல்லாம் கிடக்கட்டும். இவனோடு எவள் சூதாடுவாள்? சூதாட ஆட்களா இல்லை. ஐந்து புருஷர்களில் யாரைக் கூப்பிட்டாலும் சூதாட வருவார்களே, பிறகு இவனை எதற்கு கூப்பிடுவேன்?’ உள்ளுக்குள் இடையறாது இடையறாது திரௌபதி பொருமினாள். அவள் பொருமியதில் நல்லதும் இருந்தது. கெட்டதும் இருந்தது.

இந்த அத்தனை துன்பங்களும் ஆனந்தமாக மாறுவதற்குக் காரணம் ஸ்ரீ கிருஷ்ணன். அவள் கண் மூடி கை கூப்பி ஸ்ரீகிருஷ்ணரை ஸ்மரணை செய்தாள். மேலே மரத்திலிருந்து ஒரு முற்றிய இலை அவிழ்ந்து, பறந்து, சுழன்று வந்து அவள் உச்சி மண்டையில் தங்கியது. அவள் யாரோ தொடுகிறார்களே என்று திடுக்கிட்டாள். மெல்ல தடவிப் பார்த்தாள்.

இலை இருப்பது பார்த்ததும் புன்சிரிப்பு செய்தாள். 'மிக்க நன்றி கிருஷ்ணா...!' என்று இலையை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டாள். நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

நீ கொடுத்த அட்சய பாத்திரம் இல்லையென்றால் இந்த வனத்தில் உணவு எடுத்துக் கொண்டு இருக்க முடியாது. பீமனுடைய பசிக்கு எவ்வளவு போட்டாலும் ஆகாது. பீமனுடைய பசியறிந்து வயிறு வாடாமலும், மற்றவருக்கு வயிறு நிரம்பவும் ஆரோக்கியமான உணவு ஸ்ரீகிருஷ்ணர் பார்த்து கொடுத்தார். அவருடைய அக்கறையை பார்க்கும்போது ஸ்ரீகிருஷ்ணனுக்கும் கர்ணன் மீது கோபம் என்றுதான் தோன்றுகிறது. கர்ணனை அழிக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. துரியோதனனையும், துச்சாதனனையும் துவம்சம் செய்ய வேண்டும் என்றுதான் அவர் தீர்மானம் செய்து விட்டதாக எண்ணம் வருகிறது.

பஞ்ச பாண்டவர்கள் நல்லவர்கள் என்றும், கௌரவர்களை கெட்டவர்கள் என்றும் ஸ்ரீகிருஷ்ணனே தீர்மானம் செய்திருக்கிறார். அப்படியானால் கௌரவர் பக்கம் இருக்கின்ற கர்ணனும் கெட்டவன்தானே? தன் எண்ணம் சரிதானே என்று திரௌபதிக்குத் தோன்றியது. திரௌபதி கண்களை மூடிக் கொண்டாள். மூடிய கண்களுக்குள் கர்ணன் சிரித்தான்.

கர்ணன் கெட்டவனாக இருந்தால் என்ன? அவன் மீது எல்லோருக்கும் ஒரு ஈர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. எல்லோருக்குமா? எனக்கு மட்டுமா? முடிவுக்கு வராமல் திரௌபதி தவித்தாள். அஸ்தினாபுரத்தில் அஸ்திர வித்தை கற்றவனாம். மிகச் சிறந்த வில் வீரனாம். ஒருவேளை, அர்ஜுனனுக்கு ஆபத்து என்று வந்தால் அது துரியோதனனாலோ, துச்சாதனனாலோ வராது. துரோணராலோ, பீஷ்மராலோ வராது. கர்ணனால்தான் வரும் என்று பேசிக் கொள்கிறார்கள். கர்ணனாலா, எனக்கா? வரட்டும் பார்த்துக் கொள்கிறேன் என்று அர்ஜுனன் ஆவேசப்படுகிறான்.

கர்ணன் வள்ளலாம். யார் எது கேட்டாலும் உடனடியாக

கொடுத்து விடுவானாம். ஒருவேளை, தான் அவனிடம் கேட்பதாக இருந்தால் என்ன கேட்பது? திரௌபதி யோசித்தாள். மனம் துடைத்தாள். இவனிடம் போய் தான் என்ன கேட்பது. கேட்பதற்கு என்ன இருக்கிறது என்று நிமிர்ந்தாள். இடதும், வலதும் அலைந்தாள். அமர்ந்தாள். மறுபடியும் எழுந்து நின்றாள். ஓடைக்கு அருகே போய் மறைத்து முகம் துடைத்துக் கொண்டாள். கழுத்து துடைத்துக் கொண்டாள். ஏனோ அவளுக்கு அதிகம் வியர்த்தது.

ஆனால் வனத்தில் கூடல் கூடாது. அப்படித்தான் ஒரு நியமம் இருக்கிறது. மெல்ல பீமனை வேறு பக்கம் தள்ளிக் கொண்டு போய் இறுகத் தழுவி முத்தமிட்டு, தலையை தடவி புல் தரையில் தூங்க வைத்தாள். குழந்தைகளை பிரிந்திருந்த வேதனையைத் தீர்க்க அவள் பீமனை குழந்தையாக நினைப்பது வழக்கம். பீமனுக்கு அருகே படுத்துக் கொண்டு பரந்த மார்பை தட்டியபடி, தூங்கு நான் இருக்கிறேன் தூங்கு என்று முகத்தைத் தடவி, கன்னங்களில் முத்தமிட்டு, தொடைகளை அழுந்த பிடித்து விட்டு, எழுந்து உட்கார்ந்து முழங்கால்களை, ஆடுகால் தசைகளை, கால் விரல்களை இறுகப் பிடித்து விட்டு தூங்க வைப்பது வழக்கம். பஞ்ச பாண்டவர்கள் மூலம் பெற்ற குழந்தைகளை அரண்மனையில் விட்டு விட்டு புருஷர்களே கதி என்று வந்தாகிவிட்டது. அவ்வப்போது வயிறு குழையும். பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமென்று ஏக்கம் எழும். அவர்களை நெஞ்சோடு அணைத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணம் ஏற்படும். ஆனால் அவைகளை மற்ற எவரிடமும் காண்பிக்க முடியாது. இப்போது கூட பீமனை வனத்தின் ஓரத்திற்கு அழைத்துப் போய், புல் தரையில் படுக்க வைத்து அருகே அமர்ந்து, கதைகள் பேசி, பாட்டுப் பாடி தூங்க வைத்தாள். பெற்ற பிள்ளைகளை சீராட்டுவது போல சீராட்டினாள். அவளுடைய தாய்மையின் தவிப்பை தணித்துக் கொண்டாள்.

பீமன் நல்லவன். மிக மிக நல்லவன். குழந்தை போல உள்ளம் உடையவன். மிகப் பெரிய வலிவு உடையவனாயினும் அவன் மனது கல்மிஷம் இல்லை. ஆனால் இந்த கர்ணன், அந்தப் பார்வை, அதில் தெரிந்த குறுகுறுப்பு, காமம், எப்பொழுது புடவை விலகி நெஞ்சு தெரியும் என்கிற தவிப்பு. அப்பப்பா... ஏன் ஆண்கள் அப்படி

இருக்கிறார்கள் என்று வேகமாக திரௌபதி யோசித்தாள். அந்த யோசனையில் ஒரு ஆவலும் இருந்தது.

'என்ன பெண்மணியடி நீ? வனவாசம் நுழைந்ததும் ஒரு ரிஷி பத்தினியின் வீட்டிற்குப் போனாயே, ஞாபகம் இருக்கிறதா? வயது முதிர்ந்த கிழவி. நகைகளையும், புடவைகளையும், பாத்திர பண்டங்களையும் அள்ளி, 'எடுத்துப் போ எடுத்துப் போ' என்று உனக்கு கொடுத்தாளே... அந்தக் கிழவியை ஞாபகம் இருக்கிறதா? ஒரு இம்மி அழுக்கு அவள் மீது இருக்குமா? எப்படி தீச்சுடர் போல இருந்தாள்? எவரேனும் அவளைப் பற்றி இழிவு சொல்ல முடியுமா. எவரேனும் அவளை தவறாக நடத்த முடியுமா? திரௌபதி, உலகத்தில் உன்னைவிட பிரகாசமாய் சுடர் விடுகின்ற பெண்மணிகள் உண்டு. நீ அவ்விதம் இருக்கப் பழகு' என்று உள்ளுக்குள் கட்டளை போட்டுக் கொண்டாள்.

அவள் சுற்றி தன் குடும்பத்தைப் பார்த்தாள். அவரவர் அவரவர் உலகத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள். இதில் சகாதேவன்தான் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தான். என்ன பேசுகிறான், யாரோடு பேசுகிறான், என்ன செய்கிறான் இவன்? ஆவல் மிகுந்து அவனுக்கு அருகே போய் அமர்ந்து கொண்டாள். தோள் உரச உட்கார்ந்தாள்.

“என்ன செய்கிறாய் சகாதேவா?”

“பொன்வண்டோடு பேசிக் கொண்டிருக்கிறேன் திரௌபதி.”

“பொன் வண்டோடா, பொன் வண்டோடு பேச என்ன இருக்கிறது?”

“அதை குசலம் விசாரித்தேன். மனைவி நலமா, எங்கே இருக்கிறாள் என்று கேட்டேன் , இதோ வருகிறேன் என்று பறந்து போயிற்று. காத்திருக்கிறேன்.”

திரௌபதி அவனை வினோதமாகப் பார்த்தாள்.

“பொன் வண்டு தன் மனைவியை அழைத்துக் கொண்டு உன்னிடம் வருமா?”

“ஆமாம். வரும். காத்திருக்கிறேன்.”

“கடவுளே, இந்த வனம் மனிதர்களை என்னவெல்லாம் செய்து விடுகிறது. பாவம் சகாதேவா நீங்கள்.”

“கேலி செய்கிறாயா திரௌபதி. நான் ஒரு பாவமும் இல்லை. இன்னும் சற்று நேரத்தில் பொன்வண்டு தன் மனைவியோடு வரும்!”

“ஒரு மனைவியா, இரண்டு மனைவியா?”

“இல்லை. வண்டினம் பலதாரத் திருமணம் செய்வதில்லை. ஒரே மனைவிதான்.”

“அம்மி மிதித்து அருந்ததி பார்க்குமா, இல்லை வெறுமே அழைத்துக் கொண்டு வந்து விடுமா?”

“கேலி செய்கிறாய் திரௌபதி. நன்றாகப் புரிகிறது. இந்த வண்டு தன் துணையோடு வந்த பிறகு உன் முகம் போகும் போக்கை பார்க்க நான் ஆசையாக இருக்கிறேன்.”

“என் முகம் எப்படிப் போகும்?”

“துச்சாதனன் உன் தலைமுடியில் கை வைத்தபோது உன் முகம் எப்படிப் போனதோ அப்படிப் போகும்.”

திரௌபதி திடுக்கிட்டாள். விருட்டென்று எழுந்தாள். வேகமாக அந்த புல் தரையில் வேறொரு பக்கம் போய் நின்று கொண்டாள். ஆனால் சகாதேவன் கவலையேபடவில்லை.

ஒரு சிறிய குச்சியை நீட்டிக் கொண்டு காத்திருந்தான். அமைதியாக அசையாது உட்கார்ந்திருந்தான். வேகமான அசைவுகள் அந்த வண்டுக்கு தொந்தரவு செய்யக் கூடும் என்று நம்பிக்கையோடு காத்திருந்தான்.

ய்ய்ய்.... என்று காது பக்கம் சத்தம் கேட்டது. வந்து விட்டேன் என்று சொல்வது போல இருந்தது. இன்னொரு மெல்லிய சத்தமும் கேட்டது. ஒரு பெரிய வண்டு வந்து உட்கார்ந்தது. அடுத்தது அதை விட பெரிய வண்டு வந்து உட்கார்ந்தது.

முதல் வண்டு அவன் ஏற்கனவே சந்தித்த வண்டு. அடுத்த வண்டு புதிய வண்டு.

'இவள் தான் மனைவியா?' அவன் மனதிற்குள் விசாரித்தான்.

சிர்...ரென்று சிறகை அடித்து 'ஆமாம்' என்றது.

'உன்னைக் காட்டிலும் பலமாக இருக்கிறாளே.' மறுபடியும் மனதோடு பேசினான். மறுபடியும் வண்டு சிர்.. என்று சிறகடித்து தூங்கியது.

'வண்டினத்தில் அப்படித்தான். பெண்கள் பிள்ளைப் பெறக்கூடியவர்கள் அல்லவா? அதனால் அவர்கள் பெரிதாக இருப்பார்கள். வலுவாக இருப்பார்கள். சிலசமயம் ஆண்களை நசுக்கி கொன்று விடுவார்கள். ஆனால் என் மனைவி நல்லவள். உத்தமி. கணவனுக்கு ஒரு சிறு தீங்குகூட இழைக்காதவள்' என்று சொல்லி, தரையிலேயே வட்டமடித்தது. பெண் வண்டு அசையாமல் இருந்தது.

"அம்மா நலமா?" பெண் வண்டை சகாதேவன் விசாரித்தான். பெண் வண்டிற்கு புரியவில்லை. மனிதர் பேசுவது அதற்கு புதிதாய் இருக்கக் கூடும். எனவே விழித்தது. மறுபடியும் அந்த பெண் பொன் வண்டைப் பார்த்து,

"அம்மா நலமா?" என்றான்.

இப்பொழுது புரிந்து கொண்டது. சிர்... என்று சிறகை விரித்து ஒரு வட்டம் அடித்தது. அதற்கு 'ஆம்' என்று பொருள்.

"திரௌபதி"

மெல்லிய குரலில் சகாதேவன் கூப்பிட்டான்.

"என்ன?"

"பொன் வண்டு வந்து விட்டது."

"எங்கே?"

"என் எதிரே. ஆண் பொன்வண்டு பெண் பொன்வண்டை கூப்பிட்டு வந்து விட்டது."

"உங்களுக்கு வேறு வேலை இல்லையா?"

"இருந்தால் நான் ஏன் வண்டோடு பேசிக் கொண்டிருக்கிறேன். வேறு வேலை இல்லை என்பதால்தான் நான் வண்டோடும், வண்ணத்துப் பூச்சியோடும் பேசிக் கொண்டிருக்கிறேன்."

"ஓஹோ! வண்ணத்துப் பூச்சியோடும் பேசுவீர்களா?'

"ஆமாம்."

"என்ன பேசுவீர்?"

"பெருங் கூட்டமாக வரச் சொல்வேன்."

"எதற்கு?"

"விருந்து பரிமாற!"

"என்ன விருந்து?"

"தேன் தான்."

"எங்கிருக்கிறது தேன்?"

மேலே அந்த அடையிலிருந்து தேன் வரும். அந்த மூங்கில் குழலை

அதில் சொருகி விட்டால் அந்த மூங்கில் குழல் வழியாக கீழே தரை நோக்கி விரைவாக வரும். அந்த மூங்கில் குழலில் கடைசி பகுதியை ஓட்டை போட்டு விட்டால் தேன் நாலாபக்கமும் கொப்பளித்து நிற்கும். அந்த கொப்பளித்து இருக்கின்ற இடத்தைச் சுற்றி வண்ணத்துப் பூச்சிகள் உட்கார்ந்து கொள்ளும்.'

'நன்றாக இருக்கிறது கற்பனை.'

"இது கற்பனை அல்ல திரௌபதி, நிஜம்!"

'ஒரு வண்ணத்துப்பூச்சியும் காணோமே?'

'ஒன்று வந்தது. சொல்லி அனுப்பியிருக்கிறேன். கூட்டம் குறைவர கூடி வர வேண்டாமா?'

'ஐயோ பாவம்!'

'யார்?'

'நீங்கள்தான். நீங்களல்ல. நாம்தான்.'

'என்ன நமக்கு?'

'ஆளுக்கு ஒருவராக புத்தி பேதலித்து இருக்கிறோமே? இந்த வனவாசம் நம்மை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது பாருங்கள்!'

'அப்படி ஒன்றும் இல்லை. அஸ்தினாபுரத்தில் இருந்தால் இப்படி வண்ணத்துப்பூச்சியோடு பேச முடியுமா? இது ஒரு அற்புதமான காலம். மிக உயர்ந்த காலம். இயற்கையைப் பற்றி முற்றிலும் புரிந்து கொண்ட காலம். இயற்கையைப் புரிந்து கொண்டு நகரத்திற்குப் போவது நல்லது. அப்பொழுது நகர வாழ்க்கை இன்னும் சீராக இருக்கும்.'

'வண்ணத்துப் பூச்சியைக் காணோம்? இப்பொழுது என் கேள்வி அதுதான்!'

"வரும் நிச்சயம் வரும்."

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"என்ன?"

"வண்ணத்துப் பூச்சிகள்.?"

"எங்கே?"

"வருகின்றன!"

"எந்த இடத்தில்?"

ஒன்றிரண்டா, பலநூறா, ஆயிரமா. வண்ணத்துப் பூச்சிகள் கணக்கில் வாரா. கருப்பு நிற வண்ணத்துப் பூச்சிகள் வந்தன. வந்து வண்டுகள் உச்சியில் அமர்ந்தன. வண்டுகள் விர்ரென்று பறந்து போயின. இன்னும் நான்கைந்து வந்தன. சுற்றி சுழன்றன. சகாதேவன் தோளிலும், தலையிலும் உட்கார்ந்தன. இன்னும் சில வந்தன. இன்னும் சில வந்தன. ஒன்றிரண்டா, பலநூறா, ஆயிரமா? ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகளுக்கு மேல் இருக்கும். அவை அந்த குச்சி முழுவதும் நிரம்பி, கை முழுவதும் நிரம்பி வழிந்து தோள்பட்டை முழுவதும் அமர்ந்து, தலையில் அமர்ந்து,



இடது தோளில் அமர்ந்து, முதுகில் அமர்ந்து , முழங்காலில் அமர்ந்து....

திரௌபதி சந்தோஷத்தில் கூவினாள். மற்ற சகோதரர்கள் வந்து பார்த்தார்கள்.

'என்ன செய்கிறாய்.?'

'வண்ணத்துப்பூச்சிகளை விருந்துக்கு வரச் சொன்னேன். அவை பலதும் வந்து விட்டன.'

மூங்கில் குழாயை நான்கு கிளைகளுக்கு மேலேயிருந்த தேனடையில் சொருகினான். காத்திருந்தான். தேன் கீழே ஒழுக ஆரம்பித்தது. அந்த கடைசி வரை ஓட்டை போட்டிருந்ததால் அதன் எல்லா பக்கங்களிலும் பொங்கி வர ஆரம்பித்தது. வண்ணத்துப்பூச்சிகள் இடம் மாறின. சுருண்ட கையை நீட்டி குழல் வைத்து உறிஞ்சின. அமர்ந்தன.

'வண்ணத்துப் பூச்சியை வரச் சொல்வது எளிது. ஒரு குச்சியில் தேன் தடவி காத்திருந்தால் வண்ணத்துப்பூச்சிகள் அந்த வாசனைக்கு வந்துவிடும்.'

பீமன் கரகரத்த குரலில் கூறினான்.

'வேறு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'

பொழுது போகாத ஒய்ந்த குரலில் அர்ஜுனன் பீமனை கிளறினான்.

'ஒரு காண்டாமிருகத்தை வரச் சொல்ல முடியுமா?'

திரௌபதி விலகத் தயாரானாள். வண்ணத்துப்பூச்சி வந்தது போல காண்டாமிருகமும் வந்தாலும் வந்து விடும் என்று நம்பினாள். சகாதேவன் சிரித்தான்.

'வரச் சொல்லலாமே! சிந்திக்க வேண்டும் என்று அவசியமே

"நம் மன்னர் ராஜ தந்திரத்துல கில்லாடி!"

"எப்படி சொல்றே?"

"எதிரி நாட்டுக்கு தூது புறாவை அனுப்பி பறவை காய்ச்சலை பரப்பிட்டார்!"

இல்லை. மனதளவில் செய்தியை நாலாபக்கமும் அனுப்பினால் போதும். இங்கேதான் எங்காவது சுற்றிக் கொண்டிருக்கும். வந்தால் அதற்கு என்ன கொடுப்பது?"

"மரவள்ளிக் கிழங்கை பறித்து பரணையில் அடுக்கி வைத்திருக்கிறேன். அப்படியே சாய்த்து விடுகிறேன்."

பீமன் உற்சாகமாகச் சொன்னான். அவன் யானைக்கோ, காண்டாமிருகத்திற்கோ, காட்டெருமைக்கோ பயந்தவன் அல்ல. கொம்பு பிடித்து வேகமாக சுழற்றி ஒரு ஓரமாக போடுகின்ற வலிமை உள்ளவன். எனவே, மற்றவர்களும் கவலைப்படவில்லை. பீமனையே எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சரி, ஒரு காண்டாமிருகத்தை வரச்சொல்."

"சும்மா இருப்பா."

76

தருமபுத்திரர் மெல்ல அதட்டினார். எல்லோரும் அவரை திரும்பிப் பார்த்தார்கள்.

'திரௌபதி பயப்படப் போகிறாள்.'

'உண்மையில் உங்களுக்கு பயமாக இருக்கிறது. அதனால்தான் திரௌபதி பயப்படப் போகிறாள் என்று சொல்கிறீர்கள். திரௌபதிக்கு எந்த பயமும் இல்லை. காண்டாமிருகம் வரட்டும். உண்டுவிட்டு போகட்டும்.'

பீமன் சாதாரணமாகச் சொன்னான். தன்னுடைய தம்பியால் ஒரு காண்டாமிருகத்தை இந்த புல்மேட்டிற்கு வரவழைக்க முடியுமா என்பதுதான் அவன் கேள்வியாக இருந்தது.

வண்ணத்துப்பூச்சிகளை பார்த்துக் கொண்டே சகாதேவன் தன் மனதை காடுகளில் துழாவினான்.

இந்த மேடு அல்லாது அடுத்த மேட்டில் ஒரு சரிவு தாண்டிய மேட்டில் ஒரு ஒற்றை காண்டாமிருகம் நின்று கொண்டிருந்தது. எதெல்லாம் எதிர்படுகின்றதோ அதையெல்லாம் கடித்து உண்டு கொண்டிருந்தது.

அவன் காண்டாமிருகத்தைத் தொட்டான். முதுகில் அடித்தான். திரும்பி காண்டாமிருகம் பார்த்தது. வா என்று அழைத்தான். காண்டாமிருகம் எங்கு போகிறோம் என்று தெரியாமல், ஏதோ ஒரு சக்திக்கு கட்டுப்பட்டது போல வேகமாக, துள்ளலாக அவர்கள் இருந்த இடம் நோக்கி ஒரு குலுங்கலோடு ஓடி வந்தது.

மிருகம் வருவதை அர்ஜுனன் உணர்ந்தான். சட்டென்று வில்லை மடித்து நாண் ஏற்றினான். ஒருவேளை, வம்பு செய்தால் சொருகி விடலாம் என்று நினைத்தான். ஆனால் சகாதேவனுக்கு விருப்பம் இல்லை. அர்ஜுனனை அங்கேயே நிற்க வைத்தான்.

'வரச்சொல்லி விட்டு அம்பு தொடுத்தால் என்ன அர்த்தம்? சாதாரணமாக இருங்கள்!'

11

'மேலே பாய்ந்து விட்டால்...?'

'அதுதான் மரவள்ளிக் கிழங்கு கொடுத்து அனுப்புகிறேன் என்கிறாரே, அது ஏன் பாயப்போகிறது?'

அவன் தன் மனதில் இருக்கின்ற தடையை நீக்க, எங்கோ முக்கியமான வேலை இருப்பது போல காண்டாமிருகம் அவர்களை நோக்கி வந்தது. புற்களை மிதித்துக் கொண்டு வந்தது. சிறிய செடிகளை உடைத்துக் கொண்டு வந்தது. சட்டென்று அந்தப் புல்வெளியின் விளிம்பில் ஒரு புதருனூடே நின்று அவர்களை உற்றுப் பார்த்தது.

அதன் வலிமையை பீமன் கண்டு கொண்டான். வேகமாக நகர்ந்து பாணை அப்படியே பெயர்த்து எடுத்தான். மரவள்ளிக் கிழங்கை நடு புல்வெளியில் கொட்டினான். காண்டாமிருகம் முன்னேறிற்று. மூக்கிலிருந்து நீர் வழிந்தது. உதடு விரித்தது. சிரித்தது போல் இருந்தது. காலை உதறியது. பின்னடைந்தது. வேகமாக முன்னேறி மரவள்ளிக் கிழங்கில் வாய் வைத்தது. அசைத்து உண்டது. நிமிர்ந்து எல்லோரையும் பார்த்தது. இலைகளுடன் கூடிய மரவள்ளிக் கிழங்கை பீமன் ஆதுரத்துடன் நீட்டினான். கீழே கிடந்ததை விட்டு விட்டு காண்டாமிருகம் முழுச் செடியோடு சுவைத்து உண்டது. வாய் கடையோரம் பால் வழிந்தது.

'நல்ல பசி போலும்.'

அர்ஜுனன் சொன்னான்.

'காண்டாமிருகத்திற்கு எப்போதும் பசி. அது இன்னொரு பீமசேனன்' என்று தருமர் சொன்னார்.

அவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். அந்தச் சிரிப்பை கேட்டு காண்டாமிருகம் மிரண்டது. மெல்ல பின்னடைந்தது.

'சிரிப்பு பழக்கமில்லாத மிருகம் சிரிப்பைக் கேட்டதும் மிரள்கிறது' என்று சகாதேவன் சொன்னான்.

"நீ ஏன் இந்த மாதிரி மிருகங்களை வழிக்குக் கொண்டு வருகிறாய்?" சகாதேவனிடம் திரௌபதி விசாரித்தாள். அவளுக்கு அவளுடைய புருஷர்கள் அத்தனைபேருமே ஆச்சரியமான விஷயங்கள்.

"பசுக்களோடு பழகுகிறேன் அல்லவா? அவைகளுக்கும் மற்ற மிருகங்களுக்கும் சிறிதளவுதான் வித்தியாசம்!"

"ஒருவேளை சிங்கத்தை அழைத்திருந்தால் உன் பாடு கவலைக்கிடமாக போயிருக்குமோ?" பீமன் சொல்ல, மற்றவர்கள் சிரித்தார்கள்.

"இல்லையே! சிங்கக் கூட்டம் அருகிலேதானே இருக்கிறது!"

"இருக்கட்டும். அவை அங்கேயே இருக்கட்டும். நீ இங்கே கொண்டு வந்து கலவரம் மூட்டாதே." தருமர் வேகமாகச் சொல்ல, அதற்கும் சிரித்தார்கள்.

"இல்லை. இந்த வித்தையை நானும் கற்றுக் கொள்ள விரும்பு கின்றேன்."

சரியாகச் சொல். நீ என்ன செய்கிறாய்?" பீமன் கேட்டான்.

"எல்லா உயிர்களுக்குள்ளேயும் புத்தி என்கிற விஷயம் இருக்கிறது."

"ஆமாம். மூளை என்று அதற்குப் பெயர்."

"அந்த புத்தியில் நினைவுகளும், ருசிகளும், வலிகளும், காமமும் இருக்கின்றன. அவைகளைத் தாண்டி எல்லா உயிரினத்திற்கும் மனம் என்கிற விஷயம் உண்டு. மனிதர்களுக்கு மனம் இருப்பது போல மிருகங்களுக்கும் உண்டு. இவர்கள் மனிதர்கள் என்று தெரியும். இந்த மனிதன் கூப்பிட்டால் போகலாமா வேண்டாமா என்று ஒரு மிருகம் யோசிக்கிறதே அதற்குத்தான் மனம் என்று பெயர். நான் எந்த ஆபத்தும் தரமாட்டேன் என்பதாலேயே அந்த மிருகம் என்னை நோக்கி வருகிறது. அந்த மிருகத்திடம் நான் மனதால் பேசுகிறேன்."

79

"இல்லை. இன்னும் தெளிவாகச் சொல். உன்னுடைய மனம் எங்கே இருக்கிறது. காண்டாமிருகத்தின் மனம் எங்கே இருக்கிறது?"

"என்னைச் சுற்றி என் மனம். காண்டாமிருகத்தைச் சுற்றி காண்டாமிருகத்தின் மனம் இருக்கிறது. மூளை இருக்கும் இடம் இதோ இந்த இடம்."

அவன் அடித்துக் காண்பித்தான். அந்த அறையை காண்டாமிருகம் சாதாரணமாக வாங்கிக் கொண்டது. இடுப்பை இடித்து நகர்த்தினான். அது மெல்ல நகர்ந்தது.

"ஆனால் இந்த முகத்தைச் சுற்றி மனம் இருக்கிறது. என்னைச் சுற்றியும் மனம் இருக்கிறது. என்னைச் சுற்றியுள்ள மனதை நான் வெளியே உலவ விடுகிறேன். போ போய் எங்கேனும் காண்டாமிருகம் தேடு என்கிறேன். அவை கூர்மையாகத் தேடுகிறது."

"எனக்கு அப்படித் தேடத் தெரியவில்லையே?"

"பயிற்சி இல்லை. பழக்கம் இல்லை. இப்படி ஒருமுறை கூட எதையும் தேடி அனுப்பியதே இல்லை."

"நீ ஏன் இப்படி தேடி அனுப்புகிறாய்?" திரௌபதி கேட்டாள்.

"வேறு செய்வதற்கு என்ன இருக்கிறது. இந்த வனாந்தரத்தில் தன்னோடு பேசுவதற்கு பீமன் இருக்கிறான். தன்னோடு பேசுவதற்கு தருமர் முயற்சிக்கிறார். அம்போடு பேசுவதற்கு அர்ஜுனன் முயற்சிக்கிறான். இல்லாத குதிரைகளோடு பேசுவதற்கு நகுலன் முயற்சிக்கிறான். நான் என்ன செய்ய?"

"பசுக்களோடு பேசுவதுதானே?"

இல்லை. பசுக்கள் கிடைக்கும் வரை பசுக்களோடு பேசமாட்டேன். எல்லாமுமே பசுக்கள்தான். அத்தனை உயிரினங்களும் பசுக்கள்தான். வேறு வகையில் சொல்வதென்றால் அத்தனை உயிரினங்களும் பசுக்களைப் போல சாதுவானவைதான். தற்காப்புக்காகவோ, அல்லது

உணவிற்காகவோதான் அவை குரூர ரூபம் எடுக்குமே தவிர, மற்ற நேரங்களில் எல்லா மிருகங்களும் பசுவைப் போன்றவைதான். அப்படி பசுவைப் போன்ற தன்மை இருக்கும்போது நான் அவைகளை தொட்டு விடுவேன். என் மனதால் வருடிவிடுவேன். அவைகள் நான் சொன்ன பேச்சு கேட்கும்.'

'இந்த காண்டாமிருகத்திற்கு கோபம் வராதா?'

'அதுதான் மரவள்ளிக் கிழங்கு கொடுத்து விட்டீர்களே!'

'வேறு என்ன செய்தால் கோபம் வரும்?'

'இங்கு ஒரு நெருப்பு எரிய வைத்தால் கோபம் வரும்!'

'புரியவில்லையே?'

'ஒரு குவியல் சருகு சேர்த்து, கல் அடித்து சருகு பற்றவைத்து சட்டென்று ஒரு தழல் ஏற்படுத்தினால் இந்த காண்டாமிருகம் கோபமாகி விடும்!'

'என்ன செய்யும்? என்னைத் தாக்குமா?'

"இல்லை. தீயை தாக்கும். தீயை மிதித்து விட்டு ஓடும். காட்டுக்குள் தீ பரவக் கூடாது என்று இந்த மிருகம் கவலைப்படுகிறது. காடு அழிந்து விடக் கூடாது என்று இந்த மிருகம் அக்கறைப்படுகிறது. எனவே, இது ஒரு நல்ல மிருகம். சாதுவான மிருகம். பரோபகாரி" என்று அதன் முதுகில் அடித்தவாறு பேசினான். தடவிக் கொடுப்பதை விட அதன் தடித்த தோலில் அடிக்கிறபோதே அது சுகமாக கண்களை மூடிக் கொண்டது.

'இதமாகப் பேசி திருப்பி அனுப்பி விடப்பா. இந்த இடத்தில் இது பாந்தமாகவே இல்லை' என்று தருமபுத்திரர் சொன்னார்.

சகாதேவன் மெல்ல காண்டாமிருகத்தின் கழுத்தை கட்டிக் கொண்டு ஏதோ முணுமுணுத்தான். காண்டாமிருகம் காது விடைக்க,

[illegible] அவனைப் பார்த்தது. மெல்ல பின்னடைந்தது. திரும்பியது. அது [illegible]க்கல் ஒட்டத்தோடு புதர்களைத் தாண்டிக் கொண்டு ஒற்றை யடிப் பாதையைத் தேடி ஓடியது. வெகுதூரம் வரை டங் டங் என்ற சத்தத்தோடு காண்டாமிருகம் ஓடுவதை அவர்கள் உணர்ந்தார்கள்.

"எனக்கு கிளிகள் என்றால் கொள்ளை ஆசை. 'திரௌபதி ஆரம்பித்தாள்.

"சும்மா இரும்மா. இப்பொழுது வேண்டாம். நம்முடைய கவலையே நமக்கு பெரும் கவலையாக இருக்க, மற்ற உயிரினங்களை நமக்குள் கொண்டு வர வேண்டாம். நாம் விடுதலை பெற்றபின் இவைகளை ஆதரிப்போம். இப்போது அவைகள், அவைகள் இடத்திலேயே இருக்கட்டும். 'கட்டளை போல தருமபுத்திரர் சொல்ல, மற்றவர்கள் மௌனமானார்கள். மறுபடி அவரவர் வேலைக்குப் போனார்கள்.

தருமபுத்திரர் இப்போது கண் மூடி அமர்ந்து கொண்டார். பீமனும்

"ஏன் கபாலி, உன் மனைவியை விஷம் வச்சு கொல்லப் பார்த்தே?"

"அவ என்னை ரசம் வச்சு கொல்லப் பார்த்தா எஜமான்!"

திரௌபதியும் அருகருகே அமர்ந்து கொண்டு விதம் விதமான உணவு வகைகளைப் பற்றி பேச ஆரம்பித்தார்கள். அர்ஜுனன் மனம் குவித்து மந்திரம் சொல்லி, ஒவ்வொரு அஸ்திரமாக தரிசனம் செய்தான். அவைகளை வணங்கினான். நகுலன் தன் நீண்ட சவுக்கால் சிறிய பெரிய கற்களை நகர்த்திக் கொண்டிருந்தான். மண் மேட்டில் அமர்ந்திருந்த சகாதேவன் சரட்டென்று எழுந்து நின்றான்.

'அட, அவர் வருகிறார்' என்று எல்லோரையும் பார்த்தான். அவரவர் வேலையில் மூழ்கியிருந்தார்கள்.

சரி, வரட்டும். வந்தபிறகு கலைக்கலாம். இப்பொழுது அவரவர் உலகத்தில் அவரவர் இருக்கட்டும் என்று நினைத்தான். அவர் வருகிற வழியில் அவன் இடுப்பில் கை வைத்துக் காத்திருந்தான்.

மலை உச்சியில் இருந்தபடி கண்களை சுருக்கி ஸ்ரீகிருஷ்ணர் அந்தப் புல்வெளியைப் பார்த்தார். அப்படி பார்க்க அவருக்குத் தெரியும். தருமர் கண்மூடி அமர்ந்து கிடப்பதும், பீமனும் திரௌபதியும் சல்லாபித்திருப்பதும், அர்ஜுனன் அஸ்திரங்களை மனதிற்குள் வணங்கியபடி இருப்பதும் , நகுலன் சிறிய கற்களை சவுக்கால் நகர்த்திக் கொண்டிருப்பதும் அவருக்குத் தெரிந்தது.

அவன் எங்கே? சகாதேவன். அவர் தேடினார். திடுக்கிட்டார். அவர் எந்த வழியில் உள்ளே வர வேண்டுமோ, அந்த வழியில் இடுப்பில் கைவைத்து அவன் நின்றிருந்தான். அவன் பிரச்னையானவன். அவர் வரவு அவனுக்குத் தெளிவாய் தெரிந்திருந்தது. அவன் மிகவும் பிரச்னையானவன். அவர் சிரித்தார். மற்றவர்களைப் பார்த்து கேலியாக சிரித்தது போல் அல்லாது இவனைப் பார்த்து மரியாதையாக சிரித்தார். கீழே இறங்கி ஓட்டமும் நடையுமாக அந்த புல்வெளியை நோக்கி ஓடிவந்தார்.

அவன் அவருக்காக அந்த புல்திட்டின் விளிம்பில் காத்துக் கொண்டிருந்தான். அவன் மனம் மிகப் பெரியதாக இருந்தது. அவனுடைய உருவத்தை விடவும் மிகப் பெரியதாக இருந்தது. அந்த பெரிய பரப்பில் சிறிய சலனம் ஏற்பட்டாலும் அவன் புரிந்து

கொண்டான். முட்டையிடுகிற பறவையை, குட்டி ஈனுகிற சிங்கத்தை, காலில் அடிபட்டு சிரமப்பட்டு நடக்கின்ற ஒட்டகச்சிவிங்கியை, மரம் ஏறினால் மூச்சு வாங்குகின்ற குரங்கை, இடையறாது தும்முகின்ற யானையை, வயிற்றுப் போக்கு நிறைத்த காட்டுக் குதிரையை அவன் மனிதில் இனம் கண்டு கொண்டான்.

பீமனும் திரௌபதியும் காட்டின் வேறு பகுதிக்குப் போனதும் இவன் மனமும் பின் தொடர்ந்து போயிற்று. திரௌபதியிடம் காமம் இல்லை. ஆனால் பீமனிடம் இருந்தது. திரௌபதி கண் கிறங்க இருப்பவனை தடவி மடியில் வைத்து, புஜங்களை, மார்பை தடவிவிட்டு குனிந்து அவன் கன்னத்தில் முத்தமிடுகிறபோது தன் குழந்தைகளை நினைத்துக் கொண்டாள். ஆனால் பீமனோ காமத்தில் தவித்தான்.

"கூடாது நண்பரே. நாம் ஒரு சோதனையில் இருக்கிறோமல்லவா." நிதானமாக தலை வருடி அவன் தூங்குவதற்கு ஏற்பாடு செய்தாள். இவை அனைத்தும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. தருமபுத்திரர் மனதுக்குள் ஆட்சி பரிபாலனம் செய்வதை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆயிரத்தோராவது முறையாக அம்பறாத் துணியிலிருந்து அம்புகளை எடுத்து, அந்த அம்புகளின் மீது அஸ்திரங்களை வைத்து அந்த அம்பை நிறகச் செய்து அந்த அஸ்திரத்தின் வலிமையை தடவிப் பார்க்கின்ற அர்ஜுனனை அவன் நன்கு அறிவான். நகுலன் குதிரை. அவன் மனிதர்களுக்கு கட்டுப்படுவதில்லை. மனிதர்களை அவன் கட்டியதும் இல்லை. மாறாய் விலங்குகளின் மீது மிகுந்த பிரியமுள்ளவனாய் இருக்கிறான். சகாதேவனுக்கும் பசுக்கள் மீதுதான் பிரியம். ஆனால் பசுக்களிலிருந்தும் வெளியே வரவும் அவனுக்குத் தெரியும். குதிரைகளிலிருந்து வெளியே வர, நகுலனுக்குத் தெரியவில்லை. மனிதர்களை முழுமையாக நேசிக்காதவர்கள் விலங்குகளை நேசிக்கிறார்கள். ஏனெனில் மனிதர்கள் சொன்ன பேச்சு கேட்கிறார்களோ இல்லையோ, விலங்குகள் நிச்சயம் சொன்ன பேச்சை கேட்கும் என்று மனிதர்களுக்கு ஒரு எண்ணம் உண்டு.

திரௌபதி ஆவலாதி உள்ளவள். அவளுக்கு கர்ணன் மீது கோபம் இருக்கிறது. அந்த கோபத்தால் அவன் மீது காதலும் இருக்கிறது. அது

இனம் தெரியாத உணர்வு. கிட்டத்தட்ட கர்ணன் மீது அத்தகைய ஒரு சினேக பாவம் சகாதேவனுக்கும் இருக்கிறது. ஏதோ ஒரு சிக்கல் நிகழ்ந்திருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். என்ன சிக்கல் என்பதை அவன் யோசித்தால் தெரிந்து கொள்வான். ஆனால் சிக்கல் என்பது மறைப்பதற்குத்தானே. அது மறைபொருளாக இருப்பதுதானே நல்லது. அப்படியே இருக்கட்டும் என்று அவன் அந்தச் சிக்கலை, சிடுக்கை அவிழ்க்காமல் விட்டு விட்டான்.

காண்டாமிருகத்தைக் கூப்பிடுவது ஒரு செயலே அல்ல. ஸ்ரீகிருஷ்ணன் வருகிறான் என்று தெரிகிறதே அதுதான் அற்புதம். அது இவனுடைய சாமர்த்தியம் மட்டுமல்ல. ஸ்ரீகிருஷ்ணன் தன்னை மறைத்துக் கொள்ளவில்லை. எப்படி காண்டாமிருகம் தன்னை மறைத்துக் கொள்ளவில்லையோ அப்படி ஸ்ரீகிருஷ்ணனும் தன்னை சகாதேவனிடமிருந்து மறைத்துக் கொள்ளவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் நினைத்தால் மறைத்துக் கொள்வான். யாருக்கும் தெரியாமல் மறைத்துக் கொள்வான். யாருக்கும் எதுவுமே தெரியாமல் மறைத்துக் கொள்வான். ஆனால் அவ்விதம் மறைக்காமல் ஸ்ரீகிருஷ்ணன் சகலரிடமும் இனிமையாய், இனிமையுள்ளவனாய், இதமுள்ளவனாய், இணக்கமுள்ளவனாய் இருந்தான். அதுதான் ஸ்ரீகிருஷ்ணனின் கல்யாண குணம். அவன் விஷ்ணு அல்லவா! பிரபஞ்சத்தின் வளர்ச்சி அல்லவா! பிரபஞ்சத்தின் அசைவு அல்லவா! துளி கூட பிழற்சி இல்லாத ஒரு சுழற்சி அல்லவா!

உன்னால் எப்படி இதைச் செய்ய முடிகிறது என்று குழந்தை போல திரௌபதி கேட்கிறாள். உண்மையில் இம்மாதிரியான குணம் மற்ற நால்வருக்குமே இருக்கிறது. ஆனால் ஒரு கம்பீரம் கருதி கேட்காமல் இருக்கிறார்கள். இது தங்களுக்கும் தெரியும் என்று அலட்டலாக நிற்கிறார்கள். மனம் மையத்தை பற்றிக் கொண்டிருந்தால் ,சுயத்தை பற்றிக் கொண்டிருந்தால் பரவாது. என் அழகு, என் வலிவு, என் கேசம், என் மனைவி, என் தேசம் என்று இருந்தால் மனம் பரவாது.

தருமருக்கு மையம் அவருடைய தேசம். அர்ஜுனனுக்கு மையம் அவன் அழகு. பீமனுக்கு மையம் அவன் உடல் பலம். நகுலனுக்கு

மையம் அவனுடைய குதிரை சாமர்த்தியம். திரௌபதி மையத்தில் மையமாக பல மையங்களின் அடக்கமாகத் திகழ்கிறாள். அவளுக்கு கர்ணனை கொல்ல வேண்டும். அதேசமயம் அந்த கர்ணன் ஏன் அப்படிப் பார்த்தான் என்று தெரிய வேண்டும். அதேசமயம் அவளுக்கு துரியோதனன் தொடையை பிளக்க வேண்டும். அதேசமயம் இப்போதே ஒரு அரண்மனையில் குடிபெயர்ந்து அந்தப்புரத்தில் ஆடை பறக்க நடைபயில வேண்டும். அவளுக்கு கிருஷ்ணனைத் தரிசிக்க வேண்டும். தரிசித்தவுடன் முகத்தை பொத்திக் கொண்டு ஓ..வென்று அழ வேண்டும். வந்தவரை வரவேற்று வாயாற புகழத் தெரியவில்லை. அழத்தான் தெரியும். அதற்குக் காரணம் மையம். தானே முக்கியம் என்கிற மையம்.

அந்த காண்டாமிருகம் தன் வயிற்றை மையமாகக் கொண்டிருக்கிறது. அந்த வண்ணத்துப் பூச்சிகள் தன் சிறகுகளை மையமாகக் கொண்டிருக்கின்றன. அந்தப் பொன்வண்டு தன் பெண் நட்பை அப்போது ஏற்படுகின்ற குறி விறைப்பை முக்கியமாக நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆண் பொன்வண்டிற்கு பெண் பொன்வண்டு வேண்டும். அதன் மீது ஏறி உட்கார்ந்து கொள்ள வேண்டும். அந்தப் பெண் பொன்வண்டு சிலிர்க்கின்ற போது தன்னுடைய குறியை உள்ளே செலுத்திவிட வேண்டும். பற பற என்று வற்புறுத்த வேண்டும். அந்தப் பெண் பொன்வண்டு பறக்க அதனோடே கண் சொருகி ஆனந்தமாக பறக்க வேண்டும். ஏதோ ஒரு இடத்தில் அந்தப் பெண் பொன்வண்டு சட்டென்று மரத்தின் மீது மோதி அந்த ஆணை குடை சாய்க்கும். ஆண் பொன்வண்டு மல்லாக்க விழும். மிருதுவான அதன் மார் மீது பெண் பொன்வண்டு தன் கூரிய கொடுக்கை செலுத்தி கிழித்து உள்ளுக்குள் இருக்கின்ற சாரை உறிஞ்சும். வெறும் கூடை விட்டு விட்டு போகும். இதுதான் வாழ்க்கை. குறியே கூடலே முக்கியம் என்ற ஆண் பொன்வண்டின் வாழ்க்கை. குறி இருக்கும்போது மையம் சிதறுவது உண்டு. குறி இருக்கும்போது குறி பிசகுவதும் உண்டு. மையமற்று பரந்து கிடந்தால், பிரபஞ்சம் முழுவதும் வியாபியாக இருந்தால் உனக்கு மரணமில்லை. இதுதான் ஸ்ரீகிருஷ்ணன் சொல்கிறான்.

என்னில் கலந்து விடு. என்னோடு சேர்ந்து விடு. என்னிடம்

சரணாகதி அடைந்து விடு என்று சொல்கிறான். அவன் பிரபஞ்சன். எங்கும் பரந்தவன். எங்கும் பரந்தவனிடம் மையமாகவா போய் சேர முடியும். எங்கும் பரந்தவனிடம் எங்கும் பரந்து போய் அப்போது நீயும் அவனும் ஒன்றாகிறாய் . நீரில் நீர் கலந்து விட்டால் பிரிவு ஏது. காற்றில் காற்று கலந்து விட்டால் பிரிவு ஏது. நெருப்பில் நெருப்பு கலந்து விட்டால் எது இரண்டானது. அவனோடு கலப்பதற்குப் பிறகு பிரிவு என்பதே இல்லை. கலக்கத்தான் இந்த உலகத்தில் எவருக்கும் தெரியவில்லை.

விதம் விதமாகச் சொல்கிறான். நானே சகலமும் என்கிறான். அதை கர்வமாக துரியோதனன் எடுத்துக் கொள்கிறான். இதை நானும் சொல்வேனே என்று நானே சர்வமும் என்கிறான். சிரிப்பாய் வருகிறது. துரியோதனை விட மிகப் பெரிய கர்வம் கர்ணன். நான் இருக்கிறேன் எதற்கு பயம் என்று சொல்கிறான். இந்தப் பேச்சுதான் உலகத்தினுடைய நியதியை குப்புறக் கவிழ்க்கிறவை. எல்லாவற்றையும் என்கிட்ட கொடு நான் பார்த்துக்கறேன் என்கிற குரு குப்பைத் தொட்டி. அது அழுக்குக் கூடம். புதைக்குழி. நானே சகலமும் என்பது வாக்கியம் அல்ல. அது ஒரு ஸ்திதி.

கிட்டத்தட்ட நூறு தப்படி தூரத்தில் அவர் வருவது தெரிந்தது. இவன் இடுப்பு வேட்டியை இறுக்க கட்டி சாஷ்டாங்கமாய் விழுந்தான். இரண்டு கைகளையும் அவரை நோக்கி கூப்பினான். அவர் வருகின்ற நிலத்தில் தன் நெற்றியை பதிய வைத்தான். இந்த பூமி அவருக்குச் சொந்தமானது. அதில் கிடக்கிறேன் என்று தன் வலிவு மொத்தமும் பூமியில் இறக்கி வெறும் கட்டையாய் தம்பகமாய் கிடந்தான். அருகே வந்து அவர் கால் விரல் நுனி, இவன் கை விரல் நுனியில் படும்வரை அப்படியே கிடந்தான்.

"சகாதேவா..."

எத்தனை அன்பு அந்தக் குரலில். எத்தனை வாஞ்சை அந்தக் குரலில்.

எத்தனை உண்மை அந்தக் குரலில்? எப்பேர்ப்பட்ட சத்தியம் இந்த

ஸ்ரீகிருஷ்ணர்!

எழுந்திருக்கலாமா? கூடாது.

"எழுந்திருடா."

துள்ளி எழுந்திருந்தான். மறுபடியும் கை கூப்பினான். நெற்றியில் மண். முகவாயில் மண். மூக்கு நுனியில் மண். நெஞ்சில் மண். வயிற்றில் மண். முழங்கால், கட்டை விரல்கள், முழங்கை எல்லாவற்றிலும் மண். ஸ்ரீகிருஷ்ணர் அருகே வந்தார். அவருக்கு அந்த கிடப்பு புரிந்து விட்டது. மெல்ல அருகே வந்து தன் மேல் துணியால் அவன் நெற்றி மண்ணை, முகவாய் மண்ணை, உடம்பு மண்ணைத் துடைத்தார்.

இத்தனை வேகமாக வந்திருக்கிறாரே. இவருக்கு வியர்க்க வேண்டுமே. இவருக்கு வியர்க்காது. இவர் பிரபஞ்சம் அல்லவா! இவர் காற்று அல்லவா! இவர் நீர் அல்லவா! இவர் பஞ்ச பூதங்களையும் ஆளுடை செய்பவரல்லவா. இவருக்கு வியர்க்காது. இவர் உடம்பு எடுத்திருக்கிறாரே தவிர, இவர் உடம்பானவர் அல்ல. இவர் இந்த உருவம் எடுத்திருக்காரே தவிர, இவர் இந்த உடம்பு மட்டும் அல்ல. கடவுள் என்பதின் மனித வடிவம் ஸ்ரீகிருஷ்ணன். இந்த முறை சகாதேவன் குனிந்து வணங்கினான். அவர்கள் எல்லோரும் வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தார்கள். இப்போது சகாதேவனுக்கு முந்திக்கு கொண்டு போய் அவரை தொட்டும், தழுவியும், முத்தமிட்டும் தங்கள் அன்பை தெரிவித்தார்கள். இழுத்து பிணைத்துக் கொண்டு சகாதேவனை பின்னுக்குத் தள்ளினார்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் சகாதேவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரம் அவர்களுக்கு உண்டான உபசாரங்களையும் செய்து கொண்டிருந்தார். அர்ஜுனன் தலையை தடவிவிட்டார். பீமனின் புஜத்தில் குத்தினார். தருமரை ஆலிங்கணம் செய்து கொண்டார். நகுலன் முகத்தை கையில் ஏந்தினார். திரௌபதியை இழுத்து அருகே நிற்க வைத்து தோளில் கை போட்டுக் கொண்டார். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதுவே உங்களுக்கு கிடைக்கிறது என்று சொல்லாமல் சொன்னார். அவர் சகாதேவனை தொடவில்லை. ஏனெனில் அவன் விரல் நுனியில் அவர் கால் நுனி

பட்டது, அவ்வளவே!

'சகாதேவா.'

'சொல்லுங்கள் கிருஷ்ணா.'

"யுத்தம் வரும் போலல்லவா இருக்கிறது."

"ஆமாம் கிருஷ்ணா."

'நிச்சயம் வந்து விடும் என்று தோன்றுகிறது சகாதேவா.'

'ஆமாம் கிருஷ்ணா'

'தவிர்க்கவே முடியாது என்று தோன்றுகிறது.'

'சரி கிருஷ்ணா.'

"என்ன சரி என்கிறாய்."

"வேறென்ன சொல்வது. தவிர்க்கவே முடியாது என்று நீ சொல்லிவிட்டால் அது தவிர்க்கவே முடியாது தானே?"

'கடைசியில் என் தலையில் பழியைப் போடுகிறாயா? நான் பதறிக் கொண்டு ஓடிவருகிறேன். நீ என்ன சாதாரணமாய் பேசுகிறாய்!"

'நீயாவது பதறுவதாவது? நாளை என்ன நடக்கும் என்று தெரியாதவனுக்குத்தானே பதட்டம். நீ முக்காலும் உணர்ந்தவன். உனக்கு ஏதய்யா பதட்டம்?'

"இம்மாதிரி உயர்வாகப் பேசி எனக்கு இடைஞ்சல் செய்யாதே. நான் சொல்கிற விஷயத்தை நன்றாகக் கேள். யுத்தம் வரும்போல் இருக்கிறது. என்ன சொல்கிறாய் அர்ஜுனா?'

"வரட்டும். யுத்தம் வரவேண்டும் என்றுதானே எதிர்ப்பார்க்கிறோம். அடித்து நொறுக்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுகிறோம்.

துரியோதனனை கதறக் கதற சாகடிக்க வேண்டும் என்பதுதானே என் விருப்பம்?"

"தருமரே, என்ன சொல்கிறீர்?"

"வேறு வழியில்லையே கிருஷ்ணா. அவர்கள் அழிந்தால்தான் நமக்கு அஸ்தினாபுரம். அவர்கள் இருக்கும் வரை நமக்கு அஸ்தினாபுரத்தில் நுழையக் கூட இடம் இல்லையே. நம்மை வரவேற்று யாரும் உபசரிக்க மாட்டார்களே? எனவே அவர்களை அகற்றிவிட்டு நாம் உள்ளே நுழைய வேண்டும். துர்கந்தம் வெளியே போக வேண்டுமென்றால் வாசனை சந்தனம் உள்ளே போகவேண்டும். வாசனை சந்தனம் உள்ளே புகுகின்ற வழிதானே யுத்தம்!"

"ஆமாம் சரியாகச் சொன்னாய். யுத்தம் வரும்போல் இருக்கிறது. என்ன சொல்கிறாய் பீமா?"

"அதைவிட பேரானந்தம் உலகத்தில் என்ன? நான் எதற்கு உரு எடுத்திருக்கிறேன். இதற்குத்தானே. இது திட்டமிட்டது என்று சொல்கிறார்கள். அந்தணர்களும் ரிஷிகளும் உன்னால் நடக்கிறது என்று சொல்கிறார்கள்.'

'என்னாலா... நான் எந்த பாவமும் அறியாதவன் பீமா!'

'நான் சொல்லவில்லை!'

பீமன் வேகமாகச் சொன்னான்.

"அந்தணர்களும் ரிஷிகளும் உன்னால் பூபாரம் தீரப் போகிறது. அதற்காகத்தான் என்கிறார்கள். என்னுடைய ஒரே கவலை...'

'என்ன?'

'நாங்கள் ஜெயிக்க வேண்டும்!'

அவர்கள் அனைவரும் வாய் விட்டு சிரித்தார்கள்.

"ஏன்? உன்னைப் பற்றி சற்று முன் உயர்வாகச் சொல்லிவிட்டு இப்போது நாங்கள் ஜெயிக்க வேண்டும் என்று சொல்கிறாயே. உனக்கு என்ன சந்தேகம்?"

"நீ கூட இருக்கிறாயே கிருஷ்ணா, அதுதான் சந்தேகம்!"

"அடப்பாவி! நான் என்னடா தவறு செய்தேன்?"

"நீ இடதும் போவாய், வலதும் போவாய். மேலும் இருப்பாய். கீழும் இருப்பாய். நீயே ஏதேனும் செய்து விட்டு ஒரு காரணம் சொல்வாய். நீங்களெல்லாம் தோற்றுவிட்டீர்கள், எதற்குத் தெரியுமா என்று நீட்டி முழக்குவாய். உன் விளக்கம் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் ஜெயிக்க வேண்டும். உன் வியாக்கியானம் முக்கியமேயில்லை. நாங்கள் வெற்றி பெற்று அஸ்தினாபுரத்தை ஆட்சி செய்ய வேண்டும்!"

"திரௌபதி. என்ன சொல்கிறாய்> யுத்தம் வரும் போல் இருக்கிறதே?"

"ஹா.. என் கூந்தலை முடிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்!"

"என்ன சொல்கிறாய்?"

"என் கூந்தல் இன்னும் பிரிந்தே கிடக்கிறது. அதை நான் ரத்தத்தால் நனைத்து அலசி மீண்டும் இறுக முடிந்து கொள்வேன். நறுமண தைலங்கள் பூசிக் கொள்வேன். நல்ல உடைகளை உடுத்திக் கொள்வேன். நல்ல உணவுகளை சாப்பிடுவேன். வயதாகி மரணம் வரையில் பட்டமகிஷியாய் அஸ்தினாபுரத்து அரசியாய் வலம் வருவேன். வலிமைமிக்க ஐந்து மகாரதர்களின் மனைவியாய் கம்பீரமாய் இருப்பேன்."

"ததாஸ்து. அவ்விதமே இருங்கள். நீ கடுமையாக அவமானப்பட்டவள் அல்லவா. உன் கோபம் நியாயமானதானே. உன் கோபம் நியாயமானது என்றால் நீ ஜெயித்துதானே ஆகவேண்டும்?"

"அதுமட்டுமல்ல கிருஷ்ணா, நீ எங்கள் பக்கம் இருக்கிறாய்!"

'அப்படியா?'

'இதென்ன கேள்வி அப்படியா என்றும் நீ என் பக்கம்தானே இருக்கிறாய்!'

"சற்று முன் என் பக்கம் இருக்கிறாய் என்று சொன்னாய். இப்பொழுது இருக்கிறாயா என்று கேள்வி கேட்கிறாய். நீ எந்த இடத்தில் இருக்கிறாய் திரௌபதி?'

திரௌபதி வெட்கப்பட்டாள்.

'நகுலா, நல்லவனே சொல். யுத்தம் வரும்போல் இருக்கிறது. என்ன செய்யலாம்?'

'நாங்கள் ஐவரும் மனைவியோடு வனம் போனதும், சபையில் பாஞ்சாலி அவமானப்பட்டதும், சூதில் சகலமும் தோற்றதும், சிறு வயதில் விளையாடும்போது பீமன் துரியோதனாதிகளை இம்சை செய்ததும், எங்கள் எல்லோரையும் விட அர்ஜுனன் வில் வித்தையில் நிகரற்று இருப்பதும், நிகரற்ற அந்த அர்ஜுனனுக்கு எதிராக கர்ணன் போய் துரியோதனிடம் சேர்ந்ததும் யுத்தம் வரும் என்ற விதியின் பாற்பட்டுத்தானே நடந்திருக்கின்றன. எனவே, யுத்தம் வரும்!'

'அதாவது நீ ஒரு கணிதம் போடுகிறாய். இதது இங்கிருந்து நகர்ந்தால் இதது இங்கிங்கு ஏற்படும் என்கிறாய்? '

'ஆமாம். அந்த கணிதம் துல்லியமானது?'

"நகுலா, துல்லியமானது என்று உலகத்தில் எதுவும் இல்லை. எதுவும் பிறழ்ச்சி அடையும். எதுவும் தளரும். எதுவும் குளறுபடியாகும்!'

'யுத்தம் வராது என்றா சொல்கிறாய்?'

அர்ஜுனன் பதற்றமானான்.

'இல்லை. யுத்தம் வரும் என்றுதான் நான் பயப்படுகிறேன். இந்த யுத்தத்தைத் தவிர்க்க வேண்டுமே என்று ஆசைப்படுகிறேன். திரௌபதி ஏதோ உன் தலைமுடியை முக்கியமாக எண்ணி நூற்றுக்கணக்கான வாலிபர்களை கொல்லப் போகிறாய். பல பெண்களை விதவையாக்கப் போகிறாய். பல குழந்தைகளுக்கு தகப்பன் இல்லாது செய்யப் போகிறாய். இந்த பூமியை சுடுகாடு ஆக்கப் போகிறாய். உன்னுடைய ஒருத்தி தலைமுடிக்காக லட்சோப லட்சம் வீரர்கள் மடியப் போகிறார்கள். இது நியாயமா. போ. போய் நீரில் மூழ்கி தலையை முடிந்து கொண்டு வாயேன்.' நகுலன் கோபமாக பேசினான்.

'இல்லை. முடியாது. துரியோதனன் தொடையை பிளந்து அந்த ரத்தத்தை எடுத்து என் தலையிலே பூசி அதற்குப் பிறகுதான்... அதற்குப் பிறகுதான்..'

அவள் ஆவேசமானாள். கிருஷ்ணர் சிரித்தார். கிருஷ்ணரையே எந்த சலனமும் இல்லாமல் சகாதேவன் பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது கேள்வி மாற்றி கேட்கப்பட்டது.

'சகாதேவா!'

'சொல் கிருஷ்ணா?'

'யுத்தம் வராது போக என்ன செய்யலாம்?'

'சில விஷயங்களை செய்தால் யுத்தம் வராது போகலாம். பல இளைஞர்கள் உயிர் பிழைப்பார்கள். பல பெண்கள் விதவையாவதிலிருந்து தவிர்க்கலாம். பல குழந்தைகளுக்கு தகப்பன்கள் உயிரோடு இருப்பார்கள். பல விலங்கினங்களும் உயிர் வாழும். யுத்தத்தால் ஏற்படும் மண் புழுதி மாசால் பரதகண்டம் சிரமம் அடையாது.'

'நல்லது அழகாக பேசுகிறாய். என்ன செய்தால் யுத்தம் வராது போகலாம்?'

'பீமனையும் அர்ஜுனனையும் கொல்ல வேண்டும்.'

"சர்வர் வீட்டு
கல்யாணத்துக்குப்
போனது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"பந்தில
சாப்பிட்டவங்ககிட்டே
எல்லாம் கறரா டிப்ஸ்
கேட்டு வாங்கிட்டாரு!"

தருமர் திடுக்கிட்டார். பாஞ்சாலி ஐய்யோ என்று கூவினாள் பீமனும் அர்ஜுனனும் சகாதேவனை முறைத்தார்கள்.

'இவர்கள் இருவரையும் கொன்று விட்டு திரௌபதி தலையை மொட்டை அடிக்க வேண்டும். திரௌபதி தலையை மொட்டை அடித்து விட்டு உன்னை கட்டிப் போட வேண்டும்.'

திரௌபதியின் தலையை மொட்டை அடிக்க வேண்டும் என்றதும் பீமன் முஷ்டியை மடக்கினான். அர்ஜுனன் உடைவாளை உருவினான் அவர்களுக்குள்ளே சண்டை வரும்படியான வேகத்தை சகாதேவன் உண்டாக்கினான்.

அப்போதும் தருமர் 'என்னடா இது?' என்ற அலுப்போடு இருந்தார். நகுலன், யுத்தம் வந்தாலும் வராது போனாலும் தன் குதிரை ஓட்டம் நிற்காது என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஒரு செயலின் விளைவுகளுக்காக ஏங்குபவர்கள் சிலர். ஐய்யோ! இடையறாது ஒரு

செயலும், விளைவும் ஏற்படுகின்றனவே என்று அலுத்துக் கொள்பவர் சிலர். என்ன செயல், என்ன விளைவு நகர்ந்தாலும் நான் என் மனக்கூட்டுக்குள்ளே இருப்பேன் என்கிறவர் சிலர். தனக்காகவே இந்த செயல் நடைபெறுகிறது என்ற கூச்சலோடு இருக்கிறவர் சிலர். உலகம் பல்வேறு விதமான மனிதர்களைக் கொண்டது. லோகோ பின்ன ருசி.

'சரி, பிறகு?'

'உன்னை கட்டிப் போட்டால் யுத்தம் வராது கிருஷ்ணா.'

'ஹ ஹ ஹா... அற்புதம்! அர்ஜுனனையும், பீமனையும் கொன்று போடலாம். திரௌபதியை மொட்டை அடித்து விடலாம். என்னை கட்டிப் போட முடியுமா? எவனால் கட்டிப் போட முடியும்?'

'என்னால் கட்டிப் போட முடியும்!'

"சகாதேவா புரிந்து கொண்டு பேசுகிறாயா?'

"உன்னை முற்றிலும் அறிந்து கொண்டு பேசுகிறேன் கிருஷ்ணா'
'என்னை எதனால் கட்டிப் போடுவாய். எங்கே இருக்கிறது அந்தக் கயிறு'

'உன்னை கயிறால் கட்டிப் போட முடியுமா?'

'பிறகு?'

"மனதால் கட்டிப் போடுவேன்.'

"யாருடைய மனதால்?'

'என்னுடைய மனதால்! எனக்கு விஸ்வரூபன் என்று பெயர்.'

"சகாதேவா நீ விஸ்வரூபம் எடுப்பவன் என்பது தெரியும். நீ எங்கும் நிறைந்தவன் என்பது தெரியும். ஆனால் உனக்கு இணையாக உன்னைப்

போல் என்னாலும் வளர முடியும். நான் பிரமாண்டமானவன் சகாதேவா. என் மனமும் பிரமாண்டமானது. அதற்கு எல்லைகள் இல்லை. எல்லைகள் இல்லாததாலேயே அதுமனம் என்று அழைக்கப்படுகிறது.'

கிருஷ்ணர் இடுப்பில் கை வைத்து நின்றார். ஆனால் அந்த இருவருக்கும் அது தெரியவில்லை. ஏதோ ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் நினைத்தார்கள்.

சகாதேவன் கிருஷ்ணனின் தோளைப் பிடித்து அழுத்தினான். கிருஷ்ணரை விட உயரமாக இருந்தான். கிருஷ்ணர் இன்னும் வளர்ந்தார். சகாதேவன் அவரை விட ஆறு அங்குலம் அதிகமாக உயர்ந்தான். அவர் இன்னும் உயர்ந்தார். அவன் பிரமாண்டமானான். அவரை அசையாது அழுத்தினான். மனம் அசைந்தால் மூச்சு. மூச்சு அசைந்தால் மனம். அவன் மூச்சை பந்தனப்படுத்தினான். மூச்சை பந்தனப்படுத்தியதும் மனம் அசையாது போயிற்று. அசையாத மனம் வலிவு மிகுந்ததாய் இருந்தது. அது கடவுளுக்கு நிகராக இருந்தது. அது ஸ்ரீகிருஷ்ணனுக்கு இணையாக இருந்தது. அசையாது தான் என்ற தன்மையை அழித்தது.

இறுக்கிற்று. என் பிடிக்குள் அகப்படு என்று வன்முறை காட்டிற்று. எனக்கு கீழ்தான். நான் நினைத்தால் நீ கடவுள். நான் நினைக்காவிட்டால் நீ கடவுள் இல்லை. எனவே என் நினைப்புதான் முக்கியமே தவிர நீ முக்கியமல்ல. என் நினைப்பு உன் சக்தியையும் தாண்டியது. அப்பேற்பட்ட நினைப்பை எனக்குக் கொடுத்து விட்டு கட்ட முடியுமா என்று கேட்கிறாய். இந்த நினைப்பைக் கொடுத்தது நீ. எனவே நீ எனக்கு கட்டுப்பட்டே ஆகவேண்டும். எனக்கு நினைக்கத் தெரியாது இருந்தால் கிருஷ்ணா... உன்னை கட்டியிருக்க முடியாது.

அந்த காண்டாமிருகம் கட்டுமா? பொன்வண்டு கட்டுமா? வண்ணத்துப் பூச்சிகள் கட்டுமா. யானை கட்டுமா? பூனை கட்டுமா? குதிரை கட்டுமா? கரடி கட்டுமா? ஆனால் மனிதன் கட்டுவான். தாவர வகைகள் கட்டாது. நீரில் உள்ள மீன்கள் கட்டாது. ஊர்வன கட்டாது.

நச்சுப் பாம்புகள் கட்டாது. கிருஷ்ணா, மனிதன் கட்டுவான். அவன் முதுகெலும்பு நேராக நின்று விட்டது. இடுப்பு, முதுகு, கழுத்து, தலை ஒரே நேர்க்கோட்டில் இருக்கிறது. அது உச்சிக்கு பறக்கிற தன்மையை கொண்டிருக்கிறது. அது பூமியோடு சமன்பாடு கொண்டது அல்ல. பூமிக்கு இணையானது அல்ல. வானத்தை நோக்கி எப்பொழுது ஒரு பிரகிருதி வளரத் துவங்கி விட்டதோ அது கடவுளுக்கு இணையானது.

"கிருஷ்ணா, நீ மனிதனை கடவுளுக்கு நிகராகச் செய்தாய். கடவுளாக வேண்டும் என்று செய்தாய். பிறகு கட்டிப் போட முடியாது போகுமா?"

அவர்கள் ஒரு சொல்கூட பேசாது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணரால் அசைய முடியவில்லை. அவன் அவரைக் காட்டிலும் பெரிதாக இருந்தான். அவன் இடுப்பு, முதுகு, கழுத்து. தலை ஒரே நேர்க்கோட்டில் இருந்தது. அவன் கைகள் எந்த செயலுமற்றுத் தொங்கியிருந்தன. அவன் கண்கள் கூர்மையாக இருந்தன. அவன் நாசியிலிருந்து நூலிழை காற்று வெளியே வந்து உள்புகுந்தது. நூலாகி இருந்தது. உடம்பின் எல்லா தந்திகளும் முடிச்சுகளும் அமைதியாக இருந்தன. அவன் குண்டலினி முழுவதும் ஒரே நேர்க்கோட்டில் தகதகத்து இருந்தது. அவன் உச்சியிலிருந்து மிகப் பெரிய சுடர் வெளிப்பட்டது. அவன் உடம்பிலிருந்து மிகப் பெரிய தழல் பொங்கிற்று. அந்த தழலின் வேகத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தடுமாறினார்.

"விட்டு விடு சகாதேவா, விட்டு விடு. வேண்டாம். தழல் தகிக்கிறது. விட்டு விடு. உன் உச்சி சுடர் என்னை பயமுறுத்துகிறது. விட்டு விடு!" அவர் கொஞ்சம் வேகமாகப் பேசினார்.

"நிச்சயம் விடுகிறேன். உன்னைக் கட்டிப் போட்டு என்னால் ஆவதென்ன? எத்தனை நேரம் என்னால் கட்டிப் போட முடியும். அதுவும் எனக்குத் தெரியும். நீ விட்டு விடு என்று கெஞ்சுவது ஒரு மாயை. எனக்காக கெஞ்சுகிறாய். அதுவும் புரிகிறது. ஆனால் உன்னை

கட்டிப் போட முடியும் என்கிற ஒரு எண்ணத்தை நான் வளர்த்துக் கொண்டு விட்டேன். அதற்கு நீ காரணம் கிருஷ்ணா. நான் விட்டு விடுகிறேன். கீழ் இறங்கி விடுகிறேன். என் ஜாவாலையை குறைத்துக் கொள்கிறேன். எனக்கு ஒரு வரம் தரவேண்டும்.'

"என்ன?"

"இந்தப் போரில் நாங்கள் ஜெயிக்க வேண்டும். ஜெயிப்போம் என்று நீ சத்தியம் செய்து தரவேண்டும்."

கிருஷ்ணர் வலக்கையைத் தூக்கினார். விரைவாகத் தூக்கினார். சகாதேவன் தன் வலது உள்ளங்கையை அவர் முன்னே நீட்டினான். கிருஷ்ணனுடைய வலது கை சகாதேவன் வலது கையில் மெல்லப் பதிந்தது.

'நீங்களே ஜெயிப்பீர்கள். இது சத்தியம்' என்று அடிக்குரலில் கிருஷ்ணர் மிருதுவாகப் பேசினார். அது மட்டும் அங்குள்ள எல்லோருக்கும் கேட்டது. என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆனால், 'நீங்களே ஜெயிப்பீர்கள் இது சத்தியம்' என்ற கிருஷ்ணருடைய குரல் மட்டும் கேட்டது. அவர்கள் சந்தோஷமானார்கள். எதனால் என்று தெரியவில்லை? யாரால் என்று தெரியவில்லை? எப்படி என்று தெரியவில்லை? ஆனால் கிருஷ்ணன் சொல்லிவிட்டார். நீங்கள் ஜெயிப்பீர்கள் இது சத்தியம். நாங்கள் ஜெயிப்போம் என்று அவர்கள் குதூகலமாகி ஆடத் துவங்கினார்கள்.

சகாதேவன் கண்ணில் நீர் வழிய அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'கருணைக் கடலே, ஸ்ரீகிருஷ்ணா, என் அன்பனே. என் தோழா. என் கடவுளே. ஆபத்பாந்தவா, அனாதரட்சகா, எங்கும் நிறைந்த ஞானப் பொருளே, சர்வ வியாபி, விஸ்வ ரூபி, உன்னை வணங்குகின்றேன். நீ இங்கு வந்தது எனக்கு இந்த வரம் தருவதற்குத்தானே? நீ இங்கு வந்தது என்னை ஆசீர்வதிக்கத்தானே? வந்த காரியம் முடிந்தது. இனி வேறு ஏதேனும் பேசிவிட்டு விடைபெற்றுப் போ. அதுவரை உனக்கு

அருகே ஒன்றும் இல்லாமல் நான் உட்கார்ந்திருக்கிறேன். ஸ்ரீகிருஷ்ணா, உன்னோடு பேசுவதற்கும், சிரிப்பதற்கும், சல்லாபம் செய்வதற்கும், கொஞ்சுவதற்கும் பலபேர் இருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணா நான் வெறுமே உன்னை எந்த சடங்குகளிலும் ஈடுபடாமல், எந்த சம்பிரதாயங்களிலும் ஈடுபடாமல், எந்தவித பூஜைகளிலும் உன்னையே நினைத்து பார்த்துக் கொண்டிருப்பேன். கிருஷ்ண கிருஷ்ணா என்று கும்மி அடிக்கிறவர்கள் கும்மியடித்து விட்டுப் போகட்டும்.

உனக்கு பெரிய சிலாரூபம் வைத்து மாலை போட்டு கொண்டாடுகிறவர்கள் மாலை போட்டு கொண்டாடட்டும். நீதான் இங்கு எல்லாம் என்று உபன்யாசம் செய்கிறவர்கள் உரத்த குரலில் தொண்டை கமற பேசிக் கொண்டு போகட்டும். உன் பெயரைச் சொல்லி உண்பவர்களும், உறங்குபவர்களும் தங்கள் தொழிலை நடத்தட்டும். உன்னைப் போல் தங்களுக்கு வேடம் போட்டுக் கொள்பவர்கள், நடனமாடுபவர்கள் நடனமாடட்டும். நீயே சகலமும் என்ற கூக்குரல் இடட்டும்.

ஆனால் ஸ்ரீகிருஷ்ணா, இவை எவற்றிலும் நான் கலந்து கொள்ளாமல் உன்னையே பார்த்துக் கொண்டிருப்பேன். நீ சர்வ வியாபி. நானே நீ. நீயே அது. நீயே எல்லாம். எல்லாம் நீயே என்றால் நான் என்ன செய்து உன்னைக் கொண்டாட!

நீதான் பூ என்றால் ஒரு பூவை எடுத்து உன் மீது எப்படிப் போட? நீதான் விக்ரஹம் என்றால் எதனால் அர்ச்சனை செய்ய? நீதான் நைவேத்யம் என்றால் பிறகு எதை ஊட்ட? எதைத் தின்ன? நீதான் வஸ்திரம் என்றால் உனக்கு எதை அணிவிக்க? இங்கு எல்லாம் ஒன்று. எல்லாம் நீயே. சகலமும் ஸ்ரீகிருஷ்ணரே என்கிற நிலை வந்தபிறகு இயக்கம் நின்று போகிறது ஸ்ரீ கிருஷ்ணா. இங்கு இழுத்த இழுப்புக்கு நான் போகிறேன்.

இங்கு மனிதர்களெல்லாம் ஆண் பொன்வண்டைப் போல. கடவுள் என்ற பெண் பொன்வண்டின் முதுகில் உட்கார்ந்து கொண்டு தன்னை உன்னுள் செலுத்தி நீ பறந்து போக, உன் மீது

99

உட்கார்ந்து பற பற என்று சொல்லி , பிறகு முட்டி மோதி மல்லாக்க விழுகிறார்கள். உன்னாலேயே கொல்லப்படுகிறார்கள். உன்னாலேயே உண்ணப்படுகிறார்கள். மனிதர்களும் ஆண் பொன்வண்டுகளும் ஒன்றே. நீ பலமான பெண் பொன்வண்டு. ஆண் பொன்வண்டைப் போல பல மடங்கு பெரிதான பெண் பொன்வண்டு.

கிருஷ்ணா, உன்னிடம் போய் நாங்கள் தான் ஜெயிக்க வேண்டும் என்று வரம் கேட்டேனே. எப்பேர்ப்பட்ட முட்டாள். இதை நீ தீர்மானம் செய்து விட்டாய். அதற்காகத்தானே அத்தனை அசைவுகளும். ஆக, நீ செய்த அசைவுகளுக்கு இணையாகவே அதற்கு அடுத்தபடியாக அடுத்த செயலாகவே நான் இந்த வரத்தைக் கேட்டேன். எனவே, இந்த வரம் கொடுப்பதும் நீ , இந்த வரமும் நீ, இந்த வரம் வாங்குகின்ற நானும் நீ.'

அந்தி சாய்ந்தது. அவர்கள் ஜபதபங்களில் ஈடுபட்டார்கள். பீமன் நாலாபக்கமும் கொளுத்தினான். நடுவே கிருஷ்ணர் புல் மேட்டில் சாய்ந்து கொண்டார். அவரைச் சுற்றி பஞ்ச பாண்டவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். திரௌபதி அவருக்கு கால் பிடித்து விட்டாள். அவரவருக்கு தெரிந்த விதத்தில் கிருஷ்ணரைக் கொண்டாடினார்கள். கிருஷ்ணர் அந்த கொண்டாட்டங்களை மனமாற அனுபவித்தார். அன்றிலிருந்து இன்றுவரை உலகம் 'கடவுள்' என்கிற விஷயத்தை விதம் விதமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அந்தக் கடவுள் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் கடவுளை கட்டிப் போடல் என்பது ஞானியருக்கே முடியும். மனம் செம்மையாக இருந்தால்தான் செயல் தெளிவாக இருக்கும் .சகாதேவன் மனம் செம்மை மிக்கது. செழுமை மிக்கது. செம்மை என்பதுக்கு அர்த்தம், சிறு பிசிறுகூட இல்லாத முழுமை. இப்படிப்பட்டவரே கடவுள் என்பதை அறிவார். கடவுள் என்பதற்கு இணையாக இருப்பார். இவர்கள் கடவுளைக் கொண்டாடுவது முற்றிலும் வேறுவிதம். இந்த உலகம் போல் அல்லாது அது மௌனமான ஒரு பூஜையாய் நடைபெறும்.

(முற்றும்)